
விலை: ரூபா 20 பக்கங்கள் 36

# உதயன்

வானிலை
கூ.வெ. 30°C
கு.வெ. 29°C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 231 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 30, புதன்கிழமை 15.07.2015

சீனாவை உலுக்கிய சூறாவளி



பக். 12

## தபால் மூல வாக்களிப்புக்கு யாழில் 12,500 விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

அடுத்த மாதம் நடைபெறவுள்ள தபால்மூல வாக்களிப்புக்காக, யாழ். மாவட்டத்திலிருந்து 12 ஆயிரத்து 500 இற்கும் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளதாகத் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு அடுத்த மாதம் 3 ஆம், 5 ஆம், 6 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள், தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பிக்க முடியும். இதன் பிரகாரம், யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களில் 12 ஆயிரத்து 500 பேர் இதுவரை விண்ணப்பித்துள்ளனர்.

இதில் வெளிமாவட்டங்களுக்குரிய விண்ணப்பப் படிவங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை, விரைவில் உரிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், 3 ஆம் திகதி இடம்பெறவுள்ள தபால்மூல வாக்களிப்புக்காக இந்த மாதம் 24 ஆம் திகதி, அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# மஹிந்த மீண்டும் தோற்பார்

### அடித்துக் கூறினார் மைத்திரி



கொழும்பு, ஜூலை 15

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத்தேர்தலில் தோல்வியடைவது நிச்சயம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிபடத் தெரிவித்தார்.

நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மஹிந்த மீண்டும் தோற்பார் என்று கூறினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தான் நடுநிலை வகிப்பேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால பக்.24

## அரசியல் எதிர்காலம் மஹிந்தவுக்கு இல்லை



கொழும்பு, ஜூலை 15

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இனிமேலும் அரசியல் எதிர்காலம் கிடையாது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. பொதுத்தேர்தலில் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டால் கூட அவரால் அப்பதவியில் நீடிக்க முடியாது என்றும், தான் ஆட்சியில் இருக்கும்போது செய்த ஊழல் மோசடிகளுக்காக அவர் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. கேள்விநேரத்தின்போது ஊடகவியலாளர் பக்.24

## மஹிந்தவைத் தோற்கடிக்க குருநாகலில் சிவாஜிலிங்கம்

### சுயேச்சைக் குழுவில் களமிறக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

மஹிந்த ராஜபக்ஷவை, தமிழ் மக்களின் சார்பில் தோற்கடிப்பதற்காக, குருநாகல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவாகக் களமிறங்கியுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இதற்காக நேற்றுமுன்தினம் 18 தமிழ் வேட்பாளர்களை உள்ளடக்கி வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு இறுதி நாளான, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை குருநாகல் மாவட்டத்தில், சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவதற்கு சிவாஜிலிங்கம் கட்டுப்பணம் செலுத்தினார். அதன் பின்னர் வேட்புமனுவையும் தாக்கல் செய்தார்.

குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுவது தொடர்பில், சிவாஜிலிங்கத்திடம் கேட்டபோது; மஹிந்தவின் மீள் அரசியல் வரவைத் தோற்கடிக்க வேண்டும். தமிழ் மக்கள் சார்பாக, மஹிந்தவை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவே அவர் போட்டியிடும் தேர்தல் மாவட்டத்தில் நான் போட்டியிடுகின்றேன்.

மேலும், ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் தமிழ் மக்களை ஏமாற்றி விட்டனர். இவர்கள் ஏமாற்றியதற்கு எதிர்ப்பை வெளிப் பக்.24

## ஐ.தே.கட்சித் தலைமையில் வலுவான எதிரணி உதயம்

சிறிசேன ஆதரவாளர் பலர் அத்திசையில் நகர்வு
ராஜபக்ஷ வரவின் எதிரொலி

பக். 17

## ரணிலால் வடக்கில் பாதுகாப்பற்ற நிலை

### வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 15

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் தற்போது வடக்கில் பாதுகாப்பற்ற நிலைமை பக்.24

## ஐ.நா. குழுவின் வருகை பிற்போடப்படக் கூடும்

### பொதுத் தேர்தல் காரணமாக

யாழ்ப்பாணம், ஜூலை 15

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஐக்கிய நாடுகள் சபையின் குழு, அடுத்த மாதம் 3 ஆம் திகதி, இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்தக் குழுவின் நிகழ்ச்சித் திட்டம் இதுவரை வெளியிடப்படவில்லை. மேலும், நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதன் காரணமாக, பயணம் பிற்போடப்படக் கூடும் என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழு, அடுத்த மாதம் 3 ஆம் திகதி இலங்கைக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஓகஸ்ட் 3 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிவரை, இலங்கையில் தங்கியிருந்து அந்தக் குழுவினர் பக்.24

## உரித்தெடுக்க முடியாத தேர்தல் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

தற்போது யாழ்ப்பாணத்தில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை இலகுவில் அகற்ற முடியாமல் இருப்பதாகத் தெரிவித்த, தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள், கடந்த காலங்களைப் போன்று பசைகளைப் பயன்படுத்தாமல் வேறு எதனையோ இதற்குப் பயன்படுத்துவதன் காரணமாக, அவற்றை உரித்தெடுக்க முடியாமல் இருப்பதாகக் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. குறித்த கட்சிகளில் யாழ்ப்பாணத்தில் முதன்மை வேட்பாளர்களாகப் போட்டியிடுபவர்களின் படங்களுடன் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்து, மேற்குறித்த மூன்று கட்சிகளினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், அந்தக் கட்சிகளைக் குறிக்கும் சுவரொட்டிகளை ஒட்ட முடியாது. அதனடிப்படையில் குறித்த சுவ ரொட்டிகளை அகற்றும் நடவடிக்கைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். பக்.24

## குருநாகலே மஹிந்தவின் கடைசி அரசியல் களம்

### கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூலை 15

சொந்த மாவட்டத்தில் போட்டியிடப் பயந்து குருநாகலையில் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷவின் இறுதி அரசியல் களம் குருநாகலே என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ 58 லட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தார். அத்துடன், தான் பெற்ற 58 லட்சம் வாக்குகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பெற்ற வாக்குகள் அல்ல, தனக்குக் கிடைத்த வாக்கு எனக் கூறியிருந்தார். உண்மையில் பக்.24

## கொள்ளைக்காரர்களுக்கே ஐ.ம.சு.மு.வில் வேட்புமனு

### சாடுகிறார் எரான் விக்கிரமரட்ன

கொழும்பு, ஜூலை 15

நாட்டை சூறையாடியவர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும், போதைப் பொருள் வியாபாரிகளுக்குமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்புமனுவை வழங்கியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் உலக மக்களையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய விடயம் தான் கிரேக்க நாட்டின் கடன்சுமை பற்றிய தகவல்கள் பக்.24

# இலங்கை - கேரள இடையே சொகுசு படகுச் சேவை

கொழும்பு, ஜூலை 15
இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் இலங்கைக்கும் – தென்னிந்தியாவின் கேரள மாநிலத்துக்கும் சொகுசு வசதிகள் நிறைந்த படகுச் சேவையொன்று எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.
கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் ஹர்பிலன் படகுச் சேவைகள் தனியார் நிறுவனம் இந்தப் படகுச் சேவையில் ஈடுபடவுள்ளது. 2017 ஆண்டின் மே மாதம் வரையில் மேற்படி நிறுவனம் இந்தச்சேவையை நடத்தவுள்ளது. இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்படும் படகொன்றில் ஒரு தடவையில் 590 சுற்றுலாப் பயணிகளையும் பணியாளர் குழுக்களைச் சேர்ந்த 260 பேரையும் கொண்டு செல்ல முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(ற-22)

# கடற்பாசி வளர்ப்போருக்கு உபகரணங்கள்


யாழ்ப்பாணம், ஜூலை 15
நயினாதீவுப் பகுதியில் கடற்பாசி வளர்ப்புத் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், பயனாளிகளுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.
நோர்வே அரசின் நிதிப் பங்களிப்புடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிறுவனத்தினர் நயினாதீவு கடற்றொழிலாளர் அமைப்பின் கீழ் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு கடற்பாசி வளர்ப்புத் திட்ட அறிமுக நிகழ்வும் அவற்றுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் நயினாதீவில் இடம்பெற்றன.
நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட உதவிப் பணிப்பாளர் இரா.கணேசராஜா, யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், ஹேலீஸ் நிறுவன பணிப்பாளர் ரூவான் ராஜபக்ஷ, வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன், கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் ரமேஸ்கண்ணா, ஐ.நா.அ.பிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவன திட்ட முகாமையாளர் மொகமட் முசைன், மாவட்ட நீரியல் விரிவாக்கல் அலுவலர் மரியான் ஆகியோர் கலந்து கொண்டனர்.
தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பாசி வளர்ப்பு உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ற-9)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் கைது

முல்லைத்தீவு, ஜூலை 15
முல்லைத்தீவு நாயாறு கடற் பரப்பில் சட்டவிரோத வலைகளை பயன்படுத்தி மீன்பிடி தொழில் ஈடுபட்ட வர்கள் கைது செய்யப் பட்டுள்ளார்கள்.
முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பில் சட்டவிரோதவலைகளைப்பயன்படுத்தி மீன்பிடிக்கப்படுவது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதை அடுத்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களை கைது செய்யும் நோக்கில் நேற்று அதிகாலை நாயாற்று கடற்படையினரின் உதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட மீன்பிடி கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள குழுவினரால் கடலில் தேடுதல் நடத்தப்பட்டது. அதன்போது சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி 6 படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட 12 நபர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நாயாற்று கடற்படைத்தளத்தில் அழைத்துச் செல்லப்பட்டதுடன் அவர்களை பொலிஸார் மூலம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையில் முன்னெடுக்கப் பட்டுள்ளது.
அதேவேளை, கடலில் கைது செய்த போது கடற்றொழில் ஈடு பட்ட ஒருவர் கடலில் குதித்து தப்பும் நோக்கில் நீந்திச் சென்று வேறொரு படகின் உதவியுடன் கரையேறியுள்ளார்.
அத்துடன், கைது செய்யப்பட்ட மீனவர்கள் தப்பிச் சென்றவர் தொடர்பில் புல்மோட்டையில் உள்ள தமது உறவினர்களுடன்கைத்தொலைபேசி வாயிலாக தவறான தகவல்கள் வழங்கியதன் அடிப்படையில் புல்மோட்டையிலிருந்து சுமார் 300 படகுகளில் நாயாற்று பகுதிக்கு விரைந்த பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம், சிங்கள மீனவர்கள் கடற்படை முகாமைச் சுற்றி வளைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் மீன்பிடி நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.
சிறு நேரத்தின் பின் வேறு படகு மூலம் தப்பிக் கரையேறிய நபர் அவர்கள் முன் தோன்றவே அவர்கள் கலைந்து சென்றனர். (ற-102)

# மரம் முறிந்து விழுந்ததில் பாடசாலை கட்டடம் சேதம்

## மரத்தின் கீழ் கல்வி கற்கும் மாணவர்கள்



வலி.வடக்கு, ஜூலை 15
அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கல்வி கற்கும் கட்டடத்தின் மீது நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை இரவு மரம் முறிந்து வீழந்ததினால் கட்டடம் பெரும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. அதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.
குறித்த கட்டடம் பழைமை மிக்கது ஆதலால் வாகை மரத்தின் கொப்பு முறிந்து வீழ்ந்ததில் கூரை சேதம் அடைந்துள்ளதுடன் கட்டடமும் பெரும் வெடிப்புக்குஉள்ளாகியுள்ளது. கல்லூரியில் வகுப்பறைகள் வளப்பற்றாக்குறையாகக் காணப்படும் நிலைமையில் தற்போது மரம் முறிந்து வீழ்ந்து கட்டடம் சேதம் அடைந் துள்ளமையால் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் நேற்று மரங்களின் கீழ் கற்றல் நடவடிக்கைகளை முன் னெடுத்தனர். பாதிக்கப்பட்ட கட்டடத்தை வலிகாமம கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திர ராசா நேரில் சென்று பார்வையிட்டார்.
வடமாகாண கல்வித் திணைக்களம் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு கட்டடம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-86)



# பஸ் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

## போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக

யாழ்ப்பாணம், ஜூலை 15
போக்குவரத்து விதிமுறைகளைச் சீராக நடைமுறைப்படுத்துவதற்கும் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கும் உரிய முற்காப்பு நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.
யாழ்.வேம்படிச் சந்திக்கு அருகிலுள்ள ஓ.எல்.ஆர். தேவாலயத்துடன் இணைந்துள்ள புனித மரியாள் வித்தியாலய மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை சாரதிகளுக்கான பயிற்சிக் கருத்தரங்கும், பிற்பகல் 1.30 தொடக்கம் பிற்பகல் 3.30 வரை நடத்துநர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.
இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ள சாரதி, நடத்துநரின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்குமாறும் கலந்து கொள்வதை உறுதிப்படுத்துமாறும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாலை முகாமையாளர்களுக்கும் தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கத்தினருக்கு வடமாகாண போக்குவரத்து அமைச்சினால் கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்வது போக்குவரத்துச் சேவை ஒழுங்கு முறை நடைமுறைக்கு மிகவும் அத்தியாவசியமாக வேண்டப்படுகிறது. இந்தப் பயிற்சி நெறிகள் 5 மாவட்டங்களிலும் நடத்துவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்று மீன்பிடி, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார்.
(4)

# உடுவிலில் நாளை உபகரண கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 15
உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்பித்தல் உபகரணக் கண்காட்சி நாளை வியாழக்கிழமை காலை 9. 30 தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரும் கௌரவ விருந்தினராக ஆலோசகர் திருமதி சி.கமலராஜனும் கலந்து கொள்ளவுள்ளனர்.
(ற-4)









மது ஒழிப்பு மாதம் கடந்த மாதம் 9 ஆம் திகதி முதல் இம் மாதம் 8 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் பிரதேச செயலகம் மது ஒழிப்பு தொடர்பான விழிர்ப்புணர்வு வீதி நாடகத்தை அரங்கேற்றியது.
மது ஒழிப்பு பரப்புரை நடவடிக்கையாக குறித்த விழிப்புணர்வு வீதி நாடகத்தை மன்னார் பிரதேச செயலக வளாகத்திலும், மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்திலும் நடைபெற்றது. மன்னார் வங்காலை கிராமத்தைச் சேர்ந்த கலைஞர்கள் குறித்த நாடகத்தில் கலந்து கொண்டிருந்தனர்.
மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் குறித்த விழிப்புணர்வு வீதி நாடகம் இடம் பெற்றது.(ற-56)



பூநகரி சங்குப்பிட்டி கடற்கரையில் தனிமையில் உல்லாசமாகத் திரிந்த வெளிநாட்டுப் பறவை ஒன்று. தற்போது பூநகரி சங்குப்பிட்டியை அண்மித்த பகுதிகளில் வெளிநாட்டுப் பறவைகள் வருவது அதிகரித்துள்ளது. (ற-21)

# உதவிப் பணத்தைப் பெற அலைய வேண்டிய நிலை

## முதியோர்கள் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 15

70 வயதுக்கு மேற்பட்டோருக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவு பிரதேச செயலகங்கள் சிலவற்றில் உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை என்று முதியோர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தக் கொடுப்பனவை ஆரம்பத்தில் மாதாந்தம் ஐந்தாம் திகதி தொடக்கம் பெறமுடிந்தது என்றும் தற்போது கொடுப்பனவு- வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகவும் கடந்த மே மாதத்திற்குரிய கொடுப்பனவு கடந்த வாரமே வழங்கப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர். மாதாந்த கொடுப்பனவைப் பெறுவதற்கு பல நாள்கள் பிரதேச செயலகத்திற்கும் அஞ்சல் அலுவலகத்திற்கும் அலைய வேண்டியுள்ளது என்றும் அவர்கள் கவலையுடன் கூறினர். வயோதிப நிலையில் அஞ்சல் அலுவலகத்துக்கு நடந்து செல்ல முடியாத நிலையில் கொடுப்பனவு பெற ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திச் செல்வதாகவும் அங்கு கொடுப்பனவு வரவில்லையெனில் தமது நிலை பெரும் இக்கட்டாகி விடுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இக் கொடுப்பனவு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட புதிய சுற்றறிக்கைப் பிரகாரம் மாதத்தின் 15 ஆம் திகதி தொடக்கம் அடுத்த வரும் 7 வேலை நாள்களில் வழங்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். இது தெரியாத முதியோர்கள் முன்னைய சுற்றிக்கையில் குறிப்பிட்டுள்ள பிரதி ஐந்தாம் திகதி தொடக்கம் பிரதேச செயலகத்திற்கு வருகை தருவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் முதியோர் விசேட கொடுப்பனவு தொடர்பான கட்டுநிதி மாகாண சமூக சேவைகள் திணைக்களம் தமக்கு மாதாந்தம் அனுப்பி வைத்ததும் உடனடியாக அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.ஆனால் சில வேளைகளில் தம்மால் கோரப்படும் தொகையை விட குறைந்த அளவு கட்டுநிதி வழங்கப்படுவதால் சில அஞ்சல் அலுவலகங்களுக்கு அந்த மாதம் அனுப்பவேண்டிய கொடுப்பனவை வழங்கமுடியாத நிலையில் அடுத்த மாத கட்டுநிதி வரும்வரை காத்திருக்க வேண்டியுள்ளது. இவ்வாறான தாமதங்களினால் உரிய வேளையில் முதியோர்களுக்கான கொடுப்பனவு வழங்க முடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## தேர்தல் விதிமீறல்: 16 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 15

தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் இதுவரை 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. வடக்கில் கைது செய்யுமளவுக்கு முறைப்பாடுகள் எதுவும் நேற்றுவரை கிடைக்கப்பெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் தமக்கு 23 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்டமை, வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை, வாகனங்களில் வேட்பாளர்களின் சுவரொட்டிகள் காட்சிப் படுத்தப்பட்டமை தொடர்பில் நேற்றுமுன்தினம் மாத்திரம் நான்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எனினும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களுக்கு அரச சொத்துக்கள் பாவனை உள்ளிட்ட தேர்தல் விதிமுறைகள் தொடர்பில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இத்தகைய தேர்தல் வன்முறைகள், விதிமுறை மீறல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குத் தேர்தல் நிறைவடையும் வரை பிணை வழங்க முடியாது என்றும் சில வேளைகளில் வாக்களிக்கும் அனுமதியும் வழங்கப்படாது என்று யாழ். மேல்நீதிமன்று தீர்ப்பு ஒன்றில் ஏற்கனவே தெரிவித்திருந்தமை தெரிந்ததே. (ற-4)

# வடபகுதியில் 21 தேர்தல் விதிமீறல்

## சடுதியாக அதிகரித்துள்ளது என கபே அமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

அரச சொத்துக்களைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் வடக்கில் சில நாள்களில் 21 ஆகப் பதிவாகியுள்ளது. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே இதனைத் தெரிவித்துள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் வரை இவை தொடர்பில் வடக்கில் 6 முறைப்பாடுகளே பதிவாகியிருந்த நிலையில் தற்போது அந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுவரை சட்ட விரோத தேர்தல் பரப்புரைகள் தொடர்பில் 5 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவ்வாறு யாழ். தேர்தல் தொகுதியில் 4 முறைப்பர்டுகளும் வன்னித் தொகுதியில் ஒரு முறைப்பாடும் ப்திவாகியுள்ளது.

அரச சொத்துக்களைத் தேர்தலில் பயன்படுத்துதல், பொதுச் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பில் யாழ்.தேர்தல் தொகுதியில் 12 முறைப்பாடுகளும் வன்னித் தொகுதியில் 4 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் அவ்வாறான முறைப்பாடுகள் நேற்றுவரை 6 ஆகப் பதிவாகியுள்ளன. நாடளாவிய ரீதியில் சட்ட விரோத தேர்தல் பரப்புரைகள், சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பில் 190 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதேவேளை தேர்தல் வன்முறைகள் தொடர்பில் நேற்றுவரை 17 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதன்படி கபே அமைப்பில் முறைப்பாடுகள் தொடர்பில் நேற்றுவரை 207 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று கபே தெரிவித்துள்ளது. (ற-4)

# டிப்பர் - ஓட்டோ விபத்து; மடுவில் இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 15

மன்னார் மடுச் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

மன்னார் புதுக்குளம் உயிலங்குளத்தைச் சேர்ந்த குணசேகரம் டிவேசன் (வயது 22) என்பவரே உயிரிழந்தார். ஓட்டோவில் பாண் விற்பனை செய்துவரும் குறித்த இளைஞன் மடுச் சந்தியில் செல்லும்போது ஓட்டோவும் டிப்பரும் மோதி விபத்து நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.


காயமடைந்த அவர் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுப் பிற்பகல் உயிரிழந்தார். விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் குறித்த டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

# திருட்டு முயற்சி கைகூடாததால் கொட்டிலை கொழுத்திய திருடர்

வலி.வடக்கு, ஜூலை 15

திருட்டு முயற்சி கைகூடாத நிலையில் ஆத்திரமுற்ற திருடர்கள் தற்காலிகமாக போடப்பட்டிருந்த கொட்டிலொன்றுக்கு தீயிட்டுள்ளதுடன் சிமேந்து பைகளையும் உடைத்து சிந்திவிட்டு சென்றுள்ளார்கள். அதனால் தற்காலிக கொட்டிலில் வைக்கப்பட்டு இருந்த மேசன் உபகரணங்கள் போன்றவை எரிந்து நாசமாகியுள்ளன. அவற்றின் பெறுமதி சுமார் ஐம்பதாயிரம் ரூபா வரையில் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் பொதுமக்களின் குடிநீர் பாவனைக்கென வலி.வடக்கு பிரதேச சபையால் வைக்கப்பட்டு இருந்த குடிநீர் தாங்கியையும் திருடர்கள் சேதப்படுத்தியுள்ளார்கள்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த அண்மையில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பளை, வீமன்காமம் பகுதியில் நடந்துள்ளது.



திருட்டில் ஈடுபடும் நோக்குடன் இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து அங்கும் இங்கும் திரிந்து இந்தப் பகுதியில் பொது மக்களின் நடமாட்டத்தை நோட்டமிட்டுள்ளார்கள். இந்தப் பகுதியில் உள்ள எழுபது குடும்பங்களின் அரை நிரந்தர வீடுகளுக்கு வழங்கவென அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் நூற்றுக்கணக்கான சீமேந்து பைகள் கொண்டுவரப்படுவதாக இருந்தது. பொது மக்கள் இரவு எட்டு மணியுடன் அந்தப் பகுதியில் இருந்து வெளியேறிவிடுவதால் அங்கு பொருள்கள் போதிய பாதுகாப்பு இல்லாது இருப்பது வழமையாகும். இந்த சீமேந்து பைகள் வந்து விட்டனவா என்பதை நோட்டம் பார்க்க வந்தவர்கள் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட பொது மக்கள் அவர்களைப் பிடித்து எச்சரித்து அனுப்பினர். அதனால் கோபடைந்த திருடர்கள் நள்ளிரவு வந்து தீயிட்டுவிட்டு சென்றுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சீமேந்து பைகள் இரவு வருவதையும் பொது மக்கள் தவிர்த்தமையால் ஆத்திரமுற்று கிடந்த நான்கு பைகள் சீமேந்தை உடைத்து சிந்திவிட்டு சென்றுள்ளார்கள். இது தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். பொது மக்கள் சந்தேக நபர்கள் சம்பந்தமான விவரங்களையும் பொலிஸாருக்கு வழங்கியுள்ளனர். (ற-86)

## பாலியல் துஷ்பிரயோகம்: இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 15

பாடசாலை சென்று திரும்பிய பதின்ம வயதுக்குட்பட்ட சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 17 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சிறுமி தனது பெற்றோருக்குத் தெரியப்படுத்தியதனையடுத்து அது தொடர்பில் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதனைடுத்து குறித்த சுன்னாகத்தைச் சேர்ந்த குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் விசாரணை முன்னெடுப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4)

## கலாசார மேம்பாட்டுக்கு நிதி ஒதுக்கீடு

அச்சுவேலி, ஜூலை 15

வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் தோறும் கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தலா மூன்று லட்சம் ரூபா வழங்கியுள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டிய கலாசார மேம்பாட்டு செயற்றிட்டங்களை உள்ளடக்கி ஆறு நிகழ்ச்சித்திட்ட அட்டவணையையும் அனுப்பிவைத்துள்ளது.

பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள மூன்று லட்சம் ரூபா நிதியை கலைமன்றங்களின் அபிவிருத்தி, பயிற்சி வழங்கல், பிரதேசம் சார் வெளியீடுகள், பிரதேச கலாசார விழா, கலாசார விழிப்புணர்வு ஆவணப்படுத்தல் என்ற ஆறு தலைப்புக்களின் கீழ் பயன்படுத்துமாறு நிகழ்ச்சித் திட்ட அட்டவணை அனுப்பப்பட்டுள்ளது.

ஆறு நிகழ்ச்சித் திட்டத்துக்கும் பங்கீடு செய்யப்பட்டுள்ள நிதியை டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறையில் பயன்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ற-4)

# 2,56,0855 வாக்காளர் திருமலையில் தகுதி

திருகோணமலை, ஜூலை 15

திருகோணமலை மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 2 லட்சத்து 56 ஆயிரத்து 855 பேர் தகுதிப் பெற்றுள்ளதாக மாவட்ட அரச அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத் தாக்கலை தொடர்ந்து அது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு மாவட்ட அரச அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றிருந்தது. அதில் கலந்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 15 கட்சிகளும் 8 சுயேச்சை குழுக்களும் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தன. அவற்றில் 2 சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மொத்தமாக 21 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தநிலையில், தேர்தலானது மாவட்டத்தின் 3 பிரதேசங்களில் 285 வாக்குச் சாவடிகளில் நடத்தப்பட இருப்பதுடன், இந்த முறை 2 லட்சத்து 56 ஆயிரத்து 855 பேர் திருகோணமலை மாவட்டத்தில் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர் – என்று தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில், சுதந்திரக் கட்சி. ஜனநாயக கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சுயேச்சைக் குழு, தமிழர் சுதேச கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் தங்களது வேட்புமனுக்களை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்திருந்தன.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில், அரச அதிபருடன், மேலதிக அரச அதிபர் மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர் செ.அருள்ராசா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

(ந)

திருகோணமலை மாவட்டத்தில், சுதந்திரக் கட்சி. ஜனநாயக கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சுயேச்சைக் குழு, தமிழர் சுதேச கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் வேட்புமனுக்களை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்திருந்தன.

## லொறி விபத்து: இருவர் காயம்

திருகோணமலை, ஜூலை 15

திருகோணமலை – வவுனியா பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் சிமெந்து ஏற்றிச்சென்ற லொறி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் லொறியின் சாரதியும்– உதவியாளரும் படுகாயமடைந்து திருகோணமலை வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

(ந)

## அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். மத்திய கல்லூரியில் க.பொ.த உயர்தரம் 2015இல் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் நாளை வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு வழங்கப்படவுள்ளது என்றும், மாணவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தெரிவித்துள்ளார்.

(ந–10)

## தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு பற்றிய பேச்சு இன்று

கொழும்பு, ஜூலை 15

பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பான இரண்டாம் கட்ட பேச்சு இன்று நடைபெறுவுள்ளது.

சம்பள உயர்வு தொடர்பில் ஏற்கனவே முதலாளிமார் சம்மேளனத்துடன் இடம்பெற்ற நான்கு கட்ட பேச்சுகளும் தோல்வியடைந்த நிலையில், கடந்த 10ஆம் திகதி மீண்டும் சம்பள உயர்வு குறித்த முதலாம் கட்ட பேச்சு ஆரம்பிக்கப்பட்டது.

அன்றைய தினம் பெருந்தோட்ட கம்பனிகளின் பிரதானிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை.

இந்நிலையில், இன்று இரண்டாம் கட்ட பேச்சு நடத்துவதென அன்றைய தினம் முடிவெடுக்கப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமக்கு வழங்கும் 400 ரூபா சம்பளத்தை 1000 ரூபாவாக, அதிகரிக்குமாறு வலியுறுத்தி, கடந்த சில நாள்களாக மெதுவான பணி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

(ந)

# போதைப்பொருள் ஒழிப்பு பயிற்சிப் பட்டறை



கிளிநொச்சி, ஜூலை 15

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் பல்வேறு பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான போதைப்பொருள் ஒழிப்பு பயிற்சி பட்டறை ஒன்று நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த பயிற்சி பட்டறை மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது. இப்பயிற்சி பட்டறையில் பிரதேச செயலாளர், வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், கல்வியியலாளர்கள், உள்ளிட்ட அரச திணைக்களங்கள் சார் ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நாடளாவிய ரீதியில் ஜனாதிபதியின் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இம்மாதம் 8ஆம் திகதி முதல், எதிர்வரும் 9ஆம் திகதிவரை போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

(ந–21)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 15

வரணி வடக்கு கௌரிபாலன் சைவப் பிரகாச முன்பள்ளியின் விளையாட்டு விழா கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளி முகாமைத்துவ தலைவர் இ.இளம்குமரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலை முதல்வர் வை.விஜயகுமாரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வரணி வடக்குப் பிரதேச கிராம அலுவல[illegible] கு.பரமானந்தம் மற்றும் வரணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் க.அருட்செல்வம் ஆகியோரும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழக தலைவர் த.இரவீந்திரனும் கலந்து கொண்டனர்.(ந–122)

# கூட்டுறவின் வளர்ச்சிக்கு எப்போதும் துணை நிற்போம்

## வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

கூட்டுறவு அமைப்புக்களுடைய சுயாட்சி அல்லது தன்னாதிக்கம் என்பது மேற்குலகை பொறுத்தவரை தன்னிறைவானது.அவர்கள் யாரையும் சார்ந்திருக்க வேண்டிய தேவையில்லை. ஆனால் எங்களைப் போன்ற வளர்முக நாடுகளில் இந்த நிலை இன்னும் உருவாக்கப்படவில்லை. அரச கொள்கைகளுக்கு ஏற்ப கூட்டுறவு கொள்கைகள் மாற்றமடைந்து வருகின்றன. ஒருவர் மற்றவருக்காகவும், ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் என்கின்ற அந்தக் கூட்டுறவு தத்துவத்தில், இயல்பில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. – இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண விவசாய மற்றும் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

கூட்டுறவின் வளர்ச்சிக்கு நாம் எப்போதும் உங்களுடன் இருப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வட மாகாண சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனமும் நெதர்லாந்து மனித நேய செயற்பாட்டுக்கான கூட்டுறவு அமைப்பும் இணைந்து நடத்தும் பயிற்சிப்பட்டறையின் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் யு.எஸ். விடுதியில் இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகமயமாதல் மற்றும் அரச கொள்கைகள் காலத்துக்குக் காலம் மாற்றமடைதல் என்பன எங்களுடைய கூட்டுறவு அமைப்புக்கள் எதிர்கொள்கின்ற பிரதான சவாலாக விளங்குகின்றது. எங்களுடைய நிர்வாகம், கூட்டுறவு அமைப்புக்களில் இருக்கக்கூடிய நிர்வாக திறமையின்மைகளை சரி செய்ய வேண்டும். அப்போதுதான் கூட்டுறவு அமைப்புக்களை தன்னாட்சி உள்ளதாக மாற்றமுடியும்.யாரும் யாரையும் சார்ந்திருக்காத அமைப்பாக மாற முடியும்.



ஆரம்பக் காலங்களில் எங்களுடைய பண்பாட்டில் எல்லோரும் கூட்டாக சேர்ந்து வேலை செய்திருக்கின்றோம்.எல்லோருக்கும் மதிப்பளிக்க கூடிய ஓர் அமைப்பாக இருந்தது. உலக மயமாதலை எதிர்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். கூட்டுறவும் ஒருவகையிலே வணிக நிறுவனமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. இருந்தபோதும் இலங்கையில் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் ஊடுருவல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக மாற்றம் பெற்றிருக்கின்றது.

ஆகவே சுயாதீனமாக முடிவெடுக்கக் கூடியவர்களாகவும் புதிய விடயங்களை எவ்வாறு செய்யலாம் என்பது தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். உள்ளூர் உற்பத்திகளை சரியான முறையில் எங்களால் செய்ய முடியவில்லை. நுகர்வோரை கவரும் விதத்திலே எங்களுடைய உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த வேண்டும். சுயாதீனமாக எங்களை நிலை நிறுத்திக்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும்.

எங்களுடைய திறமைகளை வெளிக்கொண்டுவரவும் அதனை வெளிப்படுத்தவும் எமக்கு யாருமில்லை. ஆனால் உங்களுடைய எண்ணக்கருக்களுக்கு புதிய வடிவம் கொடுக்கும் தளமாக இந்த பயிற்சிப் பட்டறை அமையும்.– என்றார்.

வடமாகாண சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வடமாகாண சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களின் ஆணையாளர்கள், நெதர்லாந்து மனித நேய செயற்பாட்டுக்கான கூட்டுறவு அமைப்பின் திட்டப்பணிப்பாளர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

(ந–ரி)

உதயன்

# பரப்புரைகளில் மைத்திரி கலந்துகொள்ளக் கூடாது

## பிரஜைகள் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 15

சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக நல்லாட்சியை ஸ்தாபிக்க கடந்த ஜனாதிபதி தேர்தலில் 62 இலட்சம் வாக்குகளைப் பெற்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்த ஒரு பரப்புரை நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது என பிரஜைகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் மீள் பிரவேசத்திற்கு தனது கட்சியின் சார்பில் வாய்ப்பை வழங்கி மக்களுக்குப் பெரும்துரோகம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறைச் செய்து விடக் கூடாது எனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் மருதானையில் அமைந்துள்ள சன சமூக நிலையத்தில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஜனநாயக பிரஜைகள் அமைப்பினர் மற்றும் பல்வேறு தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதன் போது ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் ஏற்பட்டாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளதாவது:–

கடந்த ஜனாதிபதி தேர்தலில் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து நல்லாட்சியை ஏற்படுத்தவே மூவின மக்களும் ஒன்றிணைந்து பொது வேட்பாளாராக களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்து நல்லாட்சிக்கு வித்திட்டனர். அந்தவகையில் அண்மைக் காலங்களில் ஜனாதிபதி மீது மக்கள் வைத்திருந்த அனைத்து நம்பிக்கைகளும் வீணடிக்கப்பட்டுள்ளது. தனது ஆட்சிக் காலத்தில் வெறுமனே சுகபோகங்களுக்காக இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைத்து ஊழல் மிக்க சர்வாதிகார ஆட்சியை மேற் கொண்டு எமது பொருளாதாரத்தை வீழ்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்ற முன்னாள் ஜனாதிபதிக்கு மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதியினால் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமையே அதற்குக் காரணம் ஆகும்.

மைத்திரிபால சிறிசேனவின் இவ்வாறான தீர்மானம் தொடர்பில் இன்று அனைத்து மக்களும் அதிருப்தியடைந்துள்ளனர். இவ்வாறான நிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்த ஒரு கட்சியையோ அல்லது வேட்பாளர் ஒருவரையோ பிரதிநிதிதுவப்படுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்த ஒரு பரப்புரை நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது. அவ்வாறு அவர் ஈடுபடும் பட்சத்தில் அவர் மக்களுக்கும் எமது நாட்டுக்கும் செய்யும் பெரும் துரோகமாக அது அமைந்து விடும். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் முற்றுமுழுவதுமாக சீர்குலைக்கப்பட்டது. அரச சொத்துகள் உட்பட ஏனைய அனைத்தும் கொள்ளையிடப்பட்டன. மஹிந்தவின் குடும்பமே மக்களின் அனைத்துச் சொத்துகளையும் சூறையாடியுள்ளது. இவ்வாறான நிலையில் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான அனைத்து விசாரணைகளும் சட்டத்தின்படி இடம் பெற்று வரும் நிலையில் ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து தனது குடும்ப அங்கத்தவர்களைக் காப்பாற்றும் நோக்கிலேயே மஹிந்தவின் அரசியல் மீள் பிரவேசம் அமைந்துள்ளது. இதனை மக் கள் நன்கு புரிந்து செயற்பட வேண்டியது அவசியமாகின்றது.

பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள இவரை ஒரு போதும் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிய அதிருப்தியாளர்களும், ஜாதிக ஹெல உறுமய தலைமையிலான நல்லாட்சிக்கான தேசிய கூட்டணியின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து ஸ்தாபித்துள்ள நல்லாட்சிக்கான தேசிய முன்னணியை நாம் வரவேற்கிறோம்.அதற்கான அனைத்து ஆதரவையும் வழங்கத் தயாராகவுள்ளோம்.

மீண்டும் நல்லாட்சியை ஏற்படுத்த நினைக்கும் எந்த ஒரு தரப்பினருக்கும் நாம் ஆதரவைத் தர எப்போதும் தயாராகவே உள்ளோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதி வழங்கி அவரின் கீழ் செயற்பட்ட ஒரு சில தரப்பினருக்கு வாய்ப் புக்களை மறுத்துள்ளமையானது மிகவும் வேடிக்கையானது. இவ்வாறான நாடகங்களை அரங்கேற்ற நினைக்கும் கட்சிகள் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

சர்வாதிகார ஊழல் நடவடிக்கைகளை முற்றுமுழுவதுமாக இல்லாதொழிக்கும் தீர்க்கமான தேர்தல் ஒன்றை எதிர்நோக்கத் தயாராக இருக்கும் மக்கள் எவ்வாறான சந்தர்ப்பத்திலும் மீண்டும் அடிப் படைவாதிகளுக்கும், இனவாதிகள் மற்றும் ஊழல் வாதிகளுக்கும் இடமளிக்கக் கூடாது. – என்றார். (ற)

# அரச ஊழியர்களுக்கு அநீதி இப்படிக் கூறுகிறார் மஹிந்த



கொழும்பு, ஜூலை 15

விசாரணை என்ற பெயரில் அரச உத்தியோகத்தர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக, முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குருநாகல் மாவட்ட வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட மஹிந்த, மல்வத்தபீட மஹா நாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங் கல தேரரிடம் ஆசிபெற்றுக்கொண்டார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த காலத்தில் நல்ல நோக்கங்களுக்காக முன்னெடுக்கப்பட்ட பல வேலைத்திட்டங்களை தற் போதைய அரசு இடைநிறுத்தியுள்ளதோடு, அவை தொடர்பில் கேள்வியும் எழுப்புகின்றது.

ஜனாதிபதி செயலகம் தொடக்கம் அரசதுறைகள் வரை சுமார் 500க்கும் மேற்பட்டவர்களிடம் விசாரணை நடத்தியுள்ளதாக தெரிவித்த அவர், அரசியல்வாதிகள் இவற்றைத் தாங்கிக்கொள்வார்கள் என்றும், அரச உத்தியோகத்தர்களை பொறுத்தவரை இது அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்று தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளை இல்லாதொழித்து புதிய ஆட்சியை, எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதிக்கு பின்னர் அமைப்போம். – என்னும் அவர் தெரிவித்தார்.

இதன்போது, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர்களும் உடனிருந்தனர். (ற)

# ஷிராணியின் மகனும் சுயேச்சையாகப் போட்டி



கொழும்பு, ஜூலை 15

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் மகன் ஷவின் பண்டாரநாயக்க காரியவசமும் இம்முறை தேர்தலில், கொழும்பு மாவட்டத்தில் சுயேச்சையாக போட்டியிடுகின்றார். எமக்கு அரசியல் தேவையில்லை, பொது மக்களுக்கு சேவை செய்யவே வந்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது பேஸ் புக் பக்கத்தில் தெரிவித்துள்ள தாவது:–

உங்களுக்கும் எனக்கும் நடைமுறையிலுள்ள தேர்தல் முறையை விட மாற்றியமைக்கப்பட்ட அரசியல் கலாசாரம் வேண்டும். திறமையான, சுத்தமான மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் செல்ல வேண்டும். இதனை உங்களுக்கோ அல்லது எமக்காகவோ செய்யமுடியாது போனாலும் எதிர்கால சந்ததியினருக்குக் கிடைக்கப் பெறவேண்டும். நாம் மேற் கொண்டுள்ள பயணம் நீண்டதும் கடினமானதுமாகும். அது எங் கேயோ ஆரம்பமாகி உள்ளது. எங் களுக்கு அவசியமானது அர சியல் அல்ல, பொதுமக்களின் சேவையே. – என்று தெரிவித்துள்ளார். (ற)



உதயன் புதன்கிழமை ஜூலை 15 2015

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அன்றாடப் பணிகளை உற்சாகத்துடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**இடபம்:** பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், இலாபமும் உயரும். உறவினர் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் கடைப்பிடிப்பது நல்லது.

**மிதுனம்:** நீண்டநாள் திட்டத்தை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். வரவேண்டிய கடன் தொகை எளிதில் கிடைக்கும். பணியாளர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

**கடகம்:** சமூகத்தில் சுய கௌரவம் உயரும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**சிங்கம்:** மனதில் புத்துணர்வும், செயல்களில் திறமையும் வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி உருவாகும். பணியாளர்களுக்கு அதிக சலுகை கிடைக்கும். மனைவி விரும்பியதை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். பெண்களுக்கு ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும்.

**துலாம்:** நண்பர்களுடன் பொழுதுபோக்கில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரைக் குறை கூறும் சூழ்நிலை ஏற்படலாம். பொறுமை தேவை. தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் காண்பீர்கள். உடல் நலத்துக்காகச் சிகிச்சை மேற்கொள்வீர்கள்.

**தனுசு:** நண்பர்களிடம் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். வருமானம் கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மகரம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். பெண்களால் நன்மை உண்டாகும்.

**கும்பம்:** உடல்நலனில் அக்கறை செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் இலாபம் கூடும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். பெண்கள், உறவினர்களால் பாராட்டப்படுவர்.

**மீனம்:** வெளியூர் பயணம் செல்ல நேரிடும். தொழில், வியாபார வளர்ச்சிக்காக, புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வீட்டுச் செலவுக்கு தாராள அளவில் பணம் செலவழிப்பீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.

## குழந்தையைக் கூவி விற்ற மர்ம மனிதர்




பெண் குழந்தை ஒன்றைக் கூவி விற்ற மர்ம மனிதர் ஒருவரை பொலிஸார் மடக்கி பிடித்த சம்பவம் இங்கிலாந்தில் இடம்பெற்றுள்ளது.

இங்கிலாந்து மென்செஸ்டர் போர்டன் பகுதியில் உள்ள கடையொன்றுக்கு அருகே இளைஞர் ஒருவர் குழந்தை ஒன்றை தள்ளு வண்டியில் வைத்துகொண்டு வந்துள்ளார்.

குறித்த நபர் மக்கள் கூடியிருந்த பகுதியில் அந்த குழந்தையை விற்க பகிரங்கமாக முயற்சி செய்துள்ளார். குழந்தையை 1000 டொலர்களுக்கு விற்பனை செய்ய உள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் குழந்தையை வாங்க மூன்று பேர் அவரை அணுகியும் உள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளனர். பின்னர் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரால் குறித்த நபர் கைது செய்யப்படுவதற்கு முன்னர் தப்பியோடியுள்ளார். எனினும் தீவிர தேடுதலுக்கு பின்;னர் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மீட்கப்பட்ட 3 மாத குழந்தை பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ளது.

# அஜீத்தால் நிறைவேற்றப்பட்ட ஸ்ருதியின் ஆசை

அஜீத்தின் கையால் ஒளிப்படம் எடுத்து தனது ஆசையை நிறைவேற்றிக் கொண்டுள்ளார் நடிகை ஸ்ருதி ஹாசன். அஜீத்தின் ஒளிப்பட ஆர்வம் பற்றியும் அண்மையில் அவர் அப்புக் குட்டியை ஒளிப்படம் எடுத்தது பற்றியும் அறிந்திருந்த ஸ்ருதிஹாசன், தன்னையும் ஒளிப்படம் எடுத்துத் தரும்படி கேட்டிருக்கிறார்.

இந்த நிலையில், படப்பிடிப்பு இடை வெளியில் ஸ்ருதியை விதவிதமாக ஒளிப்படம் எடுத்துக் கொடுத்து அசத்தி விட்டார் அஜீத். "இந்த ஒளிப்படங்களைப் பொக்கிஷமாகப் பாது காப்பேன்" என்று சந்தோஷத்தில் பொங்குகிறார் ஸ்ருதி ஹாசன்.

அஜீத் சிறந்த ஒளிப்பட கலைஞர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அவர் தனது மனம் கவர்ந்தவர்களை அவர்கள் அறியாமல் புகைப்படம் எடுத்து அதைப் பிரேம் செய்து கொடுத்து அசத்துவார்.

தற்போது அஜீத்தின் 56 ஆவது திரைப் படத்தை இயக்கும் சிவா, படப்பிடிப்பு தளத்தில் உட்கார்ந்த படியே குட்டித் தூக்கம் போடுவாராம். அஜீத் அதையும் ஒளிப்படம் எடுத்து அவரி டமே கொடுத்து அசத்தினார்.

அண்மையில் நடிகர் அப்புகுட்டியை வித விதமாக ஒளிப்படம் எடுத்துக் கொடுத்து ஒரே மாதிரி நடிக்காதீர்கள், விதவிதமா நடியுங்கள், பெயரையும் அப்புக்குட்டி என்பதை மாற்றி சொந்தப் பெயரான சிவபாலன் என்ற பெயரிலேயே நடியுங்கள் என்று அஜீத் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

"30 வருசத்துக்கு அப்புறம் இப்போதான் உன் சாப்பாட்டுல மாறுதல் தெரியுது"

"அப்படியா"

"அப்போ கருப்பு முடி கிடக்கும் இப்போ வெள்ள முடி கிடக்குது"

## மருத்துவரைக் கரம் பிடிக்கிறார் நடிகை சரண்யா மோகன்

மலையாளத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல மொழிப் படங்களில் நடித்துள்ள நடிகை சரண்யா மோகன், பல் மருத்துவரொருவரைக் திருமணம் செய்யவுள்ளனர். மணக்கிறார். இந்தச் செய் தியைத் தனது அதிகாரப்பூர்வ முக நூல் பக்கத்தில் அவர் அறிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பல் மருத்துவரான அரவிந்த் கிருஷ்ணாவோடு ஜூலை 12 ஆம் திகதி சரண்யா மோகனுக்கு நிச்சய தார்த்தம் நடைபெற்றுள்ளது.

தமிழில் 'யாரடி நீ மோகினி', 'வெண்ணிலா கபடிக் குழு', 'அழகர்சாமியின் குதிரை' உள்ளிட்ட படங்களில் நடித்தவர் சரண்யா மோகன். 1997 இல் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான இவர், பல தென்னிந்திய மொழிப் படங்களில் நடித்தவர்.



## மனைவி பிள்ளைகள் இருந்தும் தனிமையால் இறந்த முதியவர்

### அனைவரும் கைவிட்டதால்

தென்மராட்சி, ஜூலை 15

இரு மனைவிகள், 10 பிள்ளைகள் இருந்தும் வயோதிப காலத்தில் தனிமையில் வாடிய முதியவர் மன முடைந்து சுருக்கிட்டு தன் உயிரைப் போக்கியுள்ளார். தனது உடலில் போடப்பட்டிருந்த துவாயின் ஒரு முனையை கட்டிலில் கட்டி மறுமுனையை கழுத்தில் சுருக்கிட்டு கீழே விழுந்து அவர் உயிரை விட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு தாவளை, இயற்றாலையில் நடந்துள்ளது.

மறுநாள் காலையில் முதியவருக்குத் தேநீர் கொண்டு சென்ற உறவுக்காரர் ஒருவர் முதியவரின் நிலையைக் கண்டு கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதி மன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர். நீதிவானின் பணிப் பின்படி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற் கொண்டார். அத்துடன் உடற்கூற்றுப் பரிசோதனைகளை சாவகச்சேரி மருத்துவமனை பொறுப்பதிகாரி மூலம் நடத்தி நீதிமன்றில் அறிக்கையிடுமாறும் உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் முதியவரின் உடலைப் பொறுப்பேற்க குடும்பத்தவர்கள் இல்லாததால் உறவுக்காரர் ஒருவர் பொறுப்பேற்று எடுத்துச் சென்றார்.

முதியவரின் இரு மனைவிகள் மற்றும் பிள்ளைகள் புலம்பெயர் நாடுகளிலும், ஏனைய மாவட்டங்களிலும் வசிக்கின்றனர் என்று கூறப்பட்டது. (ற-9)

## யாழ்.சின்மயா மிஷனின் சின்மய பாலவிஹார் முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன், சிறுவர்கள் மத்தியில் ஆற்றல் மிக்க தலைமைத்துவம், தனிமனித விழுமியங்களைப் பேணும் பண்பு, படைப்பாக்கத்திறன், தூரநோக்கு போன்ற உயர்ந்த பண்புகளை சிறுபராயத்திலிருந்தே வளர்த்தெடுக்கும் நோக்குடன் சிறுவர் முகாம்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி வளாகத்தில் தரம்- 6, 7, 8 மாணவர்களுக்கு வதிவிடமுகாமாக எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 5 மணி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி மாலை 5 மணி வரையும், தரம்- 1,2,3,4,5 மாணவர்களுக்கு ஓகஸ்ட் மாதம் 7,8ஆம் திகதிகளில் வதிவிடமல்லாத முகாமாக காலை 8.30 முதல் 12.30 மணி வரை முகாமும் நடைபெறவுள்ளன. குறித்த முகாம்களை இல-09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்திலும் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பெற்றோர்கள் இந்தச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்தி தங்கள் குழந்தைகளை இந்த முகாமில் பங்குபற்றச்செய்து பயன் பெறுமாறு ஊக்குவிக்கலாம் என்றும், இந்த முகாமில் கலந்து பயன்பெற விரும்புகின்ற மாணவர்கள் தங்கள் விவரங்களை தங்களது பாடசாலை அதிபர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ 24ஆம் திகதிக்கு முன்னர் யாழ். சின்மயா மிஷனுக்கு அறிவிக்குமாறும் ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

## புலுட்டையன் பிள்ளையார் பெருந்திருவிழா

தென்மராட்சி, ஜூலை 15

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய (புலுட்டையன் பிள்ளையார் ) பெருந்திருவிழா நாளைமறுதினம் 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.(ற-9)

## நூல் வெளியீட்டு விழா

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் 'பதிவும் பகிர்வும்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 19ஆம் திகதி இராமநாதன் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு துர்க்கா தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் தலைமை வகிக்கவுள்ளார். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார். (ற-10,421)


**1008 சங்காபிஷேகம்**

**அரியாலை கிழக்கு ஸ்ரீமுத்து விநாயகர் கோயில்**

அலங்காரத் திருவிழா இறுதிநாள் 16.07.2015 சங்காபிஷேகம் காலை 8 மணி முதல் ஆரம்பித்து பகல் உள்வீதித் திருவிழா நண்பகல் 12 மணிக்கும் இரவுத்திருவிழா மாலை 6.30மணிக்கும் ஆரம்பமாகி அலங்காரப் பூந்தண்டிகையில் பிள்ளையார், முருகன் வெளிவீதி உலா வருவர்.

**விசேட மேளக்கச்சேரியாக**

- கட்டப்பிராய் சுதா குழுவினருடன்
- நாதஸ்வரம் - வானொலிப் புகழ் பிச்சையப்பாவின் புதல்வர் ரஜீவ்
  கொழும்பு புகழ் சரண்ராஜ்
- தவில்- இந்தியா - தாராபுரம் கணேஸ்
  இளம் புயல் தட்சனா

(59065) (45.6.5.5) பரிபாலனசபை



**JAFFNA MEDICAL ASSOCIATION**
**ANNUAL GENERAL MEETING - 2015**
**NOTICE OF MEETING**

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will he held on Wednesday, 5th August 2015 at 11.00 am at the Conference hall of Teaching Hospital, Jaffna, for the following purposes.

1. To Receive and consider the Annual report of the committee of Management on the affairs of the company and the statement of acounts for the year ended 31st December 2014 and the report of the auditors thereon.
2. To approve the drafted new constitution.
3. To consider any resolutions proposed by members and committee where due Notice has been givan.
4. To elect the committee of management for year 2015/16
5. To appoint the auditors of the association and to authorize the committee of management to determine their remuneration.

By order of the committee of Management,

Hony.Secretary.
14 th July 2015

(63152)(3.9.6)



டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி உபாசகியின்

**அருள் ஒளி தர்சன மாலையும் ஆடி மாத விசேட பூஜையும்**







வரமருளிக் காத்தருள்ள மனோன்மணி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் அருள் ஒளி தர்சன மாலை விசேட பூஜை இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

அன்னையாரின் ஆலயத்தில் பூஜையில் வைத்துப் பூஜித்து தருவிக்கப்பட்ட காவல் தேசிக்காய், திருவுருவப் படம், அம்மையாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பென்ரன்கள், திருப்புக் கோர்வைகள், அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட யாகநீர் போன்ற அருட் பொருட்களை மண்டபத்தில் பெற்று அம்பாளின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

**திருவருள் நிகழ்வுகள்:**

- மங்கள வாத்தியக் கச்சேரிகள்
- தெய்வீக பஜனை நிகழ்வுகள்
- அவதார நிகழ்வுகளின் ஒளித்திரைக் காட்சி
- அன்னையாரின் திருவடிகளுக்குப் பாத பூஜை
- அன்னையாரின் திருக்கரங்களால் பூஜிக்கப்பெற்ற தேசிக்காய்.
- காவல் பொருட்கள், திருவருட் பிரசாதம் ஆகியன வழங்கப்படும்
- அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

கலை நிகழ்வுகளும் இடம்பெறும்

நல்லூர் இளங்கலைஞர் மண்டபம்
காலம் : 19.07.2015
ஞாயிற்றுக்கிழமை
பகல் 10.30 மணி

ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192, 0045 40413431
யாழ் தொடர்புகளுக்கு 077 9825004



**ஐரோப்பாவில் கல்வி கற்று வேலை வாய்ப்புடன் கூடிய வாழ்க்கையை அங்கு தொடர ஆயத்தமா?**



Medicine
Engineering
Nursing
Technical
Accounting



இலவச கருத்தரங்கும் நேரடி அனுமதியும்

இலவச அனுமதிக்கு: 077 233 5131, 024 222 7993

Time - 25/07/2015
Venue - Sri Lanka Red Cross Society
Off Park road, Vavunia.

STUDENT CONSULTANCY UNIT
RED CROSS CONSULTANCY SERVICES
Consultancy arm of the Sri Lankan Red Cross Society

3rd Floor, Red Cross BLDG,No.106,Dharmapala Mw,Colombo 07
Contact No : +94114 347 070 / +9477 670 2222
+94776700009 / +94766716083
Email-admission@rcscu.lk Web :www@rcscu.lk



**University of Jaffna - Sri Lanka**
**Faculty of Graduate Studies**

**Postgraduate Diploma in Teaching English as a Second Language (TESL)**
**Part time course - 2015/2017 (Batch II)**

Applications will be entertained from eligible candidates for the above course.

**Admission Requirements:**

1. Degree in any field from a recognized University.
   And
2. At least three years experience in Teaching English as a Second Language at primary/secondary/tertiary levels in Government or recognized private schools/ Institutions.
   And
3. Age -below fifty five years

**Duration:** Four Semesters (Twoyears)

**Medium :** English

**Selection Criteria:** English Language ProficiencyTest and Interview

**Course Fee: Rs. 85, 000.00**

**Closing date for Applications: 17th August 2015**

**Application Procedure:**

Relevant information and prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P. : 021 222 3608) either in person or by post, on a payment of Rs. 500/- per application form on production of receipt in support of the payment to the University Account number **162-1001-8-0000902** at the People's Bank.

Those who wish to obtain application forms by post are requested to send a money order for Rs. 500/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope**(23 x 10 c.m in size) to the value of Rs 40/-.

Application forms and other details will also be available in the Faculty web site www.jfn.ac.lk/grad. Those who wish to send the downloaded application form should attach a money order for Rs. 500/- drawn in favour of the **Bursar, University of Jaffna** or the receipt in support of the payment to the University Account number **162-1001-8-0000902** at the People's Bank.

Duly completed applications should be forwarded to the **Assistant Registrar, Faculty of GraduateStudies, University of Jaffna** on or before the closing date of application.

Name of the course should be written on the top left hand corner of the envelope.

Illegible, incomplete and late applications will be rejected without intimation.

Registrar
06.07.2015

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
செல்லம்மா
கணபதிப்பிள்ளை
திதி: 15.07.2015

தாயின் மடியில்
13.12.1939

அம்பாள் பாதத்தில்
29.06.2003


அம்மாவே எம்மைப் பெற்ற தாயே எம்மை என்றும் காப்பவளே
பன்னிரண்டு ஆண்டுகள் சென்றால் என்ன தாயே?
பன்னிரண்டு யுகங்கள் தான் வந்தாலும் உங்கள் உறவு
விட்டுப் போகாது. ஜென்மஜென்மமாக எம்மை ஆளும் தாயே !
உங்களை என்றுமே மறவோம் அம்மா
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இல.26/2, 5ஆம் குறுக்கு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 16.06.2015
அமரத்துவம் அடைந்த
அமரர் நடராஜன்
சிவநாதன்
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்
நாளை (16.07.2015) வியாழக்கிழமை
காலை 5.30 மணிக்கு அவரது இல்லத்தில்
நடைபெறும். அதனைத்தொடர்ந்து
சபிண்டீகரணக் கிரியைகள்
மு.ப.11.00 மணிக்கு அன்னாரின்
இல்லத்தில் நடைபெறவுள்ளதால்
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப
சகிதம் வருகைதந்து அவரின் ஆத்ம
சாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய
போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்
வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.




தோற்றம்
18.12.1980

மறைவு
16.06.2015

நாவற்காடு,
வரணி.

குடும்பத்தினர்.

## 43 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



மண்ணகத்தில்
16.07.1933

விண்ணகத்தில்
03.06.2015

அமரர்
சிவபாக்கியம்
சின்னத்தம்பி

என்றும் எம்மை அன்பாலும்
பண்பாலும் அரவணைத்து
இனிய வாழ்வு தந்த தெய்வமே
மாதம் ஒன்றரை சென்றதம்மா
உங்கள் மதிமுகம் மாறவில்லை
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக
அமைந்த உங்கள் சிரித்த முகம்
காண்பதற்கு ஏங்கித் தவிக்கின்றோம்.
எம்முடன் சேர்ந்து வாழ்ந்த
ஒவ்வொரு கணமும்
எமக்குச் சொர்க்கமாய்
இனிக்குதம்மா உங்களை என்றும்
எங்கள் இதயக் கோயிலிலிருந்து
பூசிப்போம் அம்மா

கடந்த 03.06.2015 புதன்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவிசிவபாக்கியம் சின்னத்தம்பி அவர்களின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (15.07.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனநிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சிவ வாசா"
சூராவத்தை, சுன்னாகம். (6189б).(9.6.5)

அன்புப் பிள்ளைகள்,
மருமக்கள், பேரக்குழந்தைகள்

# ‘மார்ஸ்’ தொற்றுப் பற்றிய அச்சம் தேவையில்லை

## சுகாதார அமைச்சு கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 15
இலங்கையில் ‘மார்ஸ்’ நோய் தொற்றக் கூடுமென எவரும் சந்தேகப்படத் தேவையில்லை. அந்த நோய் நாட்டில் பரவாது தடுப்பதற்குரிய விசேட பாதுகாப்புச் செயற்றிட்ட மொன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

‘மார்ஸ்’ நோய்த் தொற்றுத் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுவது தொடர்பாகவும், விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டம் தொடர்பாகவும் கட்டுநாயக்க விமானநிலையத்தில் இடம்பெற்றிருந்த ஊடக சந்திப்பில் வைத்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் பீ.ஜீ.மஹிபால இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:– தென்கொரியாவில் 185 பேரும் சீனா மற்றும் தாய்லாந்தில் முறையே ஒவ்வொருவரும் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள் ளனர்.

உலக சுகாதார நிறுவனத்தின் விசேட சர்வதேச சுகாதார விதி நியமங்களுக்கு அமைய நாம் செயற்படுகின்றோம். நோயாளர்கள் மற்றும் நோய்த்தொற்றுக்கு உள்ளாகியிருப் போரைக் கண்டறிவதுடன் நோய் காணப்படும் நாடுகளில் இருந்து இந்த நாட்டுக்குள் வரும் இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு அறிவுறுத்துவதற்கான துண்டுப் பிரசுரங்களும் விமானநிலையத்தில் வைத்து வழங்கப்படுகின்றன.

கடந்த ஜூன் 18ஆம் திகதியில் இருந்து ஜூலை 5ஆம் திகதி வரையிலும் நோய் காணப்படும் நாடுகளிலிருந்து வந்திருந்த 656பேரும் சவூதி அரேபியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வந்திருந்த 41பேரும் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

நாம் ஏற்கனவே அவர்களைப் பற்றி சுகாதார வைத்திய அதிகாரிகள் மூலமாக அவர்களது பின் விவரங்களை ஆராய்ந்து வருகின்றோம்.– என்று அவர் தெரிவித்தார்.

பிரதம உயிர்கொல்லி நோய்கள் வைத்திய நிபுணரான பபாபலிஹவடன, அமைச்சின் அதிகாரிகள் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஆகியோரின் பங்களிப்புடன் ‘மார்ஸ்’ நோய்தொற்றுக்குஉள்ளாகியுள்ளோரை இனங்காணுவதற்கு விமான நிலையத்தில் மேற்கொள் ளப்பட்டிருக்கும் செயற்றிட்டத்தை பார்வையிடும் வாய்ப்பு ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. (ற–22)

# சேவை செய்வதே எமது ஒரே இலக்கு

## எம்.அப்துல் மஜீத் தெரிவிப்பு

அம்பாறை, ஜூலை 15
மக்களுக்குச் சேவை செய்யும் ஒரே இலக்குடனேயே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பொதுத் தேர்தலில் களமிறங்கியுள்ளது. சரியான முடிவை மக்கள் எடுக்க வேண்டும் – இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.அப்துல் மஜீத் கூறினார்.

திகா மடுல்ல தேர்தல் மாவட்டத்துக்கான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மனித நேயத்தோடு எம்மை அரவணைத்து மக்கள் சேவைக்கு ஊக்கம் தந்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் 72 சத வீதமான தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த போதும் இன்று நாம் நியமனப்பத்திரம் தாக்கல் செய்த அம்பாறை மாவட்ட செயலகத்துக்கு இதுவரை மாவட்ட செயலாளராக (அரச அதிபராக) ஒரு தமிழ் பேசும் அதிகாரி நியமிக்கப்பட்டதாக சரித்திரமே இல்லை. இந்த நிலைமை மாறி இவற்றுக்கெல்லாம் விடிவு பிறக்க வேண்டும்.

**அலகல்ல மாவட்டம்**

குறிப்பாக எமக்கு விடிவைத் தரக்கூடிய வகையில் இந்த மாவட்டத்தில் மேலதிக மாவட்டம் ஒன்று எமக்குத் தேவையாகவுள்ளது.

இதனைக் கரையோர அலகாக நாம் கோரவில்லை. எமது மொழியில் பேசி, எம்மால் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய கரையோர மாவட்டத்தை நாம் பெற வேண்டும்.– என்றார். (ற–30)

# கிளாலி யாத்திரைத் திருவிழா நாளை பிற்பகல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 15
வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளாலி தூய சந்தியோகுமையோர் யாத்திரைத்தலத் திருவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஆயத்த வழிபாடுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் தினமும் 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் மணிக்கும், திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து புனிதரின் திருச் சொருப பவனியும் திருச் சொருப ஆசீர்வாதமும் இடம்பெறும் என்று பங்குத் தந்தை அருள்திரு அ.ஜெயரஞ்சன் அடிகள் தெரிவித்துள்ளார்.

இத்திருத்தலத் திருவிழாவுக்கு குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருமளவு பக்தர்கள் கலந்து கொள்வது வழமை என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–4)

# இனவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதே எமது தேர்தல் இலக்கு

## மு.கா. வேட்பாளர் அப்துர் ரஹ்மான் கூறுகின்றார்

மட்டக்களப்பு, ஜூலை 15
பிரதேசவாதத்துக்கும் இனவாதத்துக்கும் முற்றுப் புள்ளி வைப்பதே நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பிரதான தேர்தல் இலக்கு என மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் அப்துர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வேட்பு மனுவைக் கையளித்த பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை தேர்தல் காலங்களில் பிரதேசவாதமும் இனவாதமும் சாபக்கேடாக உருவெடுப்பது வழமை. இந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதே தேர்தலில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பிரதான இலக்கு. அதற்காகவே நாம் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரசுடன் உடன்பாட்டின் அடிப்படையில் இணைந்து போட்டியிடுகிறோம்.

சிறி லங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்குமிடையில் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருக்கிறது. அதற்கான சரத்துக்கள் ஏற்கனவே உடன்பாடு காணப்பட்டிருக்கின்றன. தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளாலும் கட்சிகளாலும் அதிகம் தூண்டிவிடப்படும் இனவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே இரு கட்சிகளுக்குமிடையிலான உடன்படிக்கையின் பிரதான அம்சமாக இருக்கிறது.– என்று அவர் தெரிவித்தார். (ற–10)

# இந்து சமய மாநாடு தொடர்பாக வைணவ ஆழ்வார்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 15

நடைபெறவுள்ள இந்து சமய மாநாட்டில் ஸ்ரீ வைணவ சமய ஆழ்வார்களது ஸ்ரீ திவ்விய பிரபந்த திருவாய்மொழி திருப்பாசுரங்களது இந்து சமயக் கருத்துக்களையும் பேசுவதற்கு ஆவன செய்யவேண்டும் என ஆயர்பாடி ஸ்ரீ ஆழ்வார்கள் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படவுள்ள இந்து ஆராய்ச்சி மாநாடு தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்து மாமன்றத்தின் சமயத் தொண்டுகளுக்கும் 60 வருடப் பூர்த்திக்கும் வாழ்த்துகின்றோம். இந்து என்றால் அதில் நான்கு வேதங்களையும் இதிகாச புராணங்களையும் மூல நூல்களாகக் கொண்ட ஆறு உப சமயங்களும் அடங்கும். இவற்றில் சைவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம் இவைகளை சிறப்புற ஏற்ற நீங்கள் வைணவத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பெயரில்லாத உருவமில்லாத இறைவனை எப்பொருளிலும் எப்பெயரிலும் வழிபடலாம் என்பதால்தான் பல கடவுள் வழிபாடு இந்து சமயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஸ்ரீ வைணவம் சிவப்பரம்பொருளை ஏற்றுள்ளது. ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாமத்தில் ஓம் சிவாயநமக என்ற நாமமும் காணப்படுகின்றது.

எனவே வேறுபாடு பாராட்டாமல் நடைபெறவுள்ள இந்த சமய மாநாட்டில் ஸ்ரீ வைணவ சமய ஆழ்வார்களது ஸ்ரீ திவ்விய பிரபந்த திருவாய்மொழி திருப்பாசுரங்களது இந்து சமயக் கருத்துக்கள் குறித்தும் பேசுவதற்கு ஆவன செய்யவேண்டும்.- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-10)

# தேசிய திறன்கள் தினத்தை முன்னிட்டு கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 14

தேசிய திறன்கள் தினத்தை முன்னிட்டு திறவு நாளும், தொழில் பட்டறைக் கண்காட்சியும் யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் நேற்று ஆரம்பமாகி, இன்று காலை 9மணி முதல் மாலை 4மணி வரையும் நடை பெறுகின்றது.

இந்தக் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் தொழில் கல்வி தொடர்பான விரிவான விளக்கங்களையும், தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி உதவிப் பணிப்பாளர் கே.சாந்தகுமார் தெரிவித்தார். (ந-ரி)

# கொக்குவில் இந்துவுக்கு சர்வதேச விருது

யாழ்ப்பாணம், ஜூலை 15

பாடசாலைகளுக்கு இடையே சர்வதேச மட்டத்தில் இடம்பெற்ற கலைத்திட்ட நடைமுறைத் தெரிவில் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி சர்வதேச விருதை பெற்றுள்ளது.

கொழும்பில் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் இந்த விருது பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தனிடம் பிரிட்டிஷ் கவுன்ஸில் நிறுவனத்தினரால் கையளிக்கப்பட்டது. (ந-ரி)

# அரச சாராயம் வைத்திருந்த நபருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 15

2 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் அரச சாராயம் உடைமையில் வைத்திருந்த வன்னி வாசியொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 25 அயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ந-9)

# வேலை தேடுவோர் பதிவு செய்யலாம்

யாழ்ப்பாணம், ஜூலை, 15

யாழ்.மாவட்ட செயலத்தின் ஏற்பாட்டில் வேலணைப் பிரதேசத்தில் வேலைதேடும் இளைஞகள் குறித்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. நாளை வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் பி.ப 4 மணி வரை இந்த பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஜே/ 7,8,9 கிராம அலுவலர் பிரிவினர் ஜே /7 கிராம அலுவலர் பிரிவிலும், ஜே/ 10 கிராம அலுவலர் பிரிவினர், ஜே/ 10 கிராம அலுவலர் பிரிவிலும், ஜே /11 கிராம அலுவலர் பிரிவினர் ஜே/ 11 கிராம அலுவலர் பிரிவிலும்,

ஜே/ 12,13,15,16 பிரிவினர் வேலணைப் பிரதேச செயலகத்திலும், ஜே /14 பிரிவினர் ஜே/ 14 கிராம அலுவலர் பிரிவிலும்,

ஜே/17 பிரிவினர் ஜே/17 கிராம அலுவலர் பிரிவிலும், ஜே /18 பிரிவினர் ஜே/ 18 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகத்திலும்,

ஜே/ 19 பிரிவினர் ஜே /19 கிராம அலுவலர் பிரிவிலும், ஜே /20,21 பிரிவினர் ஜே /20 கிராம அலுவலர் பிரிவிலும்,

ஜே/ 22,23 பிரிவினர் ஜே/ 23 கிராம அலுவலர் பிரிவிலும் ஜே/ 24,25,26 பிரிவினர் ஜே /26 கிராம அலுவலர் பிரிவிலும்,

ஜே /27 பிரிவினர் ஜே /27 கிராம அலுவலர் பிரிவிலும் ஜே/ 28,29,30,31 பிரிவினர் பெருங்காடு ஆர்.டி.எஸ்இலும்,

ஜே /32 பிரிவினர் ஜே/ 32 கிராம அலுவலர் பிரிவிலும், ஜே /33 பிரிவினர் ஜே /33 கிராம அலுவலர் பிரிவிலும் ஜே/ 34 பிரிவினர் ஜே /34 கிராம அலுவலர் பிரிவிலும், ஜே/ 35 பிரிவினர் ஜே/ 35 கிராம அலுவலர் பிரிவிலும், ஜே/ 36 பிரிவினர் ஜே /36 கிராம அலுவலர் பிரிவிலும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என வேலணை பிரதேச செயலர் திருமதி.ச.மஞ்சுளாதேவி தெரிவிதுள்ளார். (ந-10)

# ஆசிரிய கலாசாலை முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 15

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றம் முன்னெடுக்கும் முத்தமிழ் விழா இன்றும் நாளையும் கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறுகின்றது. இன்று காலை 8.30 மணிக்கு கலாசலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நாடக விழா ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், யாழ். பல்கலைக்கழக கல்வியியற் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிட்டுக்குருவி, சூரியன் நிலவாக, யாரொடு நோகேன், அகல்விளக்கு ஆகிய நாடகங்கள் போட்டி அடிப்படையில் மேடையேறவுள்ளன. முதலாம் நாள் நிறைவு நிகழ்வாக காத்தவராயன் சிந்துநடைக் கூத்து இடம்பெறவுள்ளது. அத்துடன் கலாசாலை ஆசிரிய பயிலுநர்களின் தயாரிப்பாக அமைந்த வற்றுப்பெருக்கு, திருப்பம் ஆகிய குறும்படங்கள் வெளியிடப்பட்டுத் திரையிடப் படும்.

இரண்டாம்நாள் நிகழ்வுகள் நாளை காலை 8.30 மணிக்கு பண்பாட்டு ஊர்வலத்துடன் ஆரம்பமாகும். கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் பிரதம விருந்தினராகவும், கலாசாலையின் ஓய்வுநிலைப் பிரதி அதிபர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு இனிய விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முத்தமிழ் விழாவையொட்டி நடத்தப்பட்ட இயல், இசைத்துறை சார்ந்த நிகழ்வுகளில் முதன்மை இடம்பெற்றோரின் ஆற்றுகைகள் மற்றும் தாருகாவன முனிவர்கள் என்ற பொருளில் அமைந்த நாட்டிய நாடகம், பாஞ்சாலி சபதம் என்ற பொருளில் அமைந்த நாட்டுக் கூத்து என்பனவும் இடம்பெறவுள்ளன. முத்தமிழ் விழாவையொட்டி நடத்தப்பட்ட இயல், இசை,நாடகம் சார்ந்த போட்டிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ந-10)

# இந்து தர்மாசிரியர் பரீட்சை நவம்பரில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைத் திணைக்களத்தால் வருடந்தோறும் நடத்தப்படும் இந்து தர்மாசிரியர் பரீட்சை எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ளது. அதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் கோரியுள்ளது.

அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இதுவரை கிடைக்கப் பெறாத அறநெறிப் பாடசாலைகள் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு பரீட்சைகள் திணைக்களம் கேட்டுள்ளது. பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒருங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப இறுதித் திகதி எதிர்வரும் ஓகஸ்ட் 27 ஆம் திகதியாகும். ஆதலால் அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு திணைக்களம் கேட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறாத அறநெறிப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் தமது நிறுவனத்தினூடாக விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்ப முடியும். அவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்க முடியாது. சகல விண்ணப்ப தாரிகளும் அறநெறிப் பாடசாலையினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும். தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும் என்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ந-4)

**பணிப்பெண் தேவை**

வயதான பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் நற்பண்புடைய பெண் பணியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 627 7332

**தேவை**

சித்தங்கேணியிலுள்ள தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றுக்கு கணினி அறிவுடைய பெண் பணியாளர் தேவை.(சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. Km, 3Km சுற்றுவட்டாரத்திலுள்ளவர்களும் விரும்பத்தக்கது)

தொடர்பு: 021 225 0727, 077 087 1378

(63047) (3.5)

**மணமகள் தேவை**

ஜேர்மனியில் பணிபுரியும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த 57 வயதுடைய இந்து சமய மணமகனுக்கு நாற்பது ஐம்பது வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை

தொடர்பு: 071 406 5720

**பெயர் மாற்றம்**

இல. 37A பொன்னகர் மத்தி, கிளிநொச்சி என்னும் முகவரியில் வசிக்கும் சந்தனம் பார்த்தியம்மா ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து தோமஸ் மாக்றெட் என மாற்றுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்.

தோமஸ் மாக்றெட்

**வீடு வாடகைக்கு உண்டு**

53,ராணிவீதி, நல்லூரில் கல்வித்திணைக்களத்திற்கும் சந்தைக்கும் 100M தொலைவில் சகல வசதிகளுடன் கூடிய புதுவீடு வாடகைக்கு உண்டு. (உத்தியோகஸ்தர் தொடர்பு கொள்ளவும்.)

தொடர்பு: 0770496639 , 077 721 0330

(63050)(3.5.6)



* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

**மாடி வீடும் காணியும் விற்பனைக்கு**

உரும்பிராயில், இலக்கம் 6, பழைய டிஸ்பென்சரி ஒழுங்கையில் ஏழுஅரை(7½) பரப்புக் காணியில் அமைந்துள்ள மூன்று அறைகள், பெரிய சமையலறை, இரண்டு வரவேற்பறைகள், (HALL), STORE ROOM, இரண்டு குளியல் அறைகள், இரண்டு கழிவறைகள், மோட்டர் பூட்டிய கிணறு, மூன்று பக்க மதிலுடன் மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : ராசா : 021 223 1148

இளங்கோ :004 474 174 44910

**பதவி வெற்றிடம் @ சாவகச்சேரி**

கணினிப் போதனாசிரியர் (முழுநேரம் - பெண்கள்)

Ms Office / Graphic Designing/ Web Designing/ Accounting Packages.

Ability to Tech in English & Tamil

நீங்கள் இப்பதவிக்கு தகுதியானவர் எனின் உங்கள் சுயவிவரக்கோவையை கீழ்வரும் முகவரிக்கு 7நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

DBMS COMPUTER EDUCATION
215, கண்டி வீதி, சாவகச்சேரி.
(பிரதேச செயலகத்திற்கும் ஆதாரவைத்தியசாலைக்கும் இடையில்)

(60561) (3,9,6)

**தேவை**

கிச்சின் உதவியாளர், (ஆண்,பெண்) மேசை சப்ளை (ஆண், பெண்) வேலைக்கு ஆள்கள் உடன் தேவை.
செட்டி நாட்டு உணவகம் லக்கி ஹோட்டல்
இல.584, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 077 998 1896

**கொள்வனவு**

ஊர்ச்சேவல், ஊர்ப்பேடு, கல்பேட் தினமும் கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.

விவரம்: தாசன் பாம், 152/8, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(63044) (9.3)

**பணியாளர் தேவை**

பிரபல அழகு நிலையம் ஒன்றில் பணியாற்றுவதற்கு அழகுப்பயிற்சி பெற்ற பெண் பணியாளர் தேவை.

தொடர்பு: 077 627 7332

(63045) (9.3)

# சாவகச்சேரி மருத்துமனையில் விபத்துப் பிரிவு அமையுமா?

## தென்மராட்சி மக்கள் கவலை

தென்மராட்சி, ஜூலை 15

சாவகச்சேரி மருத்துவமனையில் 200 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட விபத்து சிகிச்சைப் பிரிவுக்கான வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாமை குறித்து கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருட முற்பகுதியில் சுகாதார அமைச்சால் வடபகுதியில் இரு மருத்துவமனைகளில் விபத்து சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த நிதியில் சாவகச்சேரி, வவுனியா ஆகிய மருத்துவமனைகளில் விபத்து சிகிச்சை விடுதிகள் நிர்மாணிக்கப்படவுள் ளன என் றும் மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அறிவித்திருந்தார்.

அவர் இவ்வாறு தெரிவித்து ஆறு மாதங்கள் கடந்துள்ள நிலையில் அதற்கான எந்தவொரு ஆரம்பக் கட்ட வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் ஏ-9 வீதியுடன் இணைந்துள்ள சாவகச்சேரி மருத்துவமனைக்கு ஆனையிறவு தொடக்கம் நாவற்குளி வரையிலான பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும், பூநகரி பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் சிகிச்சைக்காக சேர்க்கப்படுகின்றனர். வீதி விபத்துக்களில் சிக்கி தினமும் மூன்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டுவரப்படுகின்றனர் என்றும், அவர்களில் சரா சரியாக ஒருவர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகின்றார் என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் விபத்துச் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படுவது பொதுமக்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அண்மையில் சாவகச்சேரி மருத்துமனையால் விடுக்கப்பட்ட செய்தி அறிக்கைகளில் கடந்த ஆறு மாதங்களில் வீதி விபத்துக்களில் காயமடைந்து 275 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் அவர்களில் 62 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ற-9)

## கர்நாடக இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 15

சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறையின் முன்னாள் தலைவரும், பேராசிரியருமான முனைவர் பிரமிலா குருமூர்த்தியின் கர்நாடக இசை நிகழ்ச்சி நாளை வியாழக்கிழமை மாலை 5மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இவர் தலைசிறந்த இசை ஆய்வாளர் என்பது மட்டுமல்லாது கர்நாடக இசை, தமிழிசை, ஹிந்துஸ்தான் இசை, கதாகாலேட்சபம் மெல்லிசை, பக்தி இசை என பல்வேறு அரங்க இசை வடிவங்களிலும் கைதேர்ந்தவராவார்.

இவரது இசை நிகழ்ச்சிக்கு அணி செய் கலைஞர்களாக உள்நாட்டு இளங்கலைஞர்கள் பங்கேற்கிறார்கள். (ற)

## அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபராக திரிகரன்

அச்சுவேலி, ஜூலை 15

அச்சுவேலி மத்திய கல்லூரியின் அதிபராக எஸ்.திரிகரன் நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி வந்த வே.அரசசேகரி கடந்த ஜனவரி மாதம் முதல் விடு முறையில் சென்றதையடுத்து பதில் அதிபர் கடமையை திருமதி யோ.சந்திரகுமார் மேற்கொண்டு வந்தார்.

ஊரெழு கணேச வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி வந்த எஸ்.திரிகரன், அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து அவர் தனது கடமைப் பொறுப்புக் களை கடந்த வாரம் ஏற்றுக்கொண்டுள்ளார். (ற-11)

## ஆடிப்பிறப்பு விழா நிகழ்வு

தென்மராட்சி, ஜூலை 15

வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பண்பாட்டுத் திணைக்களத்தால் ஆடிப்பிறப்பு விழா நாளை மறுதினம் 17 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் சிறப்புரைகளை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர் பிரதி அதிபர் ச.லலீசன், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ற-9)

## வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரம் மற்றும் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவை தொடர்பாக அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பரீட்சைத் திணைக்களத்தால் கூட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

நாளை மு.ப. 10 மணிக்கு பரீட்சைத் திணைக்களத்தின் ஆறாம் மாடியில் உள்ள கன்னங்கரா கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சைக் காலத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதால் பரீட்சை தொடர்பான ஒழுங்குகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லாச்சி தம்பிமுத்து



மலர்வு 16.02.1923 உதிர்வு 03.07.2015

புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் பிரான்ஸைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லாச்சி தம்பிமுத்து 03.07.2015 பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் மீனாட்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் ஆறுமுகம் - சின்னாச்சி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பாக்கியம், செல்லத்துரை, இராஜதுரை மற்றும் பொன்னுத்துரை, தம்பித்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற தம்பிமுத்துவின் பாசமிகு மனைவியும் திருமதி மகேஸ்வரி குணரத்தினம்(இளைப்பாறிய ஆசிரியர் கனடா) காலஞ்சென்ற கணேசன் (கட்டட தொழிநுட்ப பரிசோதகர்), துரைராசா(இளைப்பாறிய தபாலதிபர், கனடா), யோகநாதன்(இளைப்பாறிய இ.போ.ச சாலை முகாமையாளர் பருத்தித்துறை), நவரத்தினராசா(நவம்- பிரான்ஸ்), குகதாசன்(இளைப்பாறிய தபாலதிபர்), ஜெயபவானி(ஆசிரியர்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குணரத்தினம்(இளைப்பாறிய வானொலித் தொடர்பு இயக்குநர், சிங்கப் படையணி), சுந்தரலிங்கம்(குட்டி-பிரான்ஸ்), சௌபாக்கியவதி, முருகாம்பிகை, காலஞ்சென்ற புஸ்பமலர்(பேபி), உமாதேவி, சுசீலா, விஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌசல்யா, துஸ்யந்தி பிரபாலினி, யசோதா, சுரேஸ் ரோகிணி, பிரகலாதன்(பவன்), அருள்நங்கை, மகிழ்நங்கை, மகிழ்மாறன், எழில்மேனன் நவீத்தா, ஜனனி, சிந்து, குகப்பிரியா, குகப்பிரசாத், காலஞ்சென்ற பிரியந்தி மற்றும் ஆதவன், கனிமொழி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் இன்று (15.07.2015) புதன் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

அச்சுவேலி
தொ.பே.இல- 021 205 8636

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி முருகானந்தா

(முன்னாள் அரச உத்தியோகத்தர், நீதி மன்றம் - கம்பளை, துறைமுக ஆணைக்குழு - கொழும்பு, கல்வி வெளியீட்டுத்திணைக்களம் - கொழும்பு, சிறுவர் நன்நடத்தை திணைக்களம் - யாழ்ப்பாணம்,முன்னாள் வருகை விரிவுரையாளர் பல் தொழில் நுட்பக் கல்லூரி - கொக்குவில்)



பிறப்பு 17.08.1945 இறப்பு 14.07.2015

கொக்குவில் பிரம்படி லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி முருகானந்தா 14.07.2015 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் முருகானந்தாவின் (முன்னாள் யோகாசன பயிற்றுவிப்பாளர் - யாழ், தெல்லிப்பழை, மந்திகை அரசினர் வைத்திய சாலை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நல்லையா பரமேஸ்வரி தம்பதியின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி தம்பியப்பா தம்பதியரின் அன்பு மருமகளும் பவளரத்தினம், சிவராஜா, ஈஸ்வரராஜா, சரோஜினிதேவி, கமலேஸ்வரி, சிவானந்தராஜா, சற்குணராஜா, பத்மினி, பத்மநாபபூஷணி, ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2015) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரம்படி லேன்,
கொக்குவில்.
021 222 5144

ந.சிவராஜா
ந.ஈஸ்வர ராஜா } சகோதரர்

(63048)(3.7.9)

## மரண அறிவித்தல்

### சுந்தரம் வின்சன் குலராஜா



யாழ். உடுப்பிட்டி Church lane ஐப் பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் வின்சன் குலராஜா 11.07.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் ஆரோக்கியம் ரட்ணா தம்பதிகளின் அன்பு பெறா மகனும் ராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் கெவின், அவ்ரிலின் அன்பு அப்பாவும் குமாரணி (லண்டன்), மகாராணி (லண்டன்), மகாராஜா (பேபி-லண்டன்) வெஸ்லி, ஜெயராஜா (ஜெயா-லண்டன்), தனுஷா(லண்டன்), காலஞ்சென்ற பூமணி ஞானசௌந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் Dr ஜேம்ஸ்(லண்டன்), செல்வராஜா (லண்டன்), மகாராணி(லண்டன்), சிந்தியா (லண்டன்), பாலகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜொனத் தன், சாரன், நிரோஷ்னி, ஜேசன், சாமளி, மகிலினி, ஐக்கின், லொறென், கோட்னி, நிலக்ஷி, டிலக்ஷி, வரோஷன், கோபு, பாபு, சசி ஆகியோரின் அன்பு அங்கிளும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இன்று (15.07.2015) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு ஆராதனைகள் இடம்பெற்று பி.ப 4.00 மணிக்கு மாதம்பிட்டி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

No.65/376, Vystwyke Road,
Crow Island, Colombo - 15.
T.P - 077 888 0132
011 426 7861

(சி.17830)(45.7.3)


தகவல்:
குடும்பத்தினர்.

# விண்வெளியில் சோலர் நிலையம்



விண்வெளி ஆராய்ச்சியில் பல சாதனைகளைப் படைத்துள்ள அமெரிக்காவைச் சேர்ந்த நாசா நிறுவனம், விண்வெளியில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்க முயற்சி மேற்கொள்கிறது.


அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான நாசாவில் விண்வெளியை மையமாக வைத்து பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் விண்வெளியில் நாசாவுக்கு நிரந்தர ஆராய்ச்சி மையமே இருக்கிறது. இந்த நிலையில் நாசா தற்போது விண்வெளியில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கான மிகப்பெரிய திட்டத்தில் இறங்கியுள்ளது.



இதற்கான சன் டவர், ஸ்பேல் ஆல்பா, ஸ்பேஸ் டக்போட்ஸ், சான்விட்ச் கான்செப்ட் என பல திட்டங்கள் ஆய்வு நிலையில் உள்ளன. இதற்காக சுமார் 75 ஆயிரம் கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ள நாசா, இந்த திட்டத்துக்காக ரூ. 1.26 லட்சம் கோடி வரை செலவாகும் என மதிப்பிட்டுள்ளது.

இந்தத் திட்டங்களில் ஒன்றான சன் டவர் திட்டத்தின் மூலம், சோலார் தகடுகளை தரையிலிருந்து வானுக்கு அமைத்துச் செல்ல உள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும், ஸ்பேஸ் ஆல்பா திட்டத்தின் மூலம், சோலர் தகடுகளை அமைத்து செய்மதி போல வானில் பறக்க விட உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திட்டங்களின் மூலம் சேமிக்கப்படும் மின்சாரம் மின் அலைகளாக மாற்றப்பட்டு, பூமியின் தரைப் பகுதி சேமிப்பு நிலையத்துக்கு அனுப்பப்பட உள்ளது. மேலும், இந்த அசாத்தியமான புதிய திட்டங்களின் மூலம் பூமியில் 365 நாள்களும் 24 மணி நேரமும் மின் உற்பத்தி செய்ய முடியும் என்று நாசா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அதி வினைத்திறன் வாய்ந்த கணினி சிப் உருவாக்கம்

கணினி மற்றும் துணைச்சாதன வடிவமைப்பில் பிரபல்யமான நிறுவனங்களுள் ஒன்றான IBM நிறுவனம், அதி வினைத்திறன் வாய்ந்த உலகின் முதலாவது கணினி சிப்பினை உருவாக்கியுள்ளது.

இதில் 7 நனோ மீற்றர் நீளமுடைய சிலிக்கன், ஜேர்மானியம் கலவை கொண்ட ட்ரான்ஸ்சிஸ்டர்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அதேவேளை இதுவரை பாவனையில் இருக்கும் சிப்கள் 14 நனோ மீற்றர்கள் உடைய ட்ரான்ஸ்சிஸ்டர்களைக் கொண்டதாகவே இருக்கின்றன.

ட்ரான்ஸ்சிஸ்டர்கள் சிறியதாக இருப்பதனால் ஒரு சிப்பினுள் மேலும் அதிகளவு உள்ளடக்கப்பட முடியும். இதனால் ஸ்மார்ட் கைபேசிகள், லப்டொப் மற்றும் கணினிகளின் செயற்பாட்டு வேகத்தை அதிகரிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கைபேசிகளின் தொடுதிரையில் பாதிப்பா?

தொடுதிரைத் தொழிநுட்பத்தைக் கொண்ட ஸ்மார்ட் கைபேசிகள் தற்கால உலகை ஆக்கிரமித்து வருகின்ற அதேவேளை, அதிகளவானவர்களின் கைகளில் தவழ்கின்றன. இந்தக் கைபேசிகளில் காணப்படும் முக்கியமான பிரச்சினையாக தொடுதிரையை பாதுகாத்தல் காணப்படுகின்றது. இந்த பிரச்சினைக்கு தீர்வாக புதிய வகை பிளாஸ்டிக் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிளாஸ் டிக்கில் கீறல்கள் ஏற்படும்போது விசேட இரசாயனப் பதார்த்தம் ஒன்று இடுவதன் மூலம் குறித்த கீறல்கள் தானாகவே மறைந்து விடும்.

மேலும் அது 3 சென்ரி மீற்றர்கள் வரையான துளைகளையும் தானாகவே இல்லாமல் செய்யும் ஆற்றல் கொண்டது.

இதனை அமெரிக்காவின் Illinois பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொறியியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் நினைவுநாள் யாழ்.மார்ட்டீன் வீதியிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபையின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-4)

## ஐ.ம.சு.கூட்டமைப்பின் இப்தார் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் காத்தான்குடி மத்திய குழு ஏற்பாடு செய்த புனித இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை காத்தான்குடி கடற்கரை மைதானத்தில் இடம்பெற்றது.

மத்திய குழுவின் தலைவர் எம்.எச். ஏ.பஷீர் ஜேபி தலைமையில் இடம்பெற்ற இந்த இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம வேட்பாளர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், வேட்பாளர்களான எம்.எஸ்.எம். சுபைர், இ. சாணக்கியன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பரீட், முன்னாள் காத்தான்குடி நகர சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பர், உலமாக்கள் உட்படப் பொது மக்கள் பலரும் கலந்துகொண்டனர். (ற-10)




## சப்ரகமுவ கல்வி அதிகாரிகள் தென்மராட்சிக்குச் சுற்றுலா

தென்மராட்சி, ஜூலை 15

சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் அடங்கிய 50 பேர் கொண்ட குழு நேற்றுமுன்தினம் தென்மராட்சி கல்வி வலயத்துக்கு இரு நாள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டனர்.

இவர்கள்தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, கைதடி கலைவாணி வித்தியாலயம், நாவற்குளி மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்குச் சென்று பார்வையிட்டனர்.






நாட்டில் நிரந்தர அபிவிருத்திக்கு அடிப்படையாகத் தேவையாக இருக்கின்ற சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வேலைத் திட்டங்களில் ஒன்றாக இந்தக் கல்விச் சுற்றுலா அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மகிந்த எஸ்.வீரசூரிய, மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் என்.சிறிசேன ஆகியோருடன்கேகாலை வலயகல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் அடங்கிய 50 பேர் இந்தச் சுற்றுலாவில் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் தலைமையிலான தென்மராட்சி கல்வி வலயத்தினர் இந்தக் குழுவினரை வரவேற்றனர். (ற-9)








மறைந்த இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனின் உடலுக்கு திரையுலக மற்றும் அரசியல் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தியபோது

# இராணுவ உறவை வலுப்படுத்த இந்தியா- தஜிகிஸ்தான் உறுதி

துஷான்பே,ஜூலை 15
மத்திய ஆசிய நாடுகளுக்கு 8 நாள் பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, இறுதிப் பயணமாக நேற்று முன்தினம் இரவு கிர்கிஸ்தானிலிருந்து தஜிகிஸ்தான் சென்றடைந்தார். அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன்பின்னர் தஜிகிஸ்தான் ஜனாதிபதி எமோமாலி ரகுமானுடன், பல விடயங்கள் குறித்து பிரதமர் மோடி பேசினார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைக்க தஜிகிஸ்தான் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதற்காக, ஜனாதிபதி எமோமாலிக்கு மோடி பாராட்டுத் தெரிவித்தார். அவருக்கு 17 ஆம் நூற்றாண்டு இந்திய கவிஞர் அப்துல் காதிர் பெடில் நினைவிடத்தின் வரைபடத்தையும் பிரதமர் மோடி பரிசளித்தார். அப்துல் காதிர் பெடில் தஜிகிஸ்தானில் சிறந்த பாரசீக மொழிக் கவிஞராக போற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



அதன்பின்னர் கூட்டாக அளித்த பேட்டியில் பிரதமர் மோடி கூறியதாவது: தீவிரவாதம் உருவாகும் இடத்துக்கு அருகில் இந்தியாவும், தஜிகிஸ்தானும் அமைந்துள்ளன. தீவிரவாதம் அதிகரித்துவரும் வேளையில், நாம் எமது உறவை வலுப்படுத்த முடிவு செய்துள்ளோம். தீவிரவாதத்துக்கு எதிராகப் போரிடுவது ஒத்துழைப்பில் மிகவும் முக்கிய பகுதி. எனவே, இரு நாடுகளும் இராணுவ உறவை வலுப்படுத்த முடிவு செய்துள்ளோம். தஜிகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள ஆப்கானிஸ்தானின் நலனில்,இரு நாடுகளும் அதிக அக்கறை செலுத்துகிறோம். இரு நாடுகளுக்கும் இடையேயான போக்குவரத்துத் தொடர்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசித்தோம். சர்வதேச வடக்கு தெற்குப் போக்குவரத்தை மேம்படுத்த ஒப்புக் கொண்டுள்ளோம்.

இதன் மூலம் மத்திய ஆசிய மற்றும் தெற்கு ஆசியா இடையே போக்குவரத்துத் தொடர்பு ஏற்படும். மத்திய கிழக்கு நாடுகளிலேயே இந்தியாவுக்கு அருகில் உள்ள நாடு தஜிகிஸ்தான். குறுகிய இடைவெளியால் இரு நாடுகளும் பிரிந்து இருக்கிறோம். எம்மிடையே வர்த்தகம் அதிகரிக்க போக்குவரத்து வசதி மிகவும் முக்கியம். முதலீடு மற்றும் கூட்டு முயற்சித் திட்டங்களை மேம்படுத்துவது குறித்து நாங்கள் ஆலோசித்தோம். எதிர்கால திட்டங்களை இறுதி செய்ய இரு நாடுகளின் கூட்டுக் குழு விரைவில் கூடி விவாதிக்கும். இரு நாடுகளுக்கும் விவ சாயம் மிக முக்கியம். இந்தத் துறையில் இரு நாடுகளும்இணைந்துசெயற்படும். இவ்வாறு மோடி தெரிவித்துள்ளார்.(ஐ)

## வடகொரிய இராணுவத் தளபதி கொல்லப்பட்டமை நிரூபணம்

சியோல்,ஜூலை 15
வடகொரியாவின் புதிய இராணுவத் தளபதியாக, பாக் யங் சிக் நியமிக்கப்பட்டுள்ளார். அதன் மூலம், முன்னாள் இராணுவத் தளபதி ஹியான் யாங் சோல், கொல்லப்பட்டமை உறுதியாகியுள்ளது.

ஹியான், வடகொரிய ஜனாதிபதி கிம்ஜங் உன் குறித்த தனது அதிருப்தியை, சிலரிடம் இரகசியமாகப் பகிர்ந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. இந்த ரகசியம், கிம் காதுக்கு எட்டவே அது, அவருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில் ஒரு நிகழ்ச்சியில் கிம் உரையாற்றிக் கொண்டிருந்த போது, ஹியான் கண்ணயர்ந்துள்ளார். இதைத் தனக்கு ஏற்பட்ட அவமரியாதையாகக் கருதிய கிம், ஏற்கனவே ஹியான் மேல் இருந்த கோபத்தில், அவரைப் பொதுமக்கள் முன்னிலையில், துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல உத்தரவிட்டார். அதன்படி, இரு மாதங்களுக்கு முன்னர் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதைத் தென்கொரிய உளவு அமைப்பு பகிரங்கப்படுத்தியது.

இந்த நிலையில் புதிய இராணுவத் தளபதியாக, பாக் யங் சிக் நியமிக்கப்பட்டுள்ளார் என்ற குறித்த அறிவிப்பை, வடகொரியா நேற்று முன்தினம் வெளியிட்டது. இதன் மூலம்,ஹியான் உயிருடன் இல்லை என்பதை வட கொரியா ஒப்புக் கொண்டுள்ளது. கிம் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற மூன்றரை வருடங்களில் 70 உயர் அதிகாரிகளைக் கொன்று குவித் துள்ளார். அரசியலில் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளவும், பிறரை அச்சுறுத்தவும், அவர் இது போல் நடந்து கொள்வதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)



# சீனாவை உலுக்கிய சூறாவளி

பீஜிங்,ஜூலை 15
சீனாவில் கடந்த சில நாள்களாகப் பெய்து வந்த கனமழை காரணமாக 'சான் ஹோம்' சூறாவளி பலவீனமடைந்து வடகொரியப் பகுதிக்கு நகர்ந்துள்ளது.

கடந்த 1949 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போதைய சூறாவளிதான் அதிபயங்கரமானது என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஜப்பானின் ஒகினாவா தீவுத் தொடர் மற்றும் தைவானுக்கு இடையில் உருவான இந்த சூறாவளி பிலிப்பைன்ஸைக் கடந்தபோது ஐந்து பேர் உயிரிழந்தனர். அங்கிருந்து கடந்த சனிக்கிழமை சீனாவின் ஜோவுஷான் நகர் உட்பட ஒன்பது நகரங்களைச் சூறாவளி தாக்கியது. அதன் காரணமாக பலத்த காற்றுடன் கூடிய கனமழை கொட்டியது.

இதனால் மூன்று லட்சத்துக்கும் அதிகமான வீடுகளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டது.



வெள்ளத்தில் சிக்கிய 11 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் இந்தச் சூறாவளி வலுவிழந்து புயலாக மாறி வடகொரியாவின் கரையைக் கடக்கும் என்று கூறப்பட்ட நிலையில் வடகொரிய மற்றும் தென்கொரிய நாடுகளில் முன்னாயத்த நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுகிழமை முதல் அங்கே பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதால் 12 விமான நிலையங்களில் நூற்றுக்கணக்கான விமானங்களது பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## அனைவருக்கும் மரபணுப் பரிசோதனை மறுத்தால் சிறைதண்டனை

குவைத்,ஜூலை 15
குவைத் நாட்டில் வசிக்கும் அனைவரும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும் எனும் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அதன்படி அந்த நாட்டின் பிரஜைகளான 1.3 மில்லியன் மக்களுக்கும், வெளிநாட்டவர்களாக அங்கு இருக்கும் 2.9 மில்லியன் பேருக்கும் மரபணுப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்பான தரவுகள் தேசிய தரவுத்தளத்தில் பதிவு செய்யப்படவுள்ளன.

இந்தப் பரிசோதனை செய்யாதவர்களுக்கு ஒரு வருட சிறைத்தண்டனை மற்றும் 33 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அபராதமாக விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போலியான மரபணுத் தகவல்களை வழங்குபவர்களுக்கு 7 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கிரீஸ் நாட்டின் கடன் விவகாரம் முடிவுக்கு

## புதிய ஒப்பந்தம் ஏற்பு

ஏதன்ஸ்,ஜூலை15
கீரிஸ் நாட்டின் கடன் விவகாரம் தொடர்பாக ஐரோப்பிய நாடுகளின் நிதி அமைச்சர்களுடன் நடைபெற்ற பேச்சின் முடிவில், கிரீஸ் நாட்டுக்கு 50 பில்லியன் யூரோக்கள் நிதியுதவி வழங்க ஐரோப்பிய நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன.

பெல்ஜியம் தலைநகரான பிரஸ்ஸல்லில் நடைபெற்ற 17 மணி நேரப் பேச்சில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நிதி அமைச்சர்கள் பங்கேற்றனர். இந்த நிலையில் கிரீஸ் நாடு மூன்றாவது முறையாகக் கொண்டு வந்த கடன் உடன்பாட்டு ஒப்பந்தத்துக்கு ஐரோப்பிய நிதி அமைச்சர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகப் பேசிய நிதி அமைச்சர்கள் குழுவின் தலைவர், கிரீஸ் நாட்டின் கோரிக்கைகளை ஏற்று அந்த நாட்டின் பொருளாதாரம் இயல்பு நிலைக்கு திரும்பும் வகையிலும், பல உள்நாட்டு சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள உதவியாகவும் சுமார் 50 பில்லியன் யூரோக்களை வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியுதவியைப் பெறுவதற்கு கிரீஸ் நாடு பல உள்நாட்டு பொருளாதார சீர்த்திருத்தங்களை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும்.



இந்தச் சீர்த்திருத்தங்கள் தொடர்பான அறிவிப்பை இன்று புதன்கிழமை கிரீஸ் நாட்டு நாடாளுமன்றத்தில் வெளியிட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

கிரீஸ் நாட்டின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைவதைத் தடுக்கவும், கிரீஸ் நாடு ஐரோப்பிய நாடுகளின் உறுப்பினர் பட்டியலிலிருந்து வெளியேறும் நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகவுமே அனைத்து நிதி அமைச்சர்களும் ஒருமனதாக இந்த ஒப்பந்தத்துக்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

கிரீஸ் நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ள 50 பில்லியன் யூரோ நிதியில் 25 பில்லியன் யூரோவை அந்த நாட்டின் வங்கிகளுக்கு மறுமூலதனமாக வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

உலகளவில் சர்ச்சையை ஏற்படுத்தி வந்த கிரீஸ் நாட்டுக் கடன் பிரச்சனை விவகாரம் தற்போது முடிவுக்கு வந்துள்ளதால், கிரீஸ் நாட்டில் மூடப்பட்டுள்ள வங்கிகள் விரைவில் திறக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## உடல் பருமனால் உயிரிழப்பு அதிகரிப்பு



லண்டன்,ஜூலை 15
பிரிட்டனில் உடல் பருமனால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை தடுக்கும் விதத்தில், இனிப்பு அதிகம் சேர்க்கப்பட்டுள்ள திரவ உணவுகள் மீது உள்ள வரியை அதிகரிக்க வேண்டும் என மருத்துவர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரிட்டனில் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை மக்கள் பின்பற்றுவதில்லை என மருத்துவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். சீனியின் அளவு அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளை அதிகமானோர் பெருமளவில் கொள்வதால் ஒபிசிட்டி எனப்படும் உடல் பருமன் நோய்க்கு ஆளாகின்றனர். தரமான மற்றும் ஆரோக்கியமான உணவுகளை உண்ணாததால், பல நோய்களுக்கு உள்ளாகி வருடத்துக்கு சுமார் 70 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் எனப் பிரிட்டன் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகரிக்கும் இந்த இறப்புக்களைத் தடுக்கும் விதத்தில் சீனி அதிகம் சேர்க்கப்பட்ட திரவ உணவுகள் மீது சுமார் 20 சதவிகிதம் வரை வரி விதிக்கவேண்டும்என அரசுக்கு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா, மெக்சிகோ உள்ளிட்ட மாகாணங்களில் உடல்பருமனைக் கட்டுப்படுத்த இனிப்புக் கலந்த திரவ உணவுகள் மீது வரியை அதிகரித்துள்ளதால் அவற்றை வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதே முறையை பிரிட்டனிலும் பின்பற்றினால், உடல் பருமனால் இறக்கும் நபர்களின் எண்ணிக்கையை நிச்சயமாகக் குறைக்கலாம் என மருத்துவர்கள் அரசுக்கு வலியுறுத்தியுள்ளனர். (ஐ)

## ஆசிரியையை குத்திக் கொன்ற பெண்ணுக்கு சாவுத் தண்டனை

ரியாத், ஜூலை 15
அமீரகத்தில் உள்ள அபுதாபியைச் சேர்ந்த அல்–ஹாஸ்மெனி என்ற பெண், கடந்த வருடம் டிசெம்பர் மாதம், அபுதாபி நகர வணிக வளாகம் ஒன்றில் அமெரிக்காவைச் சேர்ந்த மழலையர் பாடசாலை ஆசிரியை இபோல்யா ரியான் என்பவரைக் கத்தியால் குத்தி கொன்றார்.

முன்னதாக அவர் அமெரிக்க வைத்தியர் ஒருவரின் வீட்டிலும் குண்டு வைத்தார். அந்தக் குண்டு வெடிப்பதற்கு முன்பாகவே கண்டு பிடித்துச் செயல் இழக்க வைக்கப் பட்டது.

இந்த 2 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட அவர் மீது கொலை வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்ற விசாரணையின் போது, தான் மனநிலை பாதிக்கப்பட்டதால் இந்தச் செயல்களில் ஈடுபட்டதாக அல்–ஹாஸ்மெனி தெரிவித்துள்ளார். ஆனால் அவர் மனநிலை பாதிக்கப்படாதவர் என்பது மருத்துவ பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து தீவிரவாதி போல் செயல்பட்டதாகக் கூறி அல்–ஹாஸ்மெனிக்கு நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியது. அதன்படி அவருக்கு நேற்று முன்தினம் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. (ஐ)





நியூயோர்க்கில் நடைபெற்ற ஆண்களுக்கான பஷன் வீக் நிகழ்வில் பங்குபற்றிய போட்டியாளர்கள்

## நீருக்குள் மூழ்கப்போகும் பூமி விஞ்ஞானிகள் அதிர்ச்சித் தகவல்

லண்டன்,ஜூலை 15
பூமியிலுள்ள நிலப்பரப்புகள் மறைந்து உலகம் மீண்டும் தண்ணீர் உலகமாக மாறி விடும் என்று ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வு முடிவில் தெரியவந்துள்ளது. இங்கிலாந்தில் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கண்டங்களின் மேலோட்டின் தடிமன் குறைந்து வருவதாகவும், 2 பில்லியன் ஆண்டுகளில் பூமி முழுவதும் மீண்டும் தண்ணீரால் சூழப்படும் எனவும் தெரியவந்துள்ளது.

சுமார் 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் தண்ணீரிலிருந்து நிலம் வெளிவரத் தொடங்கியது. கண்டங்களின் மேலோட்டின் தடிமன், அதன் அதிகபட்ச அளவான 40கி.மீ அளவை ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு எட்டியது. அதன் பின்னர் அதன் தடிமன் குறைந்து வருவதாகவும் கண்டங்களின் மேலோடுகள் அரிப்படைந்து வருவதால், பூமி மீண்டும் நீரில் மூழ்கி விடும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)



## இங்கிலாந்தில் பகுதிநேரப் பணிக்குத் தடை


லண்டன், ஜூலை 15
இங்கிலாந்தில் படிக்கும் மாணவர்களின் பகுதிநேர பணிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் படிக்கும் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் வாரத்துக்கு 10 மணி நேரம் பகுதிநேர ஊழியர்களாகப் பணியாற்றி பணம் சம்பாதிக்க அனுமதிக்கப்பட்டு வந்தனர். அதனால் அங்கு படித்துக் கொண்டே பணம் சம்பாதித்து கல்விச் செலவை சரி செய்து வந்தனர்.

ஆனால் அதற்குத் தற்போது அங்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் முதல் இந்த உத்தரவு நடைமுறைக்கு வரவுள்ளது.

ஐரோப்பிய யூனியன் நாடுகள் அல்லாத வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் அடுத்த மாதம் முதல் வாரத்துக்கு 10 நாள்கள் பகுதி நேரம் பணிபுரியும் உரிமையை இழக்கிறார்கள்.

ஏனெனில் இந்தச் சலுகையைப் பயன் படுத்தி குடியுரிமைக் குற்றத்தில் ஈடு படுபவர்கள் இங்கிலாந்தில் உள்ள வேலை வாய்ப்புகளைச் சட்ட விரோதமாக விற்பனை செய்து வருகிறார்கள். அதை ஏராளமானவர்கள் வாங்கிப் பயன்பெறுகிறார்கள். எனவே, ஐரோப்பிய யூனியன் நாடுகள் தவிர்ந்த பிற வெளிநாடுகளில் இருந்து படிக்க வரும் மாணவர்களுக்கு வழங்கப்படும் விசாவில் சீரமைப்பு செய் யப்படுகிறது.

அதன்படி கல்வி பயில வருபவர்களுக்கு ஆங்கில மொழித் தெரிவு மற்றும் நூற்றுக்கணக்கான போலிக் கல்லூரிகளின் ஸ்பொன்சர் ஷிப் உரிமைகள் நீக்கம், பகுதி நேர வேலைவாய்ப்பு பெறும் மாணவர்களின் விகிதம் குறைப்பு போன்றவை நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. அதன் மூலம் இங்கிலாந்தில் இது போன்று குடியேறுபவர்களின் சலுகைகள் கட்டுப்படுத்தப்படும் என்று இங்கிலாந்து குடியுரிமை அமைச்சர் ஜேம்ஸ் புரோகன்ஷிர் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு மாணவர்கள் பகுதிநேரம் பணி புரியத் தடை விதிப்பது மட்டுமன்றி, அவர்கள் படித்து முடித்த பின்னர் மேலும் இங்கு தொடர்ந்து தங்க விசாவுக்கு விண்ணப்பிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயகம்

செ.உமாசுதன்

தேர்தல் முறைமைகள் பற்றியதான கற்கையும் அறிவும் ஒவ்வொரு நாட்டுக்கும் அந்த நாட்டின் குடிமக்களுக்கும் இன்றியமையாத ஒன்றாகும். கி.மு. 543 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மன்னர்களின் ஆட்சியே நிலவி வந்தது. அதனைத் தொடர்ந்து 1505–1947 வரையான காலம் வரை காலனித்துவவாதிகளின் செல்வாக்கும் அத்தகைய செல்வாக்கின் பிரகாரம் அந்த நாட்டின் முறைமைகளும் எமது நாட்டில் உட்புகுந்தன. இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக அரசியல் அமைப்பின் கீழ் செயற்படும் நிலை இதன் பின்னர் உருவாக்கப்பட்டது.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதலாவது தேர்தல் குறூ மக்கலம் யாப்பின் நிமித்தம் உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1924 ஆம் ஆண்டு மானிங் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. 1947 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 6 ஆவது அரசியல் அமைப்பில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனடிப்படையில் இலங்கையின் இரண்டாவது நாடாளுமன்ற பொது தேர்தல் 1952 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. 3ஆவது நாடாளுமன்ற பொது தேர்தல் 1956 ஆம் ஆண்டும், இலங்கையின் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் 1982 ஆம் ஆண்டும், 2 ஆவது ஜனாதிபதி தேர்தல் 1988 ஆம் ஆண்டும் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து பின் வந்த காலங்களிலும் நாடாளுமன்ற தேர்தல்களும், ஜனாதிபதி தேர்தல்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அரசியல் கட்சிகளை மையப்படுத்திய நவீன பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் அடிப்படை பொறிமுறையாக இருப்பது தேர்தல் முறையாகும். அந்த வகையிலே தேர்தல் முறை அரசாங்கம் அமைப்பதில் பிரதான செல்வாக்கு செலுத்தும் காரணியாகிவிட்டது.

இன்றைய நவீன அரசுகளில் புராதன கிரேக்க நகர அரசுகள் போல மக்கள் நேரடியாக ஆட்சியில் பங்குபற்றுவது சாத்தியமாகாத நிலையில் அவர்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய, தெரிவுசெய்யப்பட்டோர் தமது மக்கள் சார்பாக நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் நவீன ஜனநாயகமானது பிரதிநிதித்துவ ஜனநாயகம் எனப்படுகின்றது. இத்தகைய பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான ஒரு கருவியாக தேர்தல்கள் பயன்படுகின்றது.

தேர்தல் முறை அரசு அமைப் பதில் பிரதான செல்வாக்குச் செலுத்தும் காரணியாகிவிட்டது. இதனை மையமாக வைத்தே ஆட்சியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். பிரதிநிதித்துவத்துக்கு செயலுருக் கொடுக்கும் இந்த தேர்தல் நாட்டின் அரசியல் கட்சிகளது எண்ணிக்கையை தீர்மானிப்பதிலும் கட்சியின் ஒற்றுமை மற்றும் கட்சிகளிடையேயான பிளவுகளை ஏற்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தி நிற்கின்றன.

இவ்வாறு இலங்கையில் நடத்தப்பட்ட தேர்தல் அனைத்தும் ஏதோ ஓர் முறைமையை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றன. அந்த வகையிலே, பன்மைப் பெரும்பான்மை முறையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் இங்கு காணப்பட்ட போதும், தற்போது விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை நடைமுறையில் இருந்து வருகின்றது.

**விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை**

விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை 1977 இல் இலங்கையின் புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது, அதன் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப் பட்ட தேர்தல் முறை ஆகும். இலங்கை அரசியல் சட்டத்தின் 14 ஆவது அத்தியாயம் இது தொடர்பான விடயங்கள் பற்றிக் கூறுகின்றது. இலங்கையில், நாடாளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் இந்த முறையின் கீழேயே நடைபெறுகின்றன.

இலங்கை நாடாளுமன்றம் பொது வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படும் 225 அங்கத்தவர்களை கொண்ட ஓரவையுடைய சட்டமன்றமாகும். ஆறு ஆண்டுகால தவணையை கொண் டது. நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு, நிறுத்தி வைப்பதற்கு, கலைப்பதற்கு அதிகாரம் கொண்டவர்.

மொத்தம் 225 அங்கத்தவர்களில் 196 அங்கத்தவர்கள் 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் மிகுதி 29 அங்கத்தவர்கள் தேசிய அளவில் கட்சிகள் பெறும் வாக்குஎண்ணிக்கைக்கு ஏற்ப கட்சிகளின் தேசிய பட்டியலில் இருந்தும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருக்கும் குடியரசு அதிபர் முறையை 1978இல் நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

தொடக்கத்தில் இலங்கையில் இது ஒரு மூடிய கட்சிப் பட்டியல் முறையாகவே அறிமுகப்படுத்தபட்டது. பின்னர் இது ஒரு திறந்த கட்சிப்பட்டியல் முறையாக மாற்றப்பட்டது.

இலங்கையில் தேர்தல்கள், தேர்தல் மாவட்டங்களின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடும் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் உறுப்பினர்களைப் பெறுகின்றன.

நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்காக 22 தேர்தல் மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 20 தேர்தல் மாவட்டங்கள் நாட்டின் நிர்வாக மாவட்ட எல்லைகளையே தங்கள் எல்லைகளாகவும் கொண்டுள்ளன. ஏனைய இரண்டு மாவட்டங்களில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களையும், வன்னித் தேர்தல் மாவட்டம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களையும் தம்முள் அடக்கியுள்ளன.

அந்தவகையிலே வேட்பாளர் தெரிவு, அவர்கள் எவ்வாறு நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்வது, வாக்களிப்பு முறை, வாக்குகள் எண்ணப்படும் விதம் மற்றும் வாக்குகளை ஆசனங்களாக மாற்றுவது போன்ற பல தரப்பட்ட அம்சங்களை இந்த தேர்தல்முறைமை கொண்டமைந்துள்ளது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் ஒரு கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்டதாக நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப் பற்ற முடியாது.

அத்துடன் சிங்கள மக்களைச் சாராத கட்சிகள் எதிர்க் கட்சியாக வரும் அளவுக்கு தங்களின் ஆசனங்களின் எண்ணிக்கையை குவிக்க வும் முடியாது.

விகிதாசார தேர்தல் முறையின் கீழ் தனி நபர்கள் போட்டியாளராக முடியாது. ஒரு கட்சியின் பட்டியலில் அங்கத்தவராகவோ அல்லது தனி நபர்களால் ஒன்றிணைக்கப்பட்ட சுயேச்சைக் குழுவின் அங்கத்தவராகவோ மட்டுமே போட்டியிட முடியும்.

**வேட்பாளர்கள்**

இலங்கையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையில் கட்சிப் பட்டியல் மூலம் அல்லது சுயேச்சைக் குழுக்களின் பட்டியல் மூலமே வேட்பாளர்கள் நிறுத்தப்படுகின்றார்கள். இலங்கையில் அங்கீகாரம் பெற்ற கட்சி அல்லது சுயேச்சைக் குழுக்கள் தாங்கள் நியமிக்கும் வேட்பாளர்கள் அடங்கிய பட்டியல்களுடன் தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வார்கள். ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களிலும் தனித்தனியாக நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும். ஒவ்வொரு குழுவின் பட்டியலிலும், அந்தந்த மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கையை விட மூன்று மேலதிக வேட்பாளர்கள் இருத்தல் வேண்டும்.

**வாக்களிப்பு முறைமை**

இலங்கையில் வாக்களிப்பு திறந்த கட்சிப்பட்டியல் முறையில் நடைபெறுவதால், கட்சியிலிருந்து தெரிவாகவுள்ள உறுப்பினர்களின் ஒழுங்குவரிசையைக் கட்சிகள் தீர்மானிப்பதில்லை. ஒவ்வொரு வாக்காளரும், தாங்கள் விரும்பிய கட்சி அல்லது குழுவுக்கும், அக் கட்சி அல் லது குழுவினால் நியமிக்கப்பட்ட வேட்பாளர்களில் குறைந்தது மூன்று பேருக்கும் வாக்களிக்க முடியும்.



இவ்வாறு தனிப்பட்ட வேட்பாளர்கள் பெறும் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்தே ஒவ்வொரு கட்சி வேட்பாளர்களினதும் ஒழுங்கு வரிசை தீர்மானிக்கப்படுகின்றது.

**கட்சிகளுக்கான உறுப்பினர் எண்ணிக்கைகளைத் தீர்மானித்தல்**

முதலில் கட்சிகள் பெற்ற வாக்குகள் எண்ணப்படும். அதிக வாக்குகளைப் பெற்ற கட்சி அல்லது குழுவுக்குரிய போனஸ் உறுப்பினராக அக்கட்சியிலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

உறுப்பினர்களை ஒதுக்குவதற்காகத் தகுதி பெறும் ஒரு கட்சியோ அல்லது குழுவோ குறைந்த பட்சம் மொத்த வாக்குகளில் இருபதில் ஒரு பகுதியையாவது (5%) பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு பெறாத கட்சிகளும், குழுக்களும் நீக்கப்படும்.

**உறுப்பினர் தெரிவு**

ஒவ்வொரு உறுப்பினரும் பெற்ற விருப்பு வாக்குகள் எண்ணப்படும். ஒவ்வொரு கட்சி அல்லது குழுவுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு அந்தக் கட்சி அல்லது குழுவில் கூடிய எண்ணிக்கை வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

வாக்குகள் எண்ணப்படும்போது முதலில் கட்சிகளின் அடையாளங்களின் அடிப்படையில் வாக்களிக்கப்பட்ட சீட்டுக்கள் பிரிக்கப்பட்டு எண்ணப்படும்.

கணக்கெடுக்கப்பட்ட வாக்குகளில் ஒவ்வோர் கட்சியும் அல்லது குழுவும் பெற்றவாக்குகளின் எண்ணிக்கை தான் அக் குறிப்பிட்ட கட்சி அல்லது குழு அந்தத் தேர்தல் மாவட்டத்தில் கொண்டிருக்கக்கூடிய நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாகும். விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின்கீழ் ஒரு மாவட்டத்தில் எந்தக் கட்சி அல்லது குழு ஆகக் கூடிய வாக்குகளைப் பெறுகின்றதோ அக் கட்சிக்கு வெகுமானமாக முதலில் ஒரு பிரதிநிதித்துவம் ஒதுக்கப்படும். பின்பு அம்மாவட்டத்தின் மொத்த பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கையில் ஒன்றை ஏற்கனவே உபகாரமாக ஒதுக்கப்பட்டது தவிர்த்து கழித்த பின்பு வருகின்ற எண்ணிக்கை போட்டியில் ஈடுபட்ட சகல கட்சிகளும் குழுக்களும் பெற்ற வாக்கு விகிதாசாரத்துக்கு ஏற்ப பங்கிடப்படும்.

ஒரு அங்கத்துவ ஆசனத்துக்கான விகித வாக்குகளை முழுமையாக ஒரு கட்சியோ குழுவோ கொண்டிருக்காவிட்டால் அவர்கள் கொண்டிருக்கும் வாக்குகளில் ஆகக்கூடிய வாக்குகளை எஞ்சிய வாக்குகளாகக் கொண்டிருப்பவர்களுக்கு எஞ்சிய ஆசனம் ஒதுக்கப்படும்.

ஆகவே மக்கள் தங்கள் வாக்குகளைப் பிரயோகிக்கும் போது இரண்டு விடயங்களைச் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றார்கள். முதலில் தங்களுக்கு விருப்பமான கட்சியின் சின்னத்துக்கு எதிரே புள்ளடி அடையாளத்தை இட வேண்டும். பின்பு அந்தக் குறிப்பிட்ட கட்சியின் வேட்பாளர் பட்டியலில் உள்ளதமக்கு விருப்பமானவரின் இலக்கத்துக்கு எதிரே மற்றுமொரு புள்ளடி அடையாளத்தையும் இடவேண்டும். இது கட்டாயமானதாக இருக்காது.

1976 ஆம் ஆண்டுக்கு பின்னான தேர்தல்களின்போது கூடிய பிரதிநிதித்துவ ஆசனங்களைத் கைப்பற்றுவதற்கான போட்டி தமிழ் சிங்கள சமூகங்களுக்கிடையில் இருந்த போதும் சிங்கள மக்களின் சார்பான வாக்குகள் தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி; அதன் கூட்டணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றுக்கிடையில் சிதறின. எனினும் ஒரு ஆசனத்தைப் பெறுவதில் சிங்கள மக்கள் சிரமப்படவில்லை. வாக்குகள் ஒரே கொள்கையின் மையப்புள்ளிகளையே வட்டமிட்டன. இது தமிழ் மக்கள் யாவரும் அறிந்ததொன்றே.

அந்த வகையிலே கடந்த அரசில் பிரதமர் ரணில் விக்கிமசிங்க முன்வைத்த புதிய தேர்தல் நடைமுறை தொடர்பான பிரேரணையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது. அதற்கு ஒப்புதலும் வழங்கியது. அதனடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எவ்வித மாறுதலும் இராது. அந்த எண்ணிக்கை 225 ஆகவே இருக்கும். எனினும் புதிய தேர்தல் நடைமுறையில் 125 இடங்கள் தொகுதி அடிப்படையிலும் இதர 100 இடங்களில் 75 இடங்கள் விகிதாசார அடிப்படையிலும் எஞ்சிய 25 இடங்கள் தேசியப் பட்டியலின் கீழான நியமனங்கள் மூலமும் நிரப்பப்படும் என்பதும் விதி.

ஆனாலும் தற்போது நடைபெறவுள்ள தேர்தல் முழுமையாக விகிதாசார அடிப்படையிலேயே நடைபெறவுள்ளது.

இதேவேளை தேர்தல் நடைமுறையில் கொண்டுவரப்படும் மாற்றங்கள் குறித்து பல கட்சிகள் சார்பில் முன்வைக்கப்பட்ட பல யோசனைகளை அமைச்சரவை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று 1977இல் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருந்தும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழர்களின் அரசியல் தலைவரான அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கம் பொறுப்பேற்றதைப் பொறுக்காமல் தேடிய மாற்று வழிமுறையாகவும் இந்தத் தேர்தல் முறைமையை நோக்க முடியும்.

கடந்த 60 வருடங்களாக சிங்கள பௌத்த தேசியவாதிகளின் சூளுரைகளால் வழிநடத்தப்பட்டு வரு(ம்) இலங்கை அரசுகள் முன்னெடுத்த திட்டமிட்ட தமிழின அழிப்பும் தமிழர் விரோத செயற்றிட்டங்களும் தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பலத்தை பலவீனப்படுத்தியது.

ஆனாலும் வரலாற்று ஆதாரங்களின் ஊடாகப் பெறப்பட்ட மக்கள் தொகை தொடர்பான கணக்கெடுப்புக்கள் யாவும் தமிழர் பிரதேசங்களில் அவர்கள் கொண்டிருந்த அதிகப்படியான பெரும்பான்மையை உறுதிப்படுத்துகின்றன.

தற்போது செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள சமநிலை தொடர்பில் தமிழ் பிரதிநிதித்துவங்கள் அதிக கரிசனை கொள்ளுதல் வேண்டும். தமிழ் சமூகங்களின் பலத்தை நிலைபேறானதாக்க வேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டும். இல்லையேல் இச் சமனிலை மிக ஆபத்தான அறிகுறியாகவும் மாற்றம் பெறலாம். அவ்வாறு மாற்றம் பெற்றால் அது தமிழ் சமூக இருப்பையும் அதன் அரசியல் பங்கேற்பு வலுவையும் அபாயத்தின் எல்லையை நோக்கிப் பயணிக்கச் செய்யலாம்.

எனவே தமிழ் சமூகம் ஒன்றுபட வேண்டும். தங்கள் (செல்)வாக்கை இழப்பதற்கோ சிதறவிடுவதற்கோ இடமளிக்கக்கூடாது. சோ(சா)ம்பலில் முடங்கிக் கிடக்காமல் அதனை தமிழினமாய் அனுமதிக்காமல், அந்த நினைவுத் தடங்களை எதிர்கால பயணத்துக்கான வழித்தடங்களாக மாற்ற முயற்சிக்க வேண்டும். தவறிழைப்பதால் ஏற்படும் பாரதூரமான விளைவுகள் தொடர்பிலும் விளைவுகள் வரலாற்றுத் தவறாக மாறாமல் இருப்பது தொடர்பிலும் சிந்தித்து செயலாற்றத் தலைப்பட வேண்டும்.

## குருமார்களின் மௌன நிலை கலையுமா?

அன்பார்ந்த அந்தண, சைவ பீடாதிபதிகளே, குருமார்களே வணக்கம். வருடப்பிறப்பு தீபாவளி முதலான சமூகத்தில் சந்தோசம் நிலவுகின்ற நிகழ்வுகளின்போது உங்களை ஆசியுரை அருள் உரை ஊடாக காணக்கூடியதாக இருக்கின்றது. வடபகுதியில் அவ்வப்போது பல அசம்பாவிதங்கள், துஷ்பிரயோகங்கள் முதலானவைகள்நடைபெறுகின்றபோதெல்லாம் தங்களைக் காணமுடிவதில்லை. உடனே மௌன விரதம் இருந்து விடுகின்றீர்கள். சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம் பல சந்தர்ப்பங்களில் கருத்துக்களை வெளியிட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் பிரச்சினையில் அதுவும் மௌனம் காப்பது வேதனை தருகின்றது. எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவரின் செயற்பாடு ஞாபகம் வருகின்றது. ஊர் முழுக்க கடன் பெற்றார். கடனாளிகள் வீட்டுக் கதவு தட்டும்போது அவருடைய மனைவி அவர் இன்று மௌன விரதம் எவருடனும் கதைக்க மாட்டார் எனக் கூறி அனுப்பி விடுவார். இது இன்று குருமார்களுக்கும் பொருத்தமாக உள்ளது. பிரச்சினை என்றவுடன் பீடாதிபதிகள் மௌனவிரதம் போலும். சமூகப் பிரச்சினைகளில் பங்கெடுக்க முற் படாது விட்டாலும்கூட தமது குருத்துவம் சார்ந்த, குருமார் சமூகம் சார்ந்த பிரச்சினைகளில் கூட கருத்துக்கூற முடியாதவர்களாக இருப்பார்களேயானால் இவர்களது பணிகள்தான் என்ன. வெறுமனே கும்பாபிஷேகம், கொடியேற்றம் பண்டிகைகளுக்கு மாத்திரம் ஆசி வழங்குவதில் அர்த்தம் இல்லை. இது சமயப்பணியாக ஏற்கவும் முடியாது. ஒரு சில குருபீடங்கள், தனியார் அந்தண அமைப்புக்கள் பல சமய சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றபோதும் பீடாதிபதிகள் தொடர்ந்து அமைதி பேணுவது விநோதமாக உள்ளது. குருமார் ஒன்றியம் இந்த விடயத்தில் அக்கறை அற்று இருக்கின்றதா? பெருமாள் கோவில் பிரச்சினை பீடாதிபதிகளின் பாதங்களுக்கு சமர்ப்பணம்.

***சிவனடியான்***

## சிறுப்பிட்டி அவலம் இனியும் வேண்டாம்

சிறுப்பிட்டிப் பகுதியில் அரச பஸ் மோதியதில் பசுமாடுகள் சில உயிரிழந்ததாகவும், வேறுசில மாடுகள் கால்கள் முறிந்த நிலையில் வீதியில் வீழ்ந்து கிடந்து தவித்ததாகவும் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைப் படித்தவுடன் மனதில் பெரும் வேதனை ஏற்பட்டது.

அந்தப் பகுதியில் மேய்ச்சலுக்காகச் செல்லும் மாடுகள் மாலையானதும் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லும் காட்சி வழக்கமானதொன்று. வீதியில் கூட்டம் கூட்டமாக அவை வருவதையும் காணமுடியும்.அந்த வேளையில் வீதியில் செல்லும் வாகனச்சாரதிகள் மிகுந்த கவனத்துடன் செயற்படுவார்கள். வாகனங்களிலிருந்து ஒலி எழுப்புவதையடுத்து மாடுகள் வீதியோரமாக ஒதுங்கிச் செல்வதையும் காணமுடியும்.

தற்போது மாடுகள் உயிரிழந்த சம்பவத்தில் என்ன நடந்ததென்பது தெரியவில்லை. ஆனால் பஸ் வேகமாக மோதியதன் காரணமாகவே மாடுகளுக்கு கூடிய சேதம் ஏற்பட்டுள்ளதை அனுமானிக்க முடிகின்றது.

குறிப்பிட்ட பஸ்சின் சாரதி சற்று அவதானத்துடன் செயற்பட்டிருந்தால் இந்த அவலமான சம்பவம் இடம்பெற்றிருக்க மாட்டாது என்பதே பலரது எண்ணக் கருத்தாக உள்ளது. சாரதி தனது நிதானத்தை இழக்கும் அளவுக்கு அங்கு என்ன நடந்தது என்பதைப் புரியாத நிலையில் சாரதி மீதும் குற்றம் சுமத்த முடியாது.

வடபகுதிக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள் ரயிலில் மோதிச் சாவடைந்துள்ளனர். மிருகங்களுக்கும் இதே கதி நேர்ந்துள்ளது. மனிதச் சாவுகளுக்கு மனிதர்களின் கவனக் குறைவே காரணமெனக் கூறப்படுகின்றது. மிருகங்களை அவதானமாக இருக்குமாறு எம்மால் கூறமுடியுமா?

பொதுவாகவே வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாகனச் சாரதிகளின் கவனக் குறைவே காரணமெனக் கூறப்படுகின்றது. சாரதிகள் சற்றுக் கவனத்துடனும், விழிப்புணர்வுடனும் செயற்படுவார்களாயின் விபத்துக்களை அறவே தவிர்த்துக் கொள்ளவும் முடியும்.

எதிர்காலத்தில் சிறுப்பிட்டியில் நடந்ததைப்போன்றதொரு அவலத்தை ஒன்றுமறியாத அப்பாவிகளான வாய்பேச முடியாத வளர்ப்புப் பிராணிகள் எதிர்கொள்ளக்கூடாது என்பதே எமது பிரார்த்தனையாகும்.

***பொ.சண்முகராசா, சிறுப்பிட்டி***


## குற்றவியல் சட்டக்கல்வியை நடைமுறைப்படுத்துங்கள்

எங்கள் மாணவர்களுக்கு ஒழுக்க விழுமியக்கல்வி மட்டும் போதாது. குற்றவியல் சட்டக் கல்வியும் உடனடியாகப் போதிக்கப்பட வேண்டும். அதாவது இன்ன இன்ன குற்றங்களுக்கு இதுதான் தண்டனை என்பதை ஆரம்பிக்க முதலே அவர்களுக்கு ஊட்ட வேண்டும். அரபு நாடுகளில் சில குற்றங்களுக்கு இதுதான் தண்டனை என்பது ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கே தெரியும். அதனால் குற்றங்கள் இழைக்கப்படுவதில்லை. எம்மவர்கள் பலர் செய்யும் துணிவான குற்றங்களுக்குக் காரணம் அதற்கான தண்டனை இதுதான் என அறியாமலிருப்பதே. இதனை இன்னொருவகையில் தண்டனைப் பயக் கல்வி(Punishment fear education) என்றும் கூறலாம். இந்தத் தண்டனைப் பயம் இல்லாமையாலேயே ஆனைகளுக்கு மட்டுமல்ல புலிக் குட்டிகளுக்குக் கூட அடிசறுக்குகிறது. மேலும் மாணவர்களை நாகவிகாரைக்கும், கசூரினா பீச்சுக்கும் மட்டும் சுற்றுலா கூட்டிச் செல்லாமல் யாழ். சிறைச்சாலை, வெலிக்கடை போன்ற இடங்களுக்கும் சுற்றுலாவின் போது அழைத்துச் சென்று காட்ட வேண்டும். எனவே எவ்வளவுதான் ஒழுக்கவிழுமியங்களைக் கற்பித்தாலும் தண்டனைப்பயம் இல்லையேல் எந்தவிதமான குற்றச் செயல்களையும் தடுக்கமுடியாது. அது எந்தப் பெரிய நீதிமானாலும் முடியாது. எனவே குற்றவியல் சட்டக்கல்வி அல்லது தண்டனைப்பயக்கல்வியானது உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும். இது காலத்தின் தேவை. இல்லையேல் எமக்கு விமோசனமே இல்லை.




***விஸ்வாஸ்.***

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

## மீண்டும் ஓர் கூட்டணியால் ஆகப் போவது தான் என்ன?

பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஆறு வாரங்களே உள்ள நிலையில், தேர்தல் பரப்புரைகள் முழு மூச்சுடன் ஆரம்பமா கின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் கடந்த ஜனவரி 8 தேர்தல் மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்பட்டது. இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளின் கவனத்தையும் அது ஈர்த்தது. இதேபோன்று வரவிருக்கும் ஓகஸ்ட் - 17 பொதுத் தேர்தலும் முக்கியமானது. ஜனவரி - 8 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கை அரசியலில் ஏற்பட்டு வந்த நகர்வுகளை, மாற்றங் களை அவதானித்து வந்தோரால் எதிர்வரும் பொதுத் தேர்தலின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும். கடந்த ஞாயிறன்று மீண்டும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருப்பது இதன் முக்கியத்துவத்தை வெளிக்காட்டுகிறது.

ஜனவரி - 8 தேர்தலில் மஹிந்தவை வீழ்த்த பொது எதிரணி அமைத்து அன்னம் சின்னத்தில் மைத்திரியைக் களமிறக்கியவர்கள், நல்லாட்சிக் கான பல வாய்ப்புகளைத் தவறவிட்டனர். தமது அணியைப் பலப்படுத்தவும் தவறி இருந்தனர். அதன் விளைவுகளை அதன் குறுகிய ஆட்சிக் காலத்தில் கண்டோம். இப்படியான நிலையிலேயே தற்போது மீண்டும் ஓர் அணி உருவாக்கப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையில் நேற்று முன்தினம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஐ.தே.க., ஹெல உறுமய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள மஹிந்த எதிர்ப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மஹிந்த எதிர்ப்புக் கட்சிகள், அமைப்புகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. இந்த அணி நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி என்று அழைக்கப்படுகிறது. தேர்தலுக்குப் பின்பே அதனைப் பதிவு செய்வது என்றும் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடுவது என்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அளித்த தெளிவான ஆணைமூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் பலத்த பின்னடைவுகளைச் சந்தித்த நிலையில், எதிர்பாராத முறையில் மஹிந்த பொதுத் தேர்தலில் அதுவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளராகக் களமிறங்கியுள்ள நிலையில், அந்த அணியை எதிர்கொள்ள மீண்டும் அணி ஒன்றை அமைக்கவும் புரிந்துணர்வு ஒப் பந்தம் கைச்சாத்திடவும் நேரிட்டிருப்பது இலங்கை அரசியலில் எதிர்பாராத ஒரு திருப்புமுனையாகும்.

ஜனவரி 8 தேர்தலில் மஹிந்த தோற்றபோது அவரது சரித்திரமே முடிந்தது என்றே பலரும் கருதி னர். அவர் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிரதமர் பதவியைக் குறிவைத்து போட்டியிடுவார் என்று ஐ.தே.கவோ, மஹிந்த எதிர்ப்புக் கட்சிகளோ எதிர்பார்த்திருக்கமுடியாது. இலங்கை அரசியலில் ஏற்பட்ட இத்தகைய எதிர்பாரா மாற்றமே மீண்டும் மஹிந்த எதிர்ப்பு அணியை உருவாக்கவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னர் உருவாக்கப்பட்ட கூட்டணி மைத்திரியை ஜனாதிபதி ஆக்கியவுடன் முறிந்து போனது. அந்தக் கூட்டணியைக் கட்டிக் காத்து காபந்து பண்ணியிருந்தால் இன்னும் எவ்வளவோ விடயங்களை இந்த மைத்திரி அரசால் சாதித்திருக்க முடியும். அத்துடன் மஹிந்தவையும் மீண்டும் அரசியல் பக்கம் தலை வைத்துப்படுக்க முடியாமல் செய்திருக்க இயலும். மைத்திரி கூட்டணியில் விழுந்த ஓட்டையே மஹிந்த மீண்டும் அரசியலுக்குள் நுழைவதற்கு வாசல் ஆகியது. இந்த நிலையில் இப்போது மற்றொரு கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. தேர்தலை மட்டும் இலக்காகக் கொண்டு உருவாக்கப்படும் இத்தகைய கூட்டணிகள் தேர்தலில் நின்ற கையோடு உடைந்து கலைந்து விடுகின்றன. அதன் பின்னர் அந்தக் கூட்டணி உருவாக்கப்பட்டதன் நோக்கம், குறிக்கோள் என்பவை காற்றில் பறக்கவிடப்படுகின்றன. உருவாக்கப்படும் கூட்டணிகள் பலமானவையாக அமையும் இடத்து அவற்றால் பல விடயங்களைச் சாதிக்க முடியும்.

முன்னைய கூட்டணி சரியாகச் செயற்பட்டி ருந்தால் - ஒற்றுமையாக இயங்கியிருந்தால் தற்பொழுது மீண்டும் கூட்டணி அமைத்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிலைமை யைத் தவிர்த்திருக்கமுடியும். ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவைத் தோற்கடித்து ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை 19ஆவது அரசமைப்புத்திருத்தம் மூலம் பிரதமருக்கு வழங்கி விட்டு தற்பொழுது பிரதமர் பதவிக்காக மீண்டும் அணி அமைத் திருப்பதை நோக்கும் போது, எங்கேயோ ஓரிடத்தில் தவறு நேர்ந்திருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆகவே கடந்தகால அனுபவங்களைக் கவனத்தில் கொண்டு புதிய கூட்டணி செயற்படுவதன் மூலம் கடந்தகாலத் தவறு களை நிவர்த்திசெய்யக் கூடியதாக இருக்கும்.

**பத்தி எழுத்து**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வரப்போகின்ற தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு

தென்னிலங்கையில் கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் காணப்பட்ட அதே காலநிலை இப்போது உருவாகி வருவதை ஓரளவு பார்க்க முடிகிறது.

ஒரு வித்தியாசம் என்னவென்றால், அன்று மஹிந்த ராஜபக்ஷவை 6.2மில்லியன் மக்களின் ஆதரவுடன் வீழ்த்தி வெற்றி வாகை சூடியவரான மைத்திரிபால சிறிசேன, தாம் தோற்கடித்தவரையே பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதித்துக்கொண்டு, அந்தக் கட்சியின் தலைமைப் பீடத்தில் தொடர்ந்து அமர்ந்து இருப்பதுதான். மைத்திரியின் இந்தச் செய்கையால் இடிவிழுந்த நிலைக்குள்ளான, அவருக்கு அன்று ஆதரவு வழங்கிய அத்தனை மக்களும் இன்று ஓரளவு ஆறுதல் அடைகின்றார்கள் என்று கருத இடமுண்டு.

ராஜபக்ஷவுக்கு தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட அந்த முன்னணியின் பொதுச் செயலாளரும் தேர்தல் குழுவும் தீர்மானித்தமை முன்னைய செய்தி. அதனை அந்த முன்னணியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அங்கீகரிக்க செய்வித்ததன்மூலம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதிக்கம் கட்சியில் மேலோங்க வழி பிறந்துள்ளது எனலாம். அதன்படி தமக்குச் சார்பானவர்கள் பலரையும் தேர்தலில் போட்டியிடச் செய்வதற்கான பட்டியல் ஒன்றை அவர் சமர்த்திருப்பதாகவும், அதனை மறுத்தொதுக்க முடியாத நிலை சிறிசேனவுக்கு ஏற்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில்தான், ஜனவரியில் ஜனாதிபதி சிறிசேனவுடன் இணைந்து பணிபுரிந்தவர்களும், கட்சிகளும் விரக்தியுற்று ஐ.தே.கவுடன் இணைந்து தேசிய நல்லாட்சிக்கான முன்னணியொன்றை அமைத்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டுள்ளார்கள். இன்னும் சிலர் அரசியலில் இருந்து விலகிக்கொள்ள முயற்சி செய்துள்ளார்கள்.

ஆக, இப்போது தேர்தல் மேடை, இரண்டு பெரும் முன்னணிகளின் மோதல் களமாக இருக்கும் என்று கருதலாம்; நம்பலாம்.

இந்த நிலையிலேயே, தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மக்கள் எவ்வாறான ஒரு நிலைப்பாட்டில் தேர்தலில் வாக்களிப்பது என்பது பற்றித் தீர்க்கமாக சிந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அது வெளிச்சமாகத் தெரிகிறது.


முப்பது வருடகாலப் போருக்கு முன்னரும், போர்க்காலத்திலும், போர் முடிந்துள்ள இந்தக் காலகட்டத்திலும் கூட, தமிழ் மக்களின் தேசியம், சுயாட்சி மற்றும் இனங்களில் உள்ளடக்கப்படும் கலை, கலாசாரம், கல்வி, பொருளாதாரம் மற்றம் பிர தேச ஆள்பலம் போன்ற விவகாரங்களில் நிரந்தரமான ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ள இயலாத நிலை நீள்கிறது.


இது நீண்ட காலத் தீர்வுக்குட்பட்ட விடயமாக இருக்கலாம்; அதைவிட தமிழ் மக்களின் உடனடியாகத் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டிய பிரச்சினைகளும் நிறையவே இருக்கின்றன. இவைகளில் மீள்குடியேற்றம், விசாரணையின்றி காவலில் வாடும் தமிழ் இளைஞர்களின் விடுதலை, இராணுவம் நிலைகொண்டுள்ள மக்களின் காணிகளை விடுவித்தல் மற்றும் புனர்வாழ்வு பெற்று விடுதலையாகி நிர்க்கதியிலுள்ள முன்னாள் போராளிகளின் மேம்பாடு, தொழில் வாய்ப்பு, அவர்களின் ஜனநாயக உரிமைகள் மற்றும் போரினால் உறவினர்களையும் உடைமைகளையும் இழந்து தவிக்கும் மக்களுக்கான வாழ்க்கை மேம்பாட்டுக்கான நிரந்தரத் தீர்வு என பலப்பல விடயங்கள் உள்ளன.

இவற்றை முறையாக முன்னெடுத்து, வரப்போகின்ற தேர்தலில் மத்தியில் அரசமைக்கப் போகும் தரப்பினருடன் வாதிடுவதற்கும், அதன் மூலம் முடிந்தளவில் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவும் வல்லமையுள்ள ஒரு கட்சியை வெற்றிபெறச் செய்ய வேண்டிய தவிர்க்க முடியாத கடமை, தமிழ் மக்களுக்கு உண்டு.

அடுத்த மாதத்தில் நடைபெற உள்ள தேர்தல், இந்த நாட்டின் சரித்திர முக்கியத்துவமானதாக இருக்கப்போகின்றது. கள நிலைமைகளை நோக்கும் போது, மத்தியில் அமையும் அரசுக்கு தமிழ்ப் பகுதிகளில் தெரிவாகும் பிரதிநிதிகளின் ஆதரவு, பெரிய அளவில் தேவைப்படும் சூழ்நிலை உருவாகலாம். அவ்வாறானதொரு நிலைமையில் தமிழர் தரப்பில் மனநீதியாக செயல்பட்டு மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கக்கூடியவர்களை அவ்வாறானதொரு கட்சியை, தெரிவு செய்யத் தமிழ் வாக்காளர்கள் ஆயத்தமாக வேண்டும்.

ஆட்சி அதிகாரத்தை நிர்ணயிக்கப் போகும் தென்பகுதி அரசியல் களம், இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் ஸ்திரமற்று, குழப்பத்தின் ஒட்டுமொத்த சூழ்நிலையில் சிக்கித் திணறும் நிலையில், வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறார்கள் எனக்கூறிக் கொள்வதில் தப்பேதுமில்லை.





# பேச்சுக்கான சக்தி தமிழர்களின் கைகளில்

வந்தியத்தேவர்

பிரதமர் கனவில் இருக்கும் மஹிந்தவை, நிரந்தரமாக வீட்டுக்கு அனுப் பிவிட வேண்டும் என்பதில் பிரதமர் கனவில் உள்ள மற்றொருவரான ரணில் விக்கிரமசிங்க முனைப்பு டன் உள்ளார் என்பதை மைத்திரியின் ஆதரவுடன் ஐ.தே.கட்சியின் தலைமையில் நாற்பதுக்கும் மேற்பட்ட அமைப்புக்கள் உள்ளடங்கிய ஐக்கிய தேசிய முன்னணி உருவாக்கப்பட்டதன் மூலம் அறியக்கிடக்கின்றது. பொதுத் தேர்தலின் முடிவுகள் எப்படி இருக்கும் என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுவது கடினம். தினசரி காட்சி மாறிக் கொண்டிருக்கும் ஓர் அரசியல் சூழ்நிலையே இன்று காணப்படுகின்றது. நேற்று ஒரு முடிவு, இன்று வேறு ஒரு முடிவு என்ற நிலையில் அரசி யல்வாதிகள் உறுதியான ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாததால் மக்கள்கூட தேர்தல் குறித்து எவரை ஆதரிப்பது என்பதில் தடுமாறிக் கொண்டேயுள்ளனர். வெற்றிப்பாதையில் நாடு செல்ல அனை வரும் கைகோர்க்க வேண்டும் என்பது ஜனாதிபதியின் கோரிக்கை யாக இருந்தபோதும் குழம்பிக் கொண்டிருக்கும் அரசியல்வாதிக ளால் அனைவரதும் கைகோர்ப்பு எந்த அளவுக்குச் சாத்தியப்படும் என்பது கேள்விக்குரியதே. நாட்டின் அனைத்து இனங்களுடனும் நல்லி ணக்கத்தையும், சமாதானத்தையும் கட்டியெழுப்பிக் கூட்டொருமைப்பாட்டுடன் செயற்படும் இலங்கையைக் கட்டியெழுப்புவோம் என ஜனாதிபதி தெரிவித்தாலும், தேர்தலின் முடிவுகள் இதை எந்த அளவுக்கு நிஜமாக்கும் என்பது உரிமைகளையும், சுதந்திரத்தையும் விரும்பும் அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகவே உள்ளது. இனவாதத்தில் இருந்து இலங்கை விலகிவிட்டதா? அல்லது விலகிக் கொண்டிருக்கிறதா? இன்றேல் அதையே தொடரப்போகிறதா என்பது தேர்தலின் முடிவைப் பொறுத்தே தெரியவரும். ரணில் பதவிக்கு வந்தால் சிங்கள இனம் இல்லா மலே போய் விடும் என சிங்கள மக்களுக்கு உருவேற்றுகிறார் தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றிய அமைப்பாளர் எனத் தம்மை அறிமுகப்படுத்தும் குணதாச அமரசிங்க. இது இனவாதத்தின் உச்சத்தில் நிற்கும் மஹிந்த குழுவினருக்கு மேலும் உரமூட்டும் கருத்தாகும். இந்த நிலையில் ரணில் தனக்குள் புதைந்திருக்கும் இனவாதக் கருத்துக்களை கக்கி விடாமல் இருப்பாரா என்பதும் சந்தேகமே. புதிய கூட்டணியில் இனி புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கு வோம். அதற்கு அனைத்து மக்களின் ஒட்டுமொத்த ஆதரவும் தேவை என்று ரணில் அறைகூவல் விடுத்துள்ளதுடன் தத் தமது குடும்பத்தவரின் எதிர்காலமா? அல்லது மஹிந்த குடும்பத்தின் எதிர்காலமா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஒரு நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளை முன்வைத்தே ஜனாதிபதியானவர் மைத்திரிபால. மஹிந்த பிரதமராவதை அவர் நிச்சயம் விரும்பமாட்டார். தனிப்பட்ட முறையில் மஹிந்த வேட்பாளராவதைத் தான் விரும்பவில்லை என ஏற்கனவே அவர் தெரிவித்துள்ளார். எனினும் மஹிந்த வேட்பாளராக அவர் அனுமதித்துள்ளார் என்பதால் அது தொடர்பான அழுத்தங்கள் அவர் மீது பிரயோகிக்கப்பட்டிருக்கலாம் எனவும் கருத இடமுண்டு. இது விடயத்தில் இந்தியாவின் றோ அழுத்தம் கொடுத்திருக்கலாம் எனவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. இது உண்மையாயின் தமிழர்களை நசுக்குவதன் மூலம் சீன ஆபத்தில் இருந்து தனது நாட்டைப் பாதுகாக்க இந்தியா மேற்கொள்ளும் உபாயமே இது எனக் கொள்வதில் தப்பில்லை.

> “ ரணில் தனக்குள் புதைந்திருக்கும் இனவாதக் கருத்துக்களை கக்கி விடாமல் இருப்பாரா என்பதும் சந்தேகமே. புதிய கூட்டணி இனி புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கு வோம். அதற்கு அனைத்து மக்களின் ஒட்டுமொத்த ஆதரவும் தேவை என்று அறைகூவல் விடுத்துள்ளதுடன் எமது குடும்பத்தவரின் எதிர் காலமா? அல்லது மஹிந்த குடும்பத்தின் எதிர்காலமா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் மீது இன அழிப்புக்களை முன்னெடுத்து போர்க் குற்றத்தைப் புரிந்த மஹிந்த அரசு, தமிழ் மக்களைப் பழிவாங்குவதாக நினைத்து நாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டதாக விஜயகலா மகேஸ் வரன் குற்றம் சுமத்தினாலும், அவருடன் இணைந்து செயற்பட்டவர் அவரைப் பாதுகாத்தவர் ரணிலே என்பதை மறைக்கின்றாரா? மேலும் அவரைப் பிரதமராகக் கொண்டு ஆட்சியைத் தாங்கள் அமைக்க வேண்டும் என்ற தனது ஆசையையும் வெளிப்படுத்தியுள்ளார். ஐ.தே.கட்சி தமிழ் மக்களது உரிமைகளை நிச்சயம் வழங்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இதுவரை காலமும் மாறி மாறிப் பதவிக்கு வந்த அரசுக்கள் தமிழ் மக்களை இந்த நாட்டின் பிரஜை களாக ஒப்புக்கொண்டது கூட இல்லையே. நாட்டில் ஏற்பட்ட இன அழிப்பே தொண்ணூறாயிரத்துக்கும் அதிகமான விதவைகளும், முப்பதாயிரம் அங்கவீனர்களும் அனாதைச் சிறார்களாக பன்னிரண்டாயிரம் சிறுவர்களும் ஏழாயிரத்துக்கும் அதிகமான ஆதரவற்ற முதியவர்களும் உருவாகக் காரணமாயிருந்தது. மஹிந்த மட்டும்ல்ல இந்த நாட்டின் ஆட்சியில் இருந்த அனைவருமே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்வதற்கு விரும்பாதிருந்த ஒவ்வொருவருமே இந்த அழிவுக்குக் காரணமானவர்கள் என்பது மறக்க முடியாதது. ஐ.தே.க. என்றால் என்ன? சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்றால் என்ன? ஐ.ம.சு.கூட்டமைப்புஎன்றால்என்ன? எல்லோருமே இதற்குப் பொறுப்பானவர்களே.

கடந்த கால அரசியல் தவறுகளையும் அதனால் நாடடைந்த பாதிப்புக்களையும் கவனத்தில் கொண்டு நல்லாட்சியின் பெயரால் உருவான ஆட்சி மாற்றம் ஒரு புதிய திருப்பத்தை உருவாக்கும் என மக்கள் எதிர்பார்த்த போதிலும் ஊழல், மோசடிகளில் திளைத்த சுயநல அரசியல்வாதிகளால் எதிபார்த்த இலக்கை நோக்கி நகரமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு, நிலைமை மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புமோ என்ற அச்சம் மக்களிடையே எழுந் துள்ளது.

தென்பகுதியில்இடம்பெறும் திடீர்த் திருப்பங்களால் பிரதான கட்சிகள் இரண்டும் தேர்தல் முடிவுகள் தமக்குச் சாதகமாக இருக்குமோ என்ற சந்தேகத்திலும் உள்ளன. மஹிந்த ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் ஜனாதிபதி மைத்திரியின் காய் நகர்த்தல்கள் இடம்பெறலாம் எனவும் தகவல்கள் உண்டு. அதை முறியடிக்கும் வகையில் செயற்படும் தகுதி மஹிந்தவிடமும் நிறையவே காணப்படுகிறது.

தேர்தலில் போதிய பலம் கிடைக்காவிடில் உதிரிக் கட்சிகளைத் தன்னுடன் இணைக்கும் செயற்பாட்டில் மஹிந்த கைதேர்ந்தவர். எனவே இன்று தமிழ் மக்கள் ஒன்றுபட்டுச் செயற் பட வேண்டிய தேவை உண்டு. இந்த முறை அரசு அமைக்கக்கூடிய பலத்தை வழங்கக்கூடியவர்களாக இருப்பதற்கு முக்கிய தமிழ்க் கட்சிக்கான ஒரு பலம் தேவை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருமித்த பலத்தின் மூலம் நிரந்தரத் தீர்வைப் பெற முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கையூட்டியுள்ளது. இந்த நம்பிக்கை வெற்றிபெறத் தமிழ் மக்கள் தமது வாக்குகளை தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டி யது அவசியமாகும்.

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
■ ரெங்கன்

# ஐ.தே.கட்சித் தலைமையில் வலுவான எதிரணி உதயம்

## சிறிசேன ஆதரவாளர் பலர் அத்திசையில் நகர்வு ராஜபக்ஷ வரவின் எதிரொலி

எதிர்வரும் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளராக போட்டியிட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அனுமதியை வழங்கியுள்ளார். அதேபோல் ராஜபக்ஷவின் சகாக்களுக்கும் முன்னணியின் சார்பில் வெவ்வேறு மாவட்டங்களில் போட்டியிட அவர் அங்கீகாரம் வழங்கியுள்ளார். முன்னணியின் தேசியப் பட்டியலில் இடம்பெறவென ஒரு பெயர்ப்பட்டியலையும் ராஜபக்ஷ சிறிசேனவுக்கு வழங்கியுள்ளார். அவர்களில் முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் லசந்த கரனகொடவும் ஒருவர். அவர் முன்பு ஜப்பானில் இலங்கைத் தூதுவராக இருந்து ஐ.தே.க. பதவிக்கு வந்ததும் திருப்பி அழைக்கப்பட்டவர். முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ், முன்னாள் ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, முன்னாள் பிரதம நீதியரசர் சரன் என்.சில்வா, முன்னாள் ஊடக அமைச்சின் செயலாளர் சாரித்த ஹேரத், முன்னாள் ராஜதந்திரி தயான் ஜெயதிலக்க, அரசமைப்பு சட்டவாளர் ஜயம்பதி விக்கிரமரட்ண மற்றும் விஞ்ஞானியும் அச்சிடுபவருமான தெவிந்து குமாரதுங்க ஆகியோரும் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இருந்தாலும் ராஜபக்ஷவின் சகாக்களில் சிலர் சிறிசேன முன்னாள் ஜனாதிபதியின் வேட்புமனுவை அங்கீகரித்திருப்பது குறித்து சந்தேகம் வெளியிடவே செய்தனர்.

அரசியலில் இன்னுமொரு ஆச்சரியகரமான சம்பவம் என்னவென்றால் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி என்று பெயர் மாற்றியுள்ள ஜாதிக ஹெலஉறுமய, ஐ.தே.கட்சியில் சேர்ந்துகொள்ள முடிவு செய்திருப்பதாகும். இந்தப் புதிய அமைப்பு நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணி என்று அழைக்கப்படவிருக்கின்றது.

### யானைச் சின்னத்தில் சம்பிக்க போட்டி

அமைச்சர் சம்பிக்க ரணவக்க கொழும்பில் ஐதேகட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிடுவார் என்று தெரிகின்றது. அந்தக் கட்சியின் பேச்சாளர் நிசாந்த வர்ண சிங்க கம்பஹாவில் போட்டியிடவிருப்பதோடு இன்னொரு முக்கியஸ்தரான அத்துரலிய ரத்ன தேரர் அந்தக் கட்சியின் தேசிய பட்டியலிலும் இடம் பெறுவார் என்றும் கருதப்படுகின்றது. இவ்வித நகர்வை அமைச்சர் ராஜித சேனா ரத்ன வரவேற்றிருப்பதாக அறியப் படுகின்றது. ஹிருணிகா பிரேமச் சந்திரவும் ஐ.தே.கவில் போட்டியிடவிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து வரக்கூடியவர்களுக்கென ஐ.தே.கவில் 5 வீதமான வேட்பாளர்களுக்கான இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக ஐ.தே.கவின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் சின்னத்தில் போட்டியிடவிருக்கும் இன்னொரு கட்சி இலங்கை முஸ்லிம் காங்கிரஸாகும். ஆனால் மட்டக்களப்பிலும் வன்னியிலும் மட்டும் அந்தக் கட்சி மரச்சின்னத்தில் போட்டியிடவிருக்கிறது என்று அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ராஜபக்ஷ போட்டியிடுவார் என்ற அறிவிப்பையடுத்து முஸ்லிம் இன மக்களின் பெரும்பாலானவர்களின் வாக்குகளும் ஐ.தே.க. பக்கம் சரிவதாக இருக்கப்போகிறது என்பது உறுதியாகியுள்ளது.

ஐதேகவும் ஜாதிக ஹெல உறுமயவும் இணைந் திருப்பதானது ஒரு குறிப்பிடக் கூடிய திருப்புமுனையாகும். ஐ.தே. கவின் செயற்பாடுகளை அமைச் சரவைக் கூட்டங்களில் பலமாக எதிர்க்கும் நபராக அமைச்சர்சம்பிக்கரணவக்கஇருந்துவந்துள்ளார். அவரும் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் ஜனாதிபதி மைத்திரியின் நம்பிக்கைக்குரியவர்களாகக் கருதப்பட்டவர்கள். அவர் எடுத்த பல தீர்மானங்களின் மீது செல்வாக்குச் செலுத்தியிருந்தவர்கள் அவர்கள். ஆனால் அவ்வித உறவுகள் பின்னர் மாற்றமுற்றன. ஜூன் 27 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படவிருந்ததை ஜனா திபதி தமது இரு நம்பிக்கையாளர்களிடம்கூட தெரிவித்திருக்கவில்லை. அதைவிட ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளராகப் போட்டியிட அனுமதிக்கப்படவிருப்பதும்கூட அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

சிறிசேனவை நம்பியவர்கள் எவ்வாறு காட்டிக் கொடுக்கப்பட்டார்கள் என்பதை விளக்குவதற்கு ரணவக்கவே மிகப்பொருத்தமான நபராவார் என்று ஐ.தே.கவின் உப தலைவர்களில் ஒருவரான லக்ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதை ராஜிதவும் ரணவக்கவும் விரும்பவில்லை. அதேபோல் ஐ.தே.க. முன்வைத்த தேர்தல் மாற்று யோசனைகளையும் அவர்கள் ஆதரிக்கவில்லை. சில லஞ்ச ஊழல் பேர்வழிகளை ஐ.தே.க. பாதுகாப்பதாகவும் கூட அவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தார்கள். ஆனால் ஐ.தே.கவைப் பொறுத்தவரை இவர்களும், இனி மேல் தம்முடன் சேரப்போகிற சுதந்திர முன்னணி பிரமுகர்களும் தமது தேர்தல் பரப்புரைகளுக்கு அதிக வலுச் சேர்ப்பவர்களாக இருப்பார்கள் என்று அதன் தலைவர்கள் நம்புகிறார்கள்.

### ரணில் விடுத்துள்ள அழைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அந்தக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் கடந்த சனிக்கிழமை உரை நிகழ்த்தியபோது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

ஜனவரி 8 ஆம் திகதிய நிகழ்ச்சி நிரலை ஆதரித்து நின்றவர்களான நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து அடுத்த அரசை அமைப்போம். ஏனைய கட்சிகளையும் எம்மோடு இணைந்து நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியை நிறுவுவதற்கு முன்வருமாறு அழைப்பு விடுக்கிறேன். தேர்தலின் பின்னர் இந்த முன்னணியை ஓர் அரசியல் கட்சியாக நாம் பதிவு செய்து கொள்ள முடியும். ஆனால் இதனைச் சாதிப்பதற்கு நாம் ஒன்றுபட்டாக வேண்டும். அதற்கு ஐ.தே.கவே தனிப்பெரும் கட்சியாக விளங்குகின்றது. இதன் சின்னத்தில் நாம் போட்டியிடுவோம். சகல கட்சித் தலைவர்களையும் தத்தமது வேட்பு மனுப் பட்டியல்களை நிரப்பி கையளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தப் போரில் நாம் வெற்றிபெற்றாக வேண்டும். அந்த வெற்றியின் பின்னர் நாட்டில் புதியதொரு அரசியல் கலாசாரத்தை நாம் கட்டியெழுப்ப முடியும். வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்கள் அங்கேயேதான் இருக்க வேண்டும். அவர்கள் திரும்ப வர முடியாது என்றார்.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தாம் ஓய்வு பெறப்போவதாக முன்னர் அறிவித்திருந்த நிலையில், இப்போது மனதை மாற்றிக் கொண்டு ஐ.மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் அம்பாந்தோட்டையில் போட்டியிட இருக்கிறார். கட்சி தம்மை அம்பாந்தோட்டையில் போட்டியிடும்படி கேட்டிருப்பதாகக் கூறியுள்ள சமல் ராஜபக்ஷ தாம் மீண்டும் சபாநாயகராக நாடாளு மன்றம் வருவார் என்றும் சூசகமா கத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது போல் நான்கு முன்னாள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களுக்கு வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மேர்வின் சில்வா, சஜின் டிவாஸ் குணவர்த்தன, துமிந்த சில்வா மற்றும் சரண குணர்வர்த்தன ஆகியவர்களாவர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர்கள் மற்றும் ஜனாதிபதி சிறிசேன ஆகியவர்களின் ஆலோசனைக்கு முன் வைக்கப்பட்டிருந்த 10 உறுப்பினர்களின் பட்டியலில் இருந்து இவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் சார்பில் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவர்கள் நால்வருக்கும் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுவிட்டதாக அறியப்படுகின்றது.

### சந்திரிகாவுக்கு ஏற்பட்ட கோபம்

ராஜபக்ஷவை தேர்தலில் போட்டியிட அனுமதிப்பதென்று எடுக்கப்பட்ட தீர்மானத்தை மாற்றி அமைக்குமாறு சிறிசேனவுக்கு கொடுக்கப்பட்ட கடும் அழுத்தங்களையெல்லாம் அவர் புறந்தள்ளிய பின்னரே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்குவதற்கு சிறிசேன உடன்பட்டார் என்பது ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான ஓர் அழுத்தத்தின் மத்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஒபதுமா சந்தெட்ட தவமத் இதிரிபத் வெனவாத? (இப்பவும் கூட தேர்தலில் போட்டியிடலாம் என்று தாங்கள் எதிர்பார்க்கிறீர்களா?) என்று மறைபொருள்படக் கேட்டுள்ளார். அவ்வாறு செய்யாதுவிடுவது நன்றாய் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். அதற்கு ராஜபக்ஷ, நிச்சயம் தாம் போட்டியிடுவார் என்று அழுத்தமாகவே பதில் கூறியுள்ளார். இப்பொழுதே காலம் அதிகம் கடந்துவிட்டது. (தெங் பிரமாத வடி) என்று அவர் குறிப்பிட்டதாகத் தெரிகின்றது. அத்துடன் உரையாடல் முற்றுப்பெற்றது. அவ்வாறு தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்கு என்ன தூண்டுதலாய் இருந்தது என்பது தெரியவில்லை. ஆனால் ஒரு முக்கிய தலைவர் சிறிசேனவை சந்தித்துக் கடுமையான எதிர்ப்பை தெரிவித்ததன் பின்னரே அது நடந்தது என்கிறார்கள் ராஜபக்–வின் நெருங்கிய ஆதரவாளர்கள். அந்த அம்மையாரின் முன்னிலையிலேயே தொலைபேசித் தொடர்பு நடைபெற்றுள்ளதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்தமை குறித்து அதிக ஆத்திரம் கொண்டிருப்பவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஆவார். ராஜபக்ஷவுக்கு எதிராகப் போட்டியிட ஜனாதிபதித் தேர்தலின் போது சிறிசேனவை வலியுறுத்தியவர்களில் அவரே முக்கியமானவர். அதுமட்டுமன்றி ராஜபக்ஷவின் கடும் ஆதரவாளரும் மேல் மாகாண முதலமைச்சருமான பிரசன்ன ரணதுங்கவுக்கு வேட்புமனு வழங்கப்பட்டிருப்பதையும் அவர் விரும்பவில்லை. அவருடைய சகோதரர்கள் அர்ஜுன மற்றும் ருவான் ரணதுங்க ஆகியவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். பிரசன்னவும் அவரது மனைவியும் நிதி மோசடியொன்றில் சம்பந்தப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் கிளம்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. நிதி மோசடிப் புலனாய்வாளர்கள் இருவரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் தேர்தல் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் வரை அவ்வாறு செய்ய வேண்டாம் என்று பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலைமையில் சந்திரிகா குமாரணதுங்க அதிருப்தியுடன் கடந்த வியாழனன்று லண்டனுக்கு புறப்பட்டுச் சென்றார். என்றாலும் இரண்டு வாரங்களில் திரும்பி வந்து தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுவார் என்று தெரிய வருகிறது.

ராஜபக்ஷவை பிரதம மந்திரி வேட்பாளராக நியமிக்க ஏற்கனவே மறுத்துள்ள ஜனாதிபதி சிறிசேன தேர்தல் பரப்புரைகளை முன்னின்று அவர் நடத்துவதற்கான கோரிக்கையையும் இந்த வாரம் நிராகரித்துள்ளார். அதனை பரப்புரைக் குழுவினரே கையாளவிருக்கிறார்கள். சுசில் பிரேமஜயந்த, அனுரபிரியதர்சன யாப்பா, விமல் வீரவன்ஸ, டலஸ் அழகப்பெரும, மனுஷ நாணயக்கார ஆகியவர்கள் அக்குழுவில் உள்ளனர். அவர்கள் முழுப்பேருமே ராஜபக்ஷ ஆதரவாளர்கள். சிறிசேனவின் ஆதரவாளர்களான ரணவக்க மற்றும் ராஜித சேனா ரட்ண ஆகியவர்களை கைவிட்டிருந்த நிலையில், சிறிசேனவை இப்போது அவர்கள் கைவிட்டு ஒதுங்கியுள்ளார்கள்.

வேட்புமனுத் தொடர்பான முடிவுகளின் பின்னர் சிறிசேனவை சந்தித்துள்ள சில சிவில் அமைப்புக்களின் உறுப்பினர்கள் அவர்கூறிய சிலவற்றை வெளியிட்டுள்ளார்கள். மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்கப்பட்டிருந்தாலும் ஜனவரி 8ஆம் திகதி வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்படமாட்டா என்று அவர் தெரிவித்தார். கட்சியின்தலைவராகத்தாம் இருந்தாலும் நியமனங்களை அதற்கான சபையே கையாள்கின்றது. அதன்மீது தமக்குக் கட்டுப்பாடு கிடையாது என்றார் அவர், என அவர்களில் ஒருவர் கூறியுள்ளார்.

> “ ஐ.தே.கவும் ஜாதிக ஹெல உறுமயவும் இணைந் திருப்பதானது ஒரு குறிப்பிடக் கூடிய திருப்புமுனையாகும். ஐ.தே. கவின் செயற்பாடுகளை அமைச் சரவைக் கூட்டங்களில் பலமாக எதிர்க்கும் நபராக அமைச்சர் சம் பிக்க ரணவக்க இருந்து வந்துள் ளார். அவரும் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் ஜனாதிபதி மைத் திரியின் நம்பிக்கைக்குரியவர்களாகக் கருதப்பட்டவர்கள். அவர் எடுத்த பல தீர்மானங்களின் மீது செல்வாக்குச் செலுத்தியிருந்தவர்கள் அவர்கள். ஆனால் அவ்வித உறவுகள் பின்னர் மாற்றமுற்றன. ஜூன் 27 ஆம் திகதி நாடாளுமன் றம் கலைக்கப்படவிருந்ததை ஜனா தி பதி தமது அந்த இரு நம்பிக்கையாளர்களிடம்கூட தெரிவித்திருக்கவில்லை.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 6 | 9 | | | | |
| | | | | | 5 | 2 | | 9 |
| | 4 | | | 8 | 7 | | | |
| 9 | | | | | | 1 | | |
| 6 | | | 3 | | 4 | | | 2 |
| | | 5 | | | | | | 3 |
| | | | 5 | 7 | | | 9 | |
| 5 | | 7 | 4 | | | | | |
| | | | | 2 | 1 | | | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 2 | 5 | 4 | 3 | 6 | 8 | 9 |
| 5 | 6 | 3 | 2 | 8 | 9 | 1 | 7 | 4 |
| 9 | 8 | 4 | 1 | 6 | 7 | 5 | 3 | 2 |
| 3 | 7 | 9 | 4 | 5 | 6 | 8 | 2 | 1 |
| 4 | 2 | 6 | 8 | 7 | 1 | 3 | 9 | 5 |
| 8 | 5 | 1 | 3 | 9 | 2 | 4 | 6 | 7 |
| 2 | 3 | 5 | 9 | 1 | 8 | 7 | 4 | 6 |
| 1 | 9 | 7 | 6 | 3 | 4 | 2 | 5 | 8 |
| 6 | 4 | 8 | 7 | 2 | 5 | 9 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# வீட்டு மருத்துவம்

வீட்டில் தினந்தோறும் பயன்படுத்தும் உணவுப் பொருள்கள் மூலம் எளிதாகச் சில சித்த மருந்துகளைத் தயாரிக் கலாம்.

1. ஐந்தாறு துளசி இலைகளோடு ஒரு சிறு துண்டு சுக்கு, இரண்டு லவங்கம் சேர்த்து அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

2. சுக்கு, வால் மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை நன் றாக வறுத்துப் பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட்டால் தொண்டைக் கரகரப்புக் குணமாகும்.

3. தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து நன்றாகச் சுட வைத்து ஆற வைத்து நெஞ்சில் தடவினால் சளி குணமாகும்.

4. ஒரு கோப்பை தண்ணீரில் கருவேப்பிலை, இஞ்சி, சீரகம் ஆகிய மூன்றையும் கொதிக்க வைத்து ஆற வைத்து வடி கட்டிக் குடித்தால் செரிமானச் சிக்கல் சரியாகும்.



5. வெந்தயத்தை நெய்யில் வறுத்துப் பொடி செய்து மோரில் கலந்து குடித்தால் வயிற்று வலி நீங்கும்.

6. செம்பருத்தி இலைகளைப் பொடியாக்கி தினமும் இரு வேளை சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் தீரும்.

7. சூடம், சுக்கு, சாம்பிராணி, பெருங்காயம் இவற்றை சம அளவு எடுத்து சேர்த்து வடித்த கஞ்சியில் கலக்கி மறுபடியும் சூடாக்கி மூச்சுப்பிடிப்பு உள்ள இடத்தில் மூன்று வேளை தட வினால் குணமாகும்.

8. கருணைக்கிழங்கை பொடி யாய் நறுக்கி துவரம் பருப் புடன் சேர்த்து சாம்பாராகச் செய்து சாப்பிட்டு வந்தால் மூல வியாதி குணமாகும்.

9. எலுமிச்சம்பழச்சாற்றை தேனில் கலந்து குடித்தால் வறட்டு இருமல் குணமாகும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### தீவிரமாகச் சிந்தித்தால் உண்மையை உணரலாம்

தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லா வற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. எம்முடைய தவறுகளை நாம் உணர மறுப்பது தான் இதற்குக் காரணம்.

எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் எம்மால் தூயவராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டுமானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு நம்முள் மலரத் தொடங்கும்.

உங்களுக்குப் பிடித்ததை கடைப்பிடிப்பதுபோல, மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால், சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 50 | 60–80 | 60 | 40 | 40 |
| கத்தரி | 80 | 40 | 60 | 50 | 40–60 | 50 | 50 | 25 |
| கரட் | 150 | 140 | 240 | 120 | 240 | 240 | 240 | 200 |
| மரவள்ளி | 60 | 60 | 50 | 40 | 50–60 | 60 | 60 | 45– 50 |
| பயிற்றை | 90 | 60 | 80 | 80 | 80–100 | 80 | 120 | 110–120 |
| பாகல் | 150 | 140 | 120 | 140 | 120 –140 | 120 | 120 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 60 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 90 | 80–90 | 120 | 120 | 70–80 |
| சி.வெங்காயம் | 140 | 140–150 | 150 | 180 | 120–140 | 160 | 160 | 110–140 |
| பூசணி | 30 | 30 | 30 | 30 | 20–30 | 40 | 60 | 20 |
| தக்காளி | 100 | 120 | 120 | 120 | 120–130 | 140 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 40–60 | 40 | 60 | 25–30 |
| கீரை | 20 | 20 | 30 | 05 | 10–20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 10 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 400 | 500 | 360 | 380–400 | 400 | 500 | 350 |
| புடோல் | 60 | 50 | 50 | 50 | 40–60 | 60 | 80 | 60 |
| கோவா | 90 | 100 | 60 | 80 | 80–100 | 100 | 100 | 80 |
| வெண்டி | 100 | 60 | 70 | 60 | 100–120 | 80 | 120 | 50 |
| போஞ்சி | 180 | 160 | 200 | 180 | 160–180 | 200 | 200 | 190 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 | 120 | 120– 130 | 200 | 120 | 140–150 |
| தேங்காய் | 50 | 35–40 | 60 | 40–50 | 40–60 | 40 | 35–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80 | 70–80 | 80–100 | 90 | 120 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 60–80 | 50–60 | 60 | 100 | 50–60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30– 40 | 20 | 5–20 | 15–15 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 160 | 220–260 | 160 | 220 | 170 |
| இராசவள்ளி | 120 | 140 | – | – | 80–100 | – | 160 | 80–90 |
| முருங்கைக்காய் | 200 | 140 | 160 | 220 | 180–200 | 200 | 200 | – |

## நாளை

ஆனி – 31
வியாழக்கிழமை
16.07.2015

**திதி:** அமாவாசை மு.ப. 07.39 வரை
**நட்சத்திரம்:** புனர்பூசம் பி.ப.03.59 வரை
**சுபநேரம்:** 07.30-9.00 வரை
**இராகுகாலம்:** 01.30-12.00வரை

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 600–650 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 300 | 500 |
| கணவாய் | 600 | 600 | 700 | 700 | 600 | – |
| பாரை | 600 | 600 | 600 | 500 | 450 | 380 |
| சுறா | 600 | 500 | 600 | 600 | 600 | 550 |
| சீலா | 300 | 500 | 500 | 450 | 400 | – |
| விளை | 650 | 400 | 400 | 400 | 500 | 400 |
| மூரல் | 300 | 400 | 400 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 500 | – | – |
| கிழாக்கன் | 650 | 750 | – | 450 | 400 | – |
| ஓரா | 400 | 400 | 400 | 400 | – | 350 |
| திரளி | 300 | 300 | 220 | 300 | 200 | 300 |
| நகரை | 300 | 350 | 200 | 400 | – | 300 |
| சூடை | 150 | 200 | 200 | 120 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 250 | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 250 | 150 |
| பாலை | 400 | 300 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 280 | – | 250 |

# குருப் பெயர்ச்சிப் பலன்

உங்களுக்கு 16-12-2014 இல் அஷ்டமத்துச் சனி முடிந்துவிட்டது. இதுவே ஒரு பெரிய மகிழ்ச்சிக்குரிய விடயம். தற்போது குரு 5-7-2015 முதல் உங்கள் ராசிக்கு 6இல் வருகிறார். 6ஆம் இடத்தில் குரு வந்தால் கை, கால்களில் பந்தனம் ஏற்படும் என்று சோதிடத்தில் கூறப்பட்டுள்ளது. ஒருசிலருக்கு 6 இல் உள்ள குருபகவான் கடன் தொந்தரவுகளைக் கொண்டு வருவார். எனவே எப்போதும் சிக்கனமாக நடந்துகொள்ள வேண்டும். கடன் தொல்லைகள் வராமல் சிந்தித்துச் செயல்பட வேண்டும். ஒருசிலருக்கு கணவன்–மனைவி இடையே கருத்து வேறுபாட்டைக் கொடுத்து கடன் கவலைக்கு சமமான கஷ்டங்களை மட்டும் கொடுப்பார். எப்போதும் வாழ்க்கையில் யார் சொல்லையும் கேட்காது, தான் என்ற அகங்காரத்துடன் இருப்பவர்கள் மட்டும் விபத்தைச் சந்திப்பார்கள். தெளிவான பேச்சுகளை மட்டும் கையாளவேண்டும். பேச்சில் கனிவு இருக்கவேண்டும். யாருக்கும் வாக்குக் கொடுக்கக்கூடாது. உங்கள் தாய்மாமன் நல்லவராக இருந்தாலும், தற்போது உதவி செய்ய முடியாத நிலையிலிருப்பார். தண்ணீர் கிடைக்கும் போது பிடித்து வைக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

**05-07-2015 - 23-08-2015**
**குரு, கேது சாரத்தில்**
இந்தக் காலகட்டத்தில் பெரியவர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவர்களின் கோபத்துக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் வழியில் மருத்துவச் செலவுகள் கூடும். ஓரளவு மருத்துவம் செய்தால் போதும். உடல்நிலை சீராகும். குடும்பத்துடன் குலதெய்வ வழிபாடு செய்துவந்தால் சிரமங்கள் குறையும். சகோதரர்கள் மத்தியில் இருந்துவந்த பிரச்சினைகள் மறையும். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமான முடிவுக்கு வரும். கணவன்–மனைவி உறவில் விரிசல் வராது.

**24-08-2015 - 27-10-2015**
**வரை குரு, சுக்கிரன் சாரத்தில்**
இந்தக் காலகட்டத்தில் நீங்கள் மிகவும் நிதானத்துடன் செயற்பட வேண்டும். நினைத்த காரியங்களை செய்துமுடிப்பதில் தடை, தாமதங்கள் வரும். பணநிலையைப் பொறுத்தவரை தேவைகள் அதிகம் உண்டு. வருவாய் குறைந்த அளவே வரும். எனவே மிகவும் சிக்கனமாக இருக்க வேண்டும். உடலில் அடிக்கடி உபாதைகள் ஏற்படலாம். கடன் வாங்கும்போது யோசித்து வாங்க வேண்டும். உடன் பிறந்தவர்கள் உங்களுக்கு எதிராகச் செயல்படுவார்கள். தொழில் செய்கின்றவர்களும், வியாபாரம் செய்கின்றவர்களும் புதிய கிளைகளை ஆரம்பிப்பதைத் தள்ளிப் போட வேண்டும்.

**28-10-2015 - 15-01-2016**
**குரு, சூரியன் சாரத்தில்**
கடந்த காலத்தில் அனைத்து நிலைகளிலும் நீங்கள் தடை, தாமதங்களைச் சந்தித்திருப்பீர்கள். இப்போது எடுத்துக்கொண்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றியைப் பெறலாம். வியாபாரத்தில் இருந்துவந்த மந்தநிலை மாறும். தொழிலதிபர்கள் உற்பத்திப் பொருள்களை விற்க நல்ல நேரமிது. பொன், பொருள் வாங்கும் திட்டம் நிறைவேறும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகள் கல்வியில் உயர்ந்து வருவார்கள். வெளிநாடு செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். மனைவி வழியில் வரவேண்டிய சொத்துகள் பிரச்சினை யின்றி வரும்.

**16-01-2016 - 07-02-2016**
**குரு, சூரியன் சாரத்தில் வக்ரம்**
கடந்த இரண்டு மாதங்களாக நிம்மதிப் பெருமூச்சு விட்டீர்கள். இப்போது மீண்டும் பிரச்சினைகள் ஆரம்பமாகின்றது. 6இல் குரு உள்ள இந்த நேரத்தில் நீங்கள் எதிலும் நிதானமாகச் செல்லவேண்டும். யாருக்கும் கடனுக்காகப் பிணை நிற்காதீர்கள். அந்தக் கடனை நீங்கள்தான் கட்டவேண்டி வரும். பெற்றோர்கள் உடல்நலம் பாதிக்கலாம். தகுந்த மருத்துவச் செலவுகள் செய்யவேண்டும். வாகனங்களில் செல்லும்போது மிகவும் நிதானித்துச் சென்றால் விபத்துக்களைத் தவிர்க்கலாம். சகோதரர்கள் வழியில் ஒற்றுமைக் குறைவு ஏற்படும். எனவே விட்டுக்கொடுத்துச் செல்வது உத்தமம்.


**08-02-2016 - 14-06-2016**
**குரு, சுக்கிரன் சாரத்தில் வக்ரம்**
இந்தக் காலகட்டத்தில் அந்நிய மதத்தவர், அந்நிய மொழியினர் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். ஒருசிலர் தொழிலுக்காக இருப்பிடத்தை மாற்றிக்கொள்வார்கள். கொடுக்கல்– வாங்கல் தொழில் செய்கின்றவர்களுக்கு ஏற்றமான நேரமிது. உடல்நிலையில் சற்று முன்னேற்றம் காணலாம். பிள்ளைகள் இப்போது உங்கள் சொல்லைக்கேட்டு நடப்பார்கள். அவர்களின் உயர்படிப்புத் தொடரும். தொழிற்கல்வியிலுள்ள மாணவர்கள் புதிய கருவிகளைக் கண்டுபிடிப்பார்கள். அது மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். கடிதத் தொடர்புகளில் நல்ல தகவல் வந்து சேரும். ஒருசிலர் வெளிநாடு செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும்.

## உங்களுக்கு எப்படி?

**15-06-2016- 09-07-2016 குரு, சுக்கிரன் சாரத்தில்**
இந்தக் காலகட்டத்தில் உங்களுடன் பணியாற்றும் அல்லது பக்கத்தில் உள்ளவர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சக ஊழியர்களில் கறுப்பாக இருப்பவர்களால் தொல்லைகள் வரலாம். எனவே எச்சரிக்கையாகச் செயற்பட வேண்டும். கொடுக்கல்– வாங்கல் சிறப்பில்லை. வாகனங்களில் அடிக்கடி பழுதுகள் வரும். எனவே பராமரிப்பு அவசியம். உடன்பிறந்த சகோதரர்கள் மறைமுகமான உதவிகளை உங்களுக்குச் செய்வார்கள். அரசால் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். விரும்பிய இடத்துக்கு மாறுதல் வரும். நீண்ட காலமாகத் தள்ளிப்போன பதவி உயர்வுகள் கிடைக்கும்.

**10-07-2016 - 01-08-2016**
**குரு, சூரியன் சாரத்தில் வக்ரம்**
உங்கள் மனதில் புத்துணர்ச்சி பிறக்கும். காதல் திருமணம் செய்த மனைவியால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். தாய், தந்தையர் உடல் நலன் தேறும். அவர்களும் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். கணவன்– மனைவி ஒற்றுமை கூடும். குழந்தைப் பாக்கியம் இல்லாத தம்பதியருக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டும். வெளிநாடுகளில் பிள்ளைகள் நல்ல சம்பளத்தைப் பெறுவார்கள். அவர்கள் தமது குடும்பத்துக்கும் பெற்றோருக்கும் உதவியாக இருப்பார்கள். ஏற்கெனவே இருந்துவந்த கஷ்டமும் நீங்கும். பொருளாதார நிலை உயரும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவார்கள்.

**அரச ஊழியர்கள்**
குருபகவான் 6 இல் உள்ள இந்தக் காலகட்டத்தில் நீங்கள் மிகவும் பொறுமையுடன் செயற்பட வேண்டும். கிரகம் ஒத்துவரவில்லை என்றாலும், நமது நல்ல பழக்கவழக்கங்களால் காரிய வெற்றிகளை அடையலாம் என்பதை மறந்து விடக்கூடாது. பதவி உயர்வு, ஊதிய உயர்வு தாமதமாகும். ஏனைய பணியாளர்களையோ, அதிகாரிகளையோ விமர்சிக்காமல் இருப்பது நல்லது. அதிகாரிகள் இட்ட பணியைத் தட்டாமல் செய்தால் மட்டுமே நல்ல பெயரோடு பணியாற்ற முடியும்.



**வியாபாரிகள்**
வியாபாரிகளைப் பொறுத்தமட்டில், புதிய வாடிக்கையாளர்களை விட, பழைய வாடிக்கையாளர்கள் உங்களைத் தவிர வேறு எந்தக் கடையிலும் பொருள்களை வாங்க மாட்டார்கள். வேறு பகுதியில் கிளை தொடங்கும் திட்டத்தை நீங்கள் இப்போது நடைமுறைப்படுத்தக் கூடாது. பாத்திர வியாபாரம் செய்பவர்கள், இரும்பு வியாபாரம் செய்கின்றவர்கள் கூடுதலான இலாபத்தைப் பெறுவார்கள். தொல்லை கொடுத்துவந்த போட்டி வியாபாரிகள் விலகிச் செல்வார்கள்.

**தொழிலாளர்கள், தொழிலதிபர்கள்**
தொழிலதிபர்கள் வெளிநாடுகளில் தங்கள் தொழிலை விரிவுபடுத்தும் திட்டத்தைக் கைவிட வேண்டும். உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதில் தடை, தாமதம் வரலாம். பங்குதாரர்களிடம் மிகவும் எச்சரிக்கையாகப் பேசி செயற்பட வேண்டும். அவர்கள் உங்களை விட்டுப் பிரிந்துசெல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தொழிலாளிகள் வேலைப் பளு கூடும்.

**பெண்கள்**
பெண்கள் தியானத்தின் மூலம் மன அமைதியை அடையலாம். பிள்ளைகளின் நடவடிக்கைகள் உங்களுக்கு மனக்கஷ்டத்தைக் கொடுக்கும். பிள்ளைகள்மீதும், ஆண்டவன் மீதும் நம்பிக்கை வையுங்கள். நிம்மதியுண்டு. உடல்நலத்தில் சிறுசிறு பிரச்சினைகள் வந்துபோகும். அதிகமான மருத்துவச் செலவுகளைத் தராது. விருந்தினர் வருகையால் செலவுகள் கூடும். சிக்கனம் ஒன்றே உங்களைக் காக்கும். கணவன்– மனைவி உறவுகளில் விரிசல் வராது. பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகளைத் தள்ளி வைக்க வேண்டும்.

**மாணவர்கள்**
உங்களின் விடாமுயற்சி கை கொடுக்கும். உல்லாசப் பயணம் செல்லும் மாணவர்கள் தண்ணீரில் நீந்துவதைத் தவிர்க்கவேண்டும். தண்ணீர்க் கண்டம் உள்ளது. உடல் ரீதியாக சில பிரச்சினைகளைச் சந்திப்பீர்கள். தடுமாற்றம் ஏற்பட்டு சிறு விபத்துகள் வரலாம்.

**விவசாயிகள்**
பணப்பயிர்கள் மேலும் இலாபத்தைத் தரும். புகையிலை வியாபாரம் செய்கின்றவர்கள் கூடுதல் இலாபம் பெறுவார்கள். உற்பத்தியும் விற்பனையும் செய்கின்றவர் களுக்கு இரட்டிப்பு இலாபம் வரும். ஒருசிலர் சொத்துக்கள் வாங்கிச்சேர்ப்பார்கள். கடினமாகப் பாடுபட்டு விவசாயம் செய்வீர்கள். தென்னை விவசாயம் செய்கின்றவர்கள் அதிக விளைச்சலைப் பெறுவார்கள். பூக்கள் உற்பத்தி செய்கின்றவர்களும் அதிக விளைச்சலைப் பெற்று வழக்கமாக வரும் இலாபத்தைவிட கூடுதலான இலாபத்தைப் பெறுவார்கள்.




**அரசியல் பிரமுகர்கள்**
அரசியல் பிரமுகர்களின் செயற்பாடுகளை பொதுமக்கள் பாராட்டுவார்கள். நீங்கள் நல்லதே செய்தால், குருபகவான் உங்களுக்கு நல்லதே செய்வார். மற்றவர்களுக்குத் தீமை செய்தால் பதவியில் மாற்றம் வரும். தொட்ட காரியம் எதுவும் துலங்காமல் போகும். எனவே அரசியல் பிரமுகர்கள் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும்.

**பூரட்டாதி நட்சத்திரக்காரர்களுக்கு:**
நீங்கள் மிகவும் மனத்தெளிவோடு இருக்கவேண்டும். குடும்பச் சண்டைகள் தீரும். கணவன்– மனைவி ஒன்றுசேர்வார்கள். மற்றவர்கள் சொல்வதை மறுத்துப்பேசும் குணத்தைக் கைவிடவேண்டும். பொருளாதார உயர்வுகள் ஓரளவு வரும். தாய்– தந்தையர் சொல்லைக் கேட்டு நடப்பவர்கள் அதிக பலனை அடைவார்கள். போதைப் பொருளால் அழிவுகள் உண்டு. அப்படிப் பட்டவர்கள் மருத்துவச் செலவுகளை அதிகம் சந்திப்பார்கள். போதைப் பழக் கத்தை கைவிடுவது நல்லது.

**உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்களுக்கு:**
செயல்களில் தடை, தாமதங்களைச் சந்திப்பார்கள். ஆனால் எடுத்த காரியம் யாவும் வெற்றியாகும். சமூகத்தில் எப்போதும் உங்கள் பேச்சுக்கு முத லிடம் உண்டு. மற்றவர் கள் உங்கள் ஆலோ சனைகளை ஏற்பார்கள். புதிய வாகனம் வாங்கப் போட்ட திட்டம் நிறைவே றும். எப்போதும் உற்சாகமாக இருப்பீர்கள். தூரதேசத்திலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். சொத்துக்களில் நல்ல பலன் களை அடை வீர்கள்.

**ரேவதி நட்சத்திரக்காரர்களுக்கு:**
வயிற்றுவலி போன்ற தொந்தரவுகள் ஏற்படலாம். ஒருசிலருக்கு மருத்துவச் சிகிச்சைக்காக கூடுதல் செலவுகள் ஆகும். பணவரவுகளுக்கு பஞ்சமில்லை. பாக்கிகளை கட்டிமுடிப்பீர்கள். வாகனங்களில் கவனத்துடன் பயணிக்க வேண்டும். விபத்து வர வாய்ப்புகள் அதிகமுள்ளது. உங்கள் தாய், தந்தையர் நலனில் அக்கறை அதிகம் வேண்டும். அவர்களைக் கண்காணித்து வருவது நல்லது.

**பரிகாரம்**
முருகப் பெருமானையும், குருபகவானையும் தரிசித்து வரவேண்டும். 27 கொண்டைக்கடலையை எடுத்து, அதனை மஞ்சள் துணியில் முடிந்து பணப் பையில் வைத்துக் கொள்ளவேண்டும். விபத்துகள் எதுவும் வராது. நன்மையே நடக்கும்.



## வர்ணம் தீட்டலாம் வாங்க



# மனித நேயம்




மார்கழி மாதக் கடும் குளிர் நாட்டு மக்களை ஆழ்ந்த தூக்கத்தில் தாலாட்டிக் கொண்டிருந்தது. தமது உடலைக் கனத்த ஆடைகளில் புகுத்திக் கொண்டு நகர்வலத்துக்கு ஆயத்தமானார் வாமனபுரி ராஜா. அரண்மனை வாயிலில் தனக்கென நிறுத்திவைக்கப் பட்டிருந்த வண்டியில் ஏறிப் பயணிக்கலானார்.

வண்டி சென்ற வழியில் பாதையோரமாக விஜ யன் என்ற துறவி ஒரு சிறிய துணியை மட் டுமே அணிந்து உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். மகாராஜாவின் மனதில் கருணை கசியவே வண்டியை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கினார். தான் போர்த்தியிருந்த விலையுயர்ந்த போர்வையை அமைதியாகத் துறவியின் மீது போர்த்தினார். விஜயன் எவரிடமும் எதையும் கைநீட்டிப் பெற மாட்டார் என்பது ராஜாவுக்குத் நன்கு தெரியும். எனவே துறவி தூக்கம் தெளிந்து எழுவதற்குள் அங்கிருந்து புறப்பட்டு விட்டார். சற்று நேரத்தில் கண் விழித்த துறவி தன் மீது போர்வையொன்று போர்த்தப்பட்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டார். எனக்கு இந்தத் துணி போதாது என்று யாரோ போர்வையைப் போர்த்திவிட்டுப் போயிருக்கிறார்களே! துறவியான எனக்கு எதற்கு இந்தச் சுகமெல்லாம், என்று கூறியவாறு நாலாபுறமும் பார்வையை ஓட்டினார். சற்றுத் தூரத்தில் ஒரு நாய் குளிரால் நடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டார்.

எனக்காவது சிறு துணி இருக்கிறது. இந்த நாயிடம் எதுவும் இல்லை. தனது துன்பத்தை எவரிடமாவது சொல்லித் தீர்க்கவும் முடியாதது. பாவம் வாயில்லா ஜீவன் என்று கூறியபடியே நாய் மீது அந்தப் போர்வையைப் போர்த்தினார் துறவி விஜயன்.


# கொடுக்கும் பண்பு



கொடுப்பதற்கும், பகிர்வதற்கும் படிப்பறிவு தேவையில்லை, உண்மையான அன்பு உள்ளத்தில் இருந்தாலே போதும், கொடுக்கும் பண்பு தானாக வந்துவிடும். சிலவேளைகளில் கொடுக்கும் பண்பு நமது பிறவிக் குணமாகவும் வாய்த்துவிடுவதும் உண்டு. மிருகங்களுக்கும் இது பொருந்தும் ,கொடுப்பதைப் பற்றி, இரண்டு மிருகங்கள் தங்களுக்கிடையே உரையாடிய ஒரு கதைஇது.பன்றி ஒன்றுவெய்யிலின் அகோரம் தாங்கமுடியாமல், சேற்றில் புரண்டு புரண்டு கிடந்தது, அதே வேளை அருகில் இருந்த பசும் புல் வெளியில் பசு மாடு ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. பசுவைப்பார்த்த பன்றி, பசுவே இந்த மனிதர்கள் எல்லோரும் உன்னைக் கோமாதா, குலமாதா என்று போற்றுகின்றார்கள், உன் மலத்தை எடுத்து எரித்து வீபூதியாகப் பாவிக்கின்றார்கள். உனது சிறுநீரை கோமயம் என்று மருந்தாகப் பாவிக்கின்றார்கள். என்னை மட்டும் 'சீ, பன்டி' என்று பேசுகிறார்கள். அது எனக்கு பெரும் கவலையாக உள்ளது. நான் என்ன சும்மா இருக்கின்றேனா? நான் எனது உயிரை மாய்த்து, எனது உடலை உணவாக இந்த மனிதர்களுக்குக் கொடுத்தும் பயனில்லை என்று மனம் வருந்திச் சொன்னது, அதற்குப் பசு , பன்றியே! சற்று யோசித்துப்பார், நாம் உயிரை இழந்து, நமது உயிரற்ற உடலால் மனிதர்களுக்கு உதவி செய்வதை விட, நாம் உயிரோடு இருக்கும் போதே மற்றவர்களுக்கு உதவ வேண்டும் அப்போது தான் கொடுப்பதன் மகிமை உயரும், அன்பு பெருகும், உயிர்கள் எம்மை மதிக்கும் என்று தத்து வம் சொன்னது. ஆம்





இந்த உயிர் உட லுக்குள் உள்ள வரைதான் எம் மால் எதுவும் செய்ய முடியும். கை, கால்கள் ஓய்ந்த பின்னே துடிப்பதில் இலாபம் இல்லை. நமக்குள் இயக் கம் இருக்கும் போதே கொடுத்து வாழும் உன்னத பண்பை வளர்த்துக் கொள்வோம். இன்றே உதவி செய்யத் துணிவோம்.



# களுத்துறை

களுத்துறை இலங்கையின் மேற்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு மாநகரமாகும். இது களுத்துறை மாவட்டத்தின் தலைநகரமுமாகும். கொழும்பில் இருந்து தெற்குத் திசையில் இலங்கையின் மேற்கு கரையோரத்தில், களு கங்கை கடலோடு கலக்கும் இடத்தில் களுத்துறை அமைந்துள்ளது. களுத்துறையில் காணப்படும் பௌத்த விகாரை இலங்கை பௌத்தர்களுக்கு முக்கியமான வணக்கத் தல மாகும். களுத்துறை மாவட்டம் இலங்கையின் 25 மாவட்டங்களில் ஒன்றாகும். இது மேற்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. இலங்கை நாடாளுமன்றில் 8 ஆச னங்களைக் கொண்டுள்ளது. இது 762 கிராமசேவகர் பிரிவுகளையும் 14 பிரதேச செயலர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. களுத்துறை,கரையோரச்சமவெளி என அழைக்கப்படும் இலங்கையின் புவியியல் பிரிவில் அமைந்துள்ளது. கடல் மட்டத்துக்கு மேல் சுமார் 11 மீற்றர் உயரத்தில் காணப்படுகிறது. இங்கு வருடாந்த சராசரி வெப்பநிலை 27 பாகை செல்சியஸ் ஆகும். பெரும்பாலான மழை வீழ்ச்சி தென் மேற்கு பருவக் காற்று மூலம் கிடைக்கிறது.





2500–3125 மி.மீ. வருடாந்த சராசரி மழை வீழ்ச்சியை பெறுகின்றது. இது சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டம் ஆகும். இங்குள்ளமக்களில்பெரும்பான்மையினர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களாவர்.

# கல்வி என்பது..?



அறியாமை இருள் அகற்றும்
அகல் விளக்கு..!

ஆச்சரியங்களை உடைத்தெறியும்
ஆச்சரியக்குறி..!

இயற்கையின் சிக்கலைக் கூட
இயல்பாய்க் காட்டும் இயல்..!

ஈரேழு உலகங்களையும்
ஈர்ப்போடு காட்டும் ஈர்ப்புச் சட்டம்..!

உண்மைகளை வெளிக்கொணரும்
உன்னத ஒளிவிளக்கு..!

ஊசலாடும் வாழ்க்கையில் ஊடாடும்
ஊட்டப்பயிர்..!

எது உண்மை... எது பொய்மையென
எடுத்துக் காட்டும் நியாயத்தராசு..!

ஏன்..? எதற்கு..? எப்படி..? என்கிற
கேள்விகளுக்கு
ஏகாந்தமாய் பதில் தரும் பட்டறிவுச்
சுரங்கம்..!

ஐயங்களை அடியோடகற்றி
ஐம்புலனையும் கூர் தீட்டும் பாசறை..!

ஒன்று, இரண்டு, மூன்று என்று கணிதத்தை
ஒரு பிழையுமின்றிக் கற்றுத்தரும் கற்பகத்
தரு..!

ஓதாமல் இருப்பவரைக் கூடத் தனது
திறமையால்
ஓதவைக்கும் மந்திரக்கோல்..!

ஔவைக்கு மட்டுமன்றி.. அனைவருக்கும்
கிடைத்த
ஔடத மாத்திரை..!

அக்கறை இல்லாத அசடுகளுக்கு
கறை போக்கும் ஆயுதம்..!

# சங்கீத, நடன பாடங்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 15

இவ்வாண்டு ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களில் தோற்ற வுள்ள மாணவர்களுக்கு வலி காமம் கல்வி வலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை மு.ப 9.30 மணிமுதல் பி.ப 1.00 மணிவரை நடைபெறவுள்ளது. சங்கீத பாடத் துக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவிலும், நடன பாடத்துக்கான பரீட்சை வழி காட்டல் கருத்தரங்கு இராம நாதன் கல்லூரியிலும் நடை பெற உள்ளதால் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைக ளின் உரிய பாடத்துக்கு பொறுப் பான ஆசிரியர்கள் இவ் வாண்டு பரீட்சையில் தோற்றவுள்ள மாண வர்களுடன் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

# நடனப் போட்டி பிற்போடல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

இன்று புதன்கிழமை நடைபெற இருந்த அகில இலங்கை நடனப் போட்டி – 2015 தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற் போடப்பட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறுமென வலி காமம் கல்வி வலயத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)


## யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
## ஏல விற்பனை

எமது பாடசாலையில் பொருள்கணக்கெடுப்பின்போது பழுதடைந்ததாக இனங்காணப்பட்ட பொருள்கள் 28.07.2015 அன்று ஏலத்தில் விற்கப்படவுள்ளன. விற்கப்படும் பொருள் கள் தொடர்பான தகவல்கள் யாவும் பாடசாலையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. ஏல விற்பனையில் கலந்துகொள்ள விரும்புவோர் 27.07.2015 திங்கட்கிழமை 9.00 மணி தொடக் கம் 3.00 மணிவரை பொருள்களை பார்வையிட முடியும் என அறியத்தருகின்றோம்.

(சி.17938)(45.6.3) அதிபர்.

## அறிவித்தல்
## மொழிபெயர்ப்புக் கற்கை நெறிக்கான உளச்சார்புப் பரீட்சை

19.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவிருந்த பரீட்சை மு.ப 11.00 மணி தொடக்கம்2.00 மணி வரை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்

## TRADE FINANCE & INVESTMENTS PLC
## பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு

| MODEL | REG.NO. | CHASIS NO. |
|---|---|---|
| DISCOVER 125 | NP BAH-3750 | MD2A15BZ6DWA49228 |
| ISMART | NP BAY-8921 | MBLHA12EWE9D01119 |
| DISCOVER | NP VP-2806 | MBLKC12EEBGJ02286 |
| XL-R 125 | NP BAG-6578 | LTMJD2193D5102763 |
| HF DELUXE | NP BBT-4741 | MBLHA11ALE9K48081 |
| CBZX-TREME | NP XA-6085 | MBLKC12EEBGJ02286 |
| DISCOVER | NP BBK-6690 | MD2A57AZXEWE41227 |
| HF DELUXE | NP BAI-4961 | MBLHA11EWD9B21466 |
| HF DELUXE | NP BAM-0929 | MBLHA11EWD9H00629 |
| DISCOVER 125 | NP XE-9816 | MD2DSJZZZUWE82168 |
| HARVESTER | | DF11070235DF |
| ROAD MATE | NP QY-3830 | LSRHCKL11A1C00308 |
| ROAD MATE | NP QY-3949 | LSRHCKL11B1300097 |

ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வேஸ்ட்மென்ற் பி.எல்.சி
A9 வீதி, கரடிப்போக்கு சந்தி,
கிளிநொச்சிக் கிளையில் பார்வையிட முடியும்.
நிபந்தனைக்குட்பட்டது.

மேலதிக விவரங்களுக்கு: 021 228 0110, 021 228 0108

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேர்மன் செப்பேட் பெண் நாயும், 1½ வயது நிரம்பிய ஆண் நாயும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 628 4277

## பணியாளர் தேவை

கணக்காளர்
காசாளர்
சிட்டை எழுதுனர்
} முன் அனுபவ முள்ளவர்கள் மட்டும்

விற்பனையாளர் இருபாலாரும் தேவை.
பேப்பர் கவுஸ் ,300 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## பேக்கறி பயிற்றுநர் தேவை

அரசடிலேன், ஊரெழு கிழக்கு சுன்னா கத்தில் உள்ள அக்ஸிலியம் கலைத் தொழில் பயிற்சி மையத்திற்கு பேக்கறி பயிற்றுநர் தேவை.

தொடர்பு:
072 841 1121, 072 524 6570

## வேலை ஆள்கள் தேவை

யாழ் நகரில் உள்ள கடை ஒன்றுக்கு சிட்டை எழுதுநர்/ கணக்குப் பதிவாளர்/ கணினி இயக்குநர் (பெண் பணியாளர்) தேவை.
வயது எல்லை 18- 35 வரை
தொடர்பு:
077 9116108, 075 521 5200

## பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2015
# வன்னி மாவட்டம்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு
### (இலங்கை தமிழ் அரசுக் கட்சி)




சோரம் போகாத தலைமை,
வன்னி மண்ணில் இளைஞர்களின் நம்பிக்கை
வீட்டுச் சின்னத்துக்கும் 1, 9 ஆகிய
இலக்கங்களுக்கும் வாக்களிப்போம்.

-வன்னி மாவட்ட இளைஞர் கழகங்கள்-

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### அழைப்பின் பேரில் வான் (Hiace) மற்றும் பேருந்து ஒன்றினை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் உத்தியோக பூர்வ தேவைக்காக தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு (On call basis) ஆங்கில இலக்கப் பதிவுடைய கீழ்க்குறிப்பிட்ட வகையான வாகனங்களுக்கு கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

**1) வான் - ஆசன எண்ணிக்கை 14 - குளிரூட்டப்பட்டது**

மேற்குறிப்பிட்ட வான் சேவையை அவ்வாகனத்திற்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி மற்றும் திருத்த வேலைகள் போன்றவற்றுடன் வழங்க வேண்டும். மேலும் வாகனத்தின் முதற்பதிவு ஆனது 2009 ஆம் ஆண்டுக்கு பிற்பட்டதாகவும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 2007 ஆம் ஆண்டுக்கு பின்னரானதாகவும் இருக்க வேண்டும்.

**2) பேருந்து - ஆசன எண்ணிக்கை 54 - அரை சொகுசு**

மேற்குறிப்பிட்ட பேருந்து சேவையை அவ்வாகனத்திற்கான சாரதி, உதவியாளர், எரிபொருள், காப்புறுதி, மற்றும் திருத்த வேலைகள் போன்ற வற்றுடன் வழங்க வேண்டும்.


மேற்படி வாகனங்களுக்குரிய விண்ணப்பப் படிவம் மற்றும் கூறு விலை ஆவணங்களையும் மேலதிக விபரங்களையும் 27.07.2015 மதியம் 12.00 மணி வரை மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக வாகனம் ஒன்றிற்கு ரூபா 1000.00 பல்கலைக்கழக காசாளர் கரும பீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்களை கடித உறையின் மேல் மூலையில் வான் எனின் "வான் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" எனவும் பேருந்து எனின் "பேருந்து ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" என அடையாளமிட்டு 2015.08.03 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச்சபை, த.பெ.எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் 2015.08.03 அன்று பி.ப 3.00 மணிக்கு பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக் கலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

தலைவர்,
கேள்விச்சபை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்



### அரியரட்ணம் பரந்தாமன்

(உரும்பிராய் முத்துமாரியம்மன் ஆலய பிரதம தர்மகர்த்தா)

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் ஒஸ்கா லேனை வசிப்பிடமாகவும் கொண்ட அரியரட்ணம் பரந்தாமன் (12.07. 2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியரட்ணம்-விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், இமாவதியின் (பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், பகவதி, மற்றும் சிவசுப்பிரமணியம், தணிகாசலம், சாரதாதேவி, குகநேசமலர், காலஞ்சென்ற நிர்மலாதேவி மற்றும் சித்தி ராங்கதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான புனிதவதி, கார்த்திகேசு மற்றும் திலகவதி, புஸ்பவதி, குணவதி, கமலாவதி, ரஞ்சி, தட்சணாமூர்த்தி, கனகாம்பிகை, குமரேஸ்வரி, நல்லநாதன், அருமைத்துரை, துரைரட்ணம், காலஞ்சென்ற கணேசலிங்கம் (உரிமையாளர்-எரிக்கணேஸ்), பரமாணந்தம், விமலாதேவி, காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, வாரித்தம்பி மற்றும் பூலோகநாதன், றஞ்சன்பாபு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஒஸ்கா லேன், உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூமாலட்சுமி அப்பையா



தாவடி தெற்கு கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி பூமாலட்சுமி அப்பையா நேற்று (14.07.2015) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி கிழக்கு,
கொக்குவில்.

தொடர்பு:- 077 217 8921
021 222 2977
021 205 3054

(63163)

தகவல் :-
அ.பாலகுமாரன்
(மகன்)

### செல்வி அரசதுங்கம் யசோதா



மலர்வு 23.12.1962
உதிர்வு 13.07.2015

மல்லாகம் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அரசதுங்கம் யசோதா 13.07.2015 திங்கட்கிழமை மல்லாகத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரசதுங்கம் தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும் ஜெகதீஸ்வரி(ஜேர்மனி), அகிலேஸ்வரி(மல்லாகம், ஓய்வுபெற்ற பிரதம மருந்தாளர் யாழ் போதனா வைத்தியசாலை), திலகவதி (லண்டன்), வசந்தாதேவி(கனடா), கதிர்காமநாதன் (உடுவில்), கமலக்கண்ணன் (லண்டன்), ஸ்ரீ உமையாள்(நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீ கணநாதன்(ஜேர்மனி), இரகுநாதன் (மல்லாகம்), வித்தியாதரன்(லண்டன்), நடனசிவன்(கனடா), தனமதி(உடுவில்), சுபாசினி(லண்டன்), துஸ்யந்தன்(நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2015) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற ஒழுங்கை,
மல்லாகம்.

(63165)

தகவல் :-
குடும்பத்தினர்.
021 224 1665

## தேர்தல் வன்முறையை தடுக்க கடுமையான சட்ட திட்டங்கள்

*கோருகிறது 'கபே' அமைப்பு*

கொழும்பு, ஜூலை 15
தேர்தல் வன்முறைகளைத் தடுப்பதற்காக இம்முறை கடும் சட்ட திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே'யின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:- கட்சிகள் வீதிகளில் தமது செல்வாக்கை பயன்படுத்தி ஊர்வலங்கள் பேரணிகளை நடத்தும்போது, அது தேர்தல் வன்முறை சட்டத்தின்படி குற்றமாகும்.


கடந்த காலங்களில் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் நாள்களில் பல வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளது. இம்முறை அதனைத் தடுக்க பொலிஸார் முன்னின்று செயற்படுவார்கள். தேர்தல் வன்முறை சம்பவங்களை தடுக்கும் வகையில், தேர்தல்கள் ஆணையாளரும் பொலிஸ் திணைக்களமும் வலுவான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

எனவே, அவர்களுடன் நாங்களும் எங்களுடைய பணிகளை சரிவரச்செய்வோம்- என்றார். (த)

## மரண அறிவித்தல்

# தயாநிதி கஜேந்திரன்

(சந்திரா ஸ்ரோர்ஸ் ஆனைக்கோட்டை)



(c 17942)

கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தயாநிதி கஜேந்திரன் 13.07.2015 திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தயாநிதி (சந்திரா ஸ்ரோர்ஸ், உதயன் பத்திரிகை முகவர்)- புஸ்பராணி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம், பராசக்தி, பொன்னம்பலம், இலட்சுமி ஆகியோரின் அன்புப்பேரனும் ஜதிசங்கர், துவாரகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07. 2015) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. தயாநிதி (சந்திரன்-சந்திரா ஸ்ரோர்ஸ்)
தொடர்பு : 0212213166

# நிதிக் குற்றவியல் விசாரணை தேர்தலுக்கு இடையூறாகாது

கொழும்பு, ஜூலை 15

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் விசாரணைகள் நாடாளுமன்ற தேர்தலுக்கு இடையூறாக இருக்காது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுவில் கையொப்பமிட்டுள்ள வேட்பாளர் யாராக இருந்தாலும் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவுக்கு அழைத்து விசாரணை நடத்துவதற்குத் தடை எதுவும் இல்லை எனப் பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளைப் போன்று புதிதாகக் கிடைக்கும் முறைப்பாடுகளும் தேர்தல் காலமாக இருந்தாலும் விசாரணைக்கு உட்படுத்தப்படும்.

வேட்பாளர் தெரிவு தொடர்பில் ஏதேனும் சட்டப் பிரச்சினைகள் ஏற்பட்டால் அது குறித்து நீதிமன்றத்துக்கு அறிவித்து தேவையான சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (த)

# தலைப்பிறை தீர்மானிக்கும் மாநாடு 17 இல்

கொழும்பு, ஜூலை 15

புனித நோன்புப் பெருநாளை கொண்டாடுவதற்காக ஷவ்வால் மாதத்தின் தலைப் பிறையைத் தீர்மானிப்பதற்கான மாநாடு எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஃரிப் தொழுகையை அடுத்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

இதில் கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மற்றும் முஸ்லிம் கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜம்இய்யாவின் மாவட்ட, பிரதேசக் கிளைகள் தங்களது கிளைகளுக்குட்பட்ட பள்ளிவாசல்களில் அன்றைய நாள் பிறை பார்க்கும் படி அறிவிப்பு செய்து மக்களை பிறைபார்க்கத் தூண்டும்படி அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவின் பிறைக் குழுச் செயலாளர் அஷ்–ஷைக் ஏ.எம்.ஏ. அஸீஸ் வேண்டியுள்ளார். (த–10)

# ஊழல் செய்யாதோரே மு.கா வேட்பாளர்கள்

***அலிசாஹிர் மௌலானா தெரிவிப்பு***

கொழும்பு, ஜூலை 15

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஊழலற்ற மிகச் சிறந்த புனிதமான வேட்பாளர்களே களமிறக்கப்பட்டுள்ளனர் என அக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளரான அலிசாஹிர் மௌலானா தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இந்த தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மற்றும் வன்னி ஆகிய இரண்டு மாவட்டங்களில் தனியாகவும், ஏனைய எட்டு மாவட்டங்களில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தும் போட்டியிடுகின்றது. சில கட்சிகளினால் ஊழலற்றவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டது போன்று எமது கட்சியினாலும் ஊழலற்ற, படித்த, மக்களுக்கு சேவையாற்றக் கூடிய திறமையானவர்களையே நிறுத்தியுள்ளோம். இன, மத வேறுபாடின்றி மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடி எமது ஆதரவினை அதிகரிக்கவுள்ளோம். பதவி இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி நாங்கள் எப்போதும் மக்களோடு மக்களாக இருந்து அவர்களின் அன்றாட தேவைகளை நிறைவுசெய்து வந்துள்ளோம்.

எமது கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்கு மாகாண சபை சிறந்த முன்னுதாரணமாக உள்ளது. அச்சபை நல்லிணக்கத்துடன் ஏனைய இனத்தவர்களுடன் இணைந்து செயற்படுகின்றது. அது போன்றே எதிர்காலத்தில் நான் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படும் போது மேற்கொள்ளவுள்ளேன். யாருக்கும் பாகுபாடு கட்டுப்படமாட்டாது.

ஓகஸ்ட் 18ஆம் திகதி நாட்டில் ஐக்கிய தேசிய கட்சி பெரியவெற்றிபெறும். இதனையே இந்த நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். இதன் மூலம் நிலையான அரசை உருவாக்கி நல்லாட்சியை நிலை நாட்ட முடியும்–என்றார். (த–10)


## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கணபதி செல்வராசா
(ஓய்வு பெற்ற மின் இணைப்பாளர் காங்கேசன்துறை)

பிறப்பு 19.05.1956 — இறப்பு 15.07.1991

உற்றவர்க்கும் மற்றவர்க்கும்
உதவிகள் பல புரிந்து
உறுதுணையாய் இருந்தீர்களே
ஆண்டுகள் இருபத்திநான்கு
ஆயினும் மாறவில்லை உம்
நினைவுகள்

என்றும் உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
51, ராஜஸ்தான் காளி கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு கொண்டாவில்.

## வாகனங்கள் ஏல விற்பனைக்கான கேள்விக் கோரிக்கை

NPPU-4923 இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள கூடாரம் அடிக்கப்பட்ட TATA DIMO வகை வாகனமும் NPQY3297 இலக்கமுடைய நல்லநிலையிலுள்ள DAIDO மூன்று சக்கர வாகனமும் ஏல விற்பனைக்கு உண்டு. பெற விரும்புவோர் வாரத்தில் ஏழு நாள்களும் காலை 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணி வரையும் கீழ்க்காண் முகவரியில் பார்வையிட முடியும் என்பதோடு கேள்வி கோர விரும்புவோர் தங்களது கேள்விக்கோரிக்கையினை மூடு தபாலில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் TATA DIMO வாகனத்திற்கான கேள்வி கோரல், DAIDO முச்சக்கர வண்டிக்கான கேள்வி கோரல் எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 22.07.2015 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே.இல :- 077 060 4950, 021 492 3118
தொடர்புகளுக்கு :- தி.இராசநாயகம் தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி. (c 17944)

## பெயர் மாற்றம்

நாவலடி அல்வாய் வடக்கு,
அல்வாயில் வசிக்கும் எனது
மகளுடைய பெயர் சுஜித்தா என்பது
இன்று முதல் வைஸ்ணவி என்று
பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.
இதனைசகலருக்கும் பகிரங்கமாக
அறிவித்துக் கொள்கிறேன்.

பே.வரோதயம்
தந்தை

## A/L Personal Class

Biology, Chemistry
Science For Technology
T.P : 076 654 1292

## European Language Training Centrel

வெளிநாடு செல்வோருக்கான ஜேர்மன், பிரெஞ் மற்றும் சிங்கள மொழிகளும் கற்பிக்கப்படும்.ஐரோப்பியன் யூனியனின் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு கல்வி நிறுவனம் .

**கற்பிக்கப்படும் மொழிகள் :-**

French-French(பிரான்ஸ், கனடா, சுவிஸ்செல்வோருக்கான பரீட்சை(DELF) A1 அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

German-ஜேர்மனி, சுவிஸ் செல்வோருக்கான(Goethe Zertifikat A1)German Swiss Deutsh A1) அவசியமான பரீட்சை

English- (Speaking, A1 , IELTS)

Sinhala-(அரச உத்தியோகத்தர்களுக்காக )

ஆகிய வகுப்புக்கள்ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருகின்றது. அனுமதிக்கு முந்துங்கள்

கிளிநொச்சி
T.P :- 021 228 5600
075 077 5160
இல 07, பழைய கச்சேரி அருகில், கிளிநொச்சி.

வவுனியா
T.P :- 024 561 6556
சிவன்கோவிலடி, கோயில்குளம், வவுனியா.

(61126)

## கிரபிக்ஸ் டிசைனர் தேவை

பனர்கள், போஸ்டர்கள் மற்றும் விளம்பர
வடிவமைப்பில் அநுபவம் உள்ள
கிரபிக்ஸ் டிசைனர்கள் உடனடியாகத் தேவை.
ஆர்வமுடையவர்கள் நேரில் வரவும்

294/2, நாவலர் வீதி,
கைலாசப்பிள்ளையார் கோவிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்

## பொதுஅறிவித்தல்

இதுவரைகாலமும் *"மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்"* என்னும் பெயரில் இயங்கி வந்த இல்லம் 06.07.2015 திகதியிலிருந்து எமது இல்லத்தினது பெயர் **"மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்"** எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதுடன் வங்கிக்கணக்கிலக்கம் எதுவும் மாற்றம் செய்யப்பட வில்லை என்பதையும் அறியத்தருகின்றோம். யுத்தத்தினால் கடுமையான பாதிப்பிற்கு உட்பட்ட 400 இற்கு மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரித்துவரும் எமது இல்லத்திற்கு பொது மக்களது பேருதவி அவசியம் தேவைப்படுகின்றது. பொது மக்களது உதவியின் காரணமாக எமது இல்ல ஆதரவற்ற குழந்தைகளிலிருந்து 2 பேர்பட்டயக் கணக்காளர் கல்வி கற்க எம்மால் உதவ முடிந்துள்ளது. இவர்கள் பட்டயக் கணக்காளர் கல்வியுடன் 3ஏ எடுத்து பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவக் கற்கை நெறியினையும் தொடர்கின்றார்கள். இதனைவிட மேலும் 8 பேர் பல்கலைக் கழகக் கலைத்துறையில்கல்வி கற்று வருகின்றார்கள். மேலும் 45இற்கு மேற்பட்ட குழந்தைகள் க. பொ. த உயர்தரம் மற்றும் சாதாரணதரத்தில் கற்று வருகின்றார்கள். பொது மக்களது தொடர்ச்சியான கொடையினால் இவர்களுக்கு உயர்ந்த கல்வியினை வழங்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ள இதனையிட்டு அனைத்து நன்கொடையாளர்களுக்கும் குழந்தைகள் சார்பாக பெருநன்றி கூறுகின்றோம். அன்புக்கினிய பொது மக்களே!

நன்கொடையளிக்க விரும்புவோர் பின்வரும் கணக்கிற்கு மட்டும் நன்கொடையளித்து இயன்றளவு ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| கணக்கின்பெயர்: | மகாதேவாசுவாமிகள்சிறுவர்இல்லம் |
| முகவரி: | ஜெயந்திநகர், கிளிநொச்சி |
| வங்கிக்கணக்கிலக்கம் | 000 999 1351 |
| வங்கியின்பெயர் | இலங்கைவங்கி |
| கிளையின்பெயர் | கிளிநொச்சி |
| இரகசியக்குறியீடு (Swift Code) BCEY LK LX | |

தயவு செய்து இயன்றளவு இக்குழந்தைகளுக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

என்றும்சமூகசேவையிலுள்ள
தி.இராசநாயகம் - தலைவர்
மகாதேவாசுவாமிகள்சிறுவர்இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்



**சுந்தரம் செல்வராசா**

யாழ்.பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கை (கிடாய் விழுந்தான்) யைச் சேர்ந்த சுந்தரம் செல்வராசா (ரிங்கர் செல்வம்) நேற்று (14.07.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

54/2, முதலாம் ஒழுங்கை (கிடாய் விழுந்தான்) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர். T.P: 021 2224349

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **சந்திரா தவராசா**

தோற்றம் 12 * 12 * 1952



மறைவு 07 * 07 * 2015

அன்போடு அரவணைத்து ஆசையாய் அறிவுரைகள் கூறி
எமையெல்லாம் ஏற்றமுடன் வாழ வைத்த அம்மாவே
எந்நாளும் எம்மோடு இருந்த நீங்கள்
எம்மைவிட்டு எங்கு சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம் இதயத்தில்
என்றும் வாழ்வீர் அம்மா.

பாரதி லேன், நாயன்மார்க்கட்டு, நல்லூர். (63169)
குடும்பத்தினர், தவாஸ் அன்ட் சன்ஸ் தச்சுத் தொழிலகம்.

# ஓகஸ்ட் 17 இல் ஐ.தே.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி

## தினேஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 15


ஓகஸ்ட் 17 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் முன்னோக்கிப் பயணிப்போம்.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்டத்துக்கான வேட்புமனுவை தாக்கல் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் குறிப்பிட்டிருந்தார். கொழும்பு மாவட்டம் இலங்கையின் கேந்திர நிலையமாகும். இந்தத் தேர்தல், ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு முடிவைக் கட்டும். ஓகஸ்ட் 17 ஆம் திகதி நாம் மீண்டும்



வெற்றிபெற்று எமது ஆட்சியை உருவாக்கி, மைத்திரி பால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் கூட்டணியுடன் முன்னோக்கி செல்வோம்-என்றார். (த)

# பிரசன்ன ரணதுங்க பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஜுலை 15

மேல் மாகாண முதலமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான பிரசன்ன ரணதுங்க மற்றும் அவரது மனைவி ஆகியோர் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் கோட்டை நீதிவான் பிரியந்த லியனகேயால் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தால் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து முதலமைச்சர் மற்றும் அவரது மனைவி ஆகியோர் நேற்று நீதிமன்றுக்கு வருகை தந்திருந்தனர்.

சதுப்புநிலத்தை நிரப்புவதற்காக அந்நிலத்தை சூழக் குடியிருந்தவர்களை அப்புறப்படுத்துவதாக உறுதிமொழி வழங்கி 64 மில்லியன் ரூபா பணத்தைக் கோரியமை மற்றும் அத்தொகையிலிருந்து 15 மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முதலமைச்சருக்கும் அவரது மனைவிக்கும் எதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில், எதிர்வரும் 20ஆம் திகதி பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்குச்சென்று வாக்குமூலம் அளிக்குமாறு கோட்டை நீதிவான், மேல் மாகாண முதலமைச்சருக்கு நேற்று உத்தரவிட்டுளளார்.

## மஹிந்த

சிறிசேன.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரண்டு வாரங்களாக நான் அவமானப்படுத்தப்படுகிறேன் என்பதை அறிவேன். என்னை வில்லன் என்கின்றனர். துரோகி என்கின்றனர். காட்டிக் கொடுத்துவிட்டதாக விமர்சனம் செய்கின்றனர். இது ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், இலங்கையர்களிடம் உள்ள சுதந்திரத்தை அனுபவிக்கும் துடிப்பைக் காட்டுகின்றது. இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ள சுதந்திரத்தைக் குறுகிய நோக்கங்களுக்காக எவரும் பயன்படுத்தக்கூடாது. நான் விமர்சனங்களை வரவேற்கிறேன்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படுவதற்கு நான் முற்றிலும் எதிரானவன். மஹிந்தவுக்கு எதிரான எனது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இருந்த அதே நிலைப்பாட்டில்தான் நான் இன்றும் இருக்கின்றேன். இனியும் எனக்கு மஹிந்தவுடன் எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் இல்லை.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது போலவே, நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் மீண்டும் தோற்கடிக்கப்படுவார்.

இது மஹிந்த ராஜபக்ஷவின் தவறு அல்ல. ஜே.ஆர். ஜெயவர்த்தன உருவாக்கிய பொறிமுறை ஏற்படுத்தியுள்ள தவறு.

அரசமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டேன். மஹிந்த ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்தால், அரசமைப்புத் திருத்தம் சாத்தியப்படாமல் போகும்.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறும் சூழலில், பிரதமராக நியமிக்கக் கூடிய பல மூத்தவர்கள் அங்கே இருக்கின்றனர். எனினும், அந்தப் பதவிக்கும் மஹிந்த ஆசைப்படுகின்றார்.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், எந்த உறுதிமொழிகளின் அடிப்படையில் நான் தெரிவு செய்யப்பட்டேனோ அவற்றைச் செயற்படுத்த முடியும். நான் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவேன். எனது கொள்கைகளை நடைமுறைப்படுத்துவேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டு, மஹிந்த ராஜபக்ஷவை தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரும் இரகசிய முயற்சி ஒன்றை அறிந்தே நாடாளுமன்றத்தைக் கலைத்தேன். நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் ரணில் விக்கிரமசிங்க பதவி இழப்பார்.

இத்தகைய நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்க உரிமை கோரும். இதன் பின்னர் தேசியப்பட்டியல் மூலம் மஹிந்த ராஜபக்ஷவை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்து பிரதமராக்குவதற்கான முயற்சிகள் இடம்பெற்றன. அந்த முயற்சியை தோற்கடித்தேன். மூழ்கும் நிலையில் இருந்த டைட்டானிக் கப்பலை நான் மூழ்கவிடவில்லை.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நான் நடுநிலையாகவே இருப்பேன். நீதியான நியாயமான தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்குவேன். ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்ட ஆணையைப் பாதுகாப்பேன். அந்தக் கொள்கைக்கு மதிப்பளிக்கும் நாடாளுமன்றம் அமையும் என எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

## மஹிந்தவைத்

படுத்தவுமே, குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுவதாக எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (த-5)

## ரணிலால்

உருவாக் கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அவரை மீண்டும் பிரதமராக்கினால் 2009ஆம் ஆண்டு வென்றெடுக்கப்பட்ட சமாதானம் இல்லாதொழிக்கப்படும். மேற்குலக நாடுகளின் காலனித்துவ நாடாக இலங்கை மாறும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் விமல் வீரவன்ஸ எச்சரிக்கை விடுத்தார்.

இந்த ஆபத்திலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டுமாயின், மைத்திரி - மஹிந்த கூட்டணி ஆட்சியமைக்க வேண்டும். அதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச வளங்களைத் தேர்தலுக்குப் பயன்படுத்தமாட்டோம். நாம் நல்லாட்சி அரசு என்று கூறுகின்றனர். ஆனால், வெளிவிவகார அமைச்சின் இலக்கத் தகடுகள் மாற்றப்பட்ட வாகனங்கள் மாத்தறையில் தேர்தல் பரப்புரைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பரப்புரை நடத்துவதற்காக சிறிகொத்தவில் 5 ஆயிரம் பேருக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன - அலரிமாளிகைக்கு அருகிலுள்ள கட்டடத்தில் 400 பேர் மடிக்கணினியுடன் தயாராக இருக்கின்றனர். சமூக வலைத்தளங்களினூடாக இவர்கள் பிரசாரம் செய்கின்றனர்.

கடந்த 160 நாள்களில் என்ன நடந்தது? வடக்கில் பாதுகாப்பற்ற நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டில் வென்றெடுக்கப்பட்ட சமாதானத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, நாட்டுக்கு விரோதமாக சமாதான ஒப்பந்தம் செய்தார். அவ்வாறான நிலையில், அவர் மீண்டும் இந்த நாட்டின் பிரதமரானால் என்ன நடக்கும்?

வென்றெடுக்கப்பட்ட சமாதானம் இல்லாதொழிக்கப்படும். மேற்குலக நாடுகளின் காலனித்துவ நாடாக இலங்கை மாறும். இந்தச் சிக்கலிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவேண்டும். அதற்கு மைத்திரி -மஹிந்த தலைமைத்துவத்துடன் ஆட்சி அமையவேண்டும். அதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் - என்றார். (த-சி)

## ஐ.நா.

விசாரணை மேற்கொள்வார்கள் என்று முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுவரை குறித்த குழுவின் இலங்கைப் பயணம் தொடர்பிலான நிகழ்ச்சிநிரல் இன்னமும் வெளியிடப்படவில்லை. அத்துடன், குறித்த குழுவில் எத்தனை நிபுணர்கள் பங்கெடுக்கப் போகின்றார்கள் என்ற விவரமும் குறிப்பிடப்படவில்லை.

இதேவேளை, அடுத்த மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரையில், நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரைகள் உச்சமாக இருக் கும் காலப் பகுதி என்பதால், இந்தக் குழுவின் பயணம் பிற்போடப்படலாம் என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

## குருநாகலே

அவர் 58 இலட்சம் வாக்குகள் பெற்றிருந்தால் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டிருக்கலாம் தானே. எதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடுகின்றார்? அத்தனையும் அரசியல் தன்னாசை.

தன்னுடைய சொந்த மாவட்டத்தில் பல்வேறு வகையில் அபிவிருத்திகளை மேற்கொண்டார். மத்தல விமானநிலையம், துறைமுகம், பாதைகள் எனப் பல்வேறு துறைகளில் அம்பாந்தோட்டையில் அபிவிருத்திகளை மேற்கொண்டார். ஆனால், அதில் ஒன்றினதும் பலன் மக்களைச் சென்றடையவில்லை. அத்துடன், அங்கு போட்டியிடும் சஜித் பிரேமதாஸவிடம் படுதோல்வியைத் தழுவ நேரிடும் என்ற பயத்தின் காரணமாக மஹிந்த ராஜபக்ஷ குருநாகலை தெரிவு செய்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் ஊடகத்துறை மற்றும் அரச வளங்களைப் பயன்படுத்தி 58 லட்சம் வாக்குகளைப் பெற்றுத் தோல்வியைத் தழுவினார். இம்முறை அதிகாரம் மக்கள் கைகளில். அனைத்தும் சுயாதீனம், அவர் செய்த கொள்ளை, ஊழல் என்பவற்றை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

குருநாகலில் தலைமை வேட்பாளராக நான் போட்டியிடுகின்றேன். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் குருநாகலில் வாழும் அறிவுடைய சமூகமும், மக்களும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் தன்னாசைக்கு நல்லதொரு பாடம் கற்பிப்பார்கள்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் குருநாகல் மக்களுக்கு ஒரு போர் மாதிரி. அதாவது, நெப்போலியன் தன்னை எவரும் வீழ்த்த முடியாது என கனவு கண்டார். இறுதியில் என்ன நடந்தது? அதே மாதிரி இரண்டாம் மகா யுத்தத்தில் ஹிட்லருக்கு என்ன நடந்தது? அவ்வாறு மஹிந்த ராஜபக்ஷவையும் தோற்கடித்து ஐக்கிய தேசியக் கட்சி குருநாகலில் பெரிய வெற்றி பெறும்" -என்றார். (த-சி)

## கொள்ளைக்காரர்

மற்றும் பொருளாதார வீழ்ச்சி. கிரேக்கத்தில் பிரபல அமைப்பொன்று கிரேக்கம் போல் உலக கடன்சுமைகளுக்கு உள்ளான 25 நாடுகளைப் பட்டியலிட்டுள்ளது. அங்கு குறிப்பிடப்பட்டிருந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் தரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது வருடகாலமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அது. கடன் சுமைகளிலிருந்து மீண்டுவர முடியாமல் மேலும் மேலும் கடன்களைப் பெறும் நாடுகளின் பட்டியல் அது. இலங்கையின் பொருளாதாரத்தையும் மக்களின் பணத்தையும் சூறையாடி இலங்கையை பெரிய கடன்சுமைக்கு மஹிந்த ராஜபக்ஷ அரசு இட்டுச்சென்றுள்ளது.

இதற்குக் காரணம் படித்த அறிவுடைய சமூகம் நாடாளுமன்றத்தில் காணப்படாமையாகும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட வேட்புமனு வழங்கப்பட்டவர்களில் 80 சதவீதமானவர்கள் நாடாளுமன்றத்துக்கு செல்வதற்குத் தகுதியற்றவர்கள். கடந்த அரசியலில் இந்நிலைமை காணப்பட்டமையால்தான் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. ஊழல்கள், போதை வியாபாரமென தலைவிரித்தாடின.

மஹிந்த ராஜபக்ஷ என்ன செய்தார்? தம்முடைய மாவட்டத்தை அபிவிருத்திச் செய்தார். ஆனால், அதன் பலனை மக்கள் இன்னமும் அனுபவிக்கவில்லை. கிராமங்களை அபிவிருத்தி செய்பவர்கள் அல்ல, நாட்டை அபிவிருத்தி செய்பவர்களும், சிறந்த பொருளாதாரக் கொள்கைகளைத் திட்டமிடுபவர்களுமே நாடாளுமன்றத்துக்குத் தேவை

எனவே, தகுதியானவர்களை நாடாளுமன்றத்துக்கு மக்கள் தெரிவு செய்யவேண்டும். இந்த நாட்டை கடன்சுமையிலிருந்து மீட்கவும், சிறந்த பொருளாதாரக் கொள்கைகளை ஏற்படுத்தவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும் அறிவுடைய நாடாளுமன்றம் தேவை. அதற்குத் தகுந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களே. ஆகவே, மக்கள் இம்முறை கடந்த ஜனாதிபதித் தேர்தல் போல் சிந்தித்து நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு செயற்படவேண்டும்- என்றார். (த-சி)

## உரித்தெடுக்க

கடந்த காலங்களைப் போன்று குறித்த சுவரொட்டிகளை அகற்றும் போது மிகுந்த சிரமப்பட வேண்டி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சுவரொட்டியை உரிக்க முற்பட்டால் முழுமையாக அவை உரிபடுவதில்லை எனவும், கடந்த காலங்களில் பயன்படுத்தும் பசையை விட வேறு பொருள்களைப் பயன்படுத்துவதன் காரணமாகவே அவற்றை அகற்றமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், பொலிஸார் முழுமையாக அவற்றை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளிலும், தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இவற்றை உடனடியாக அகற்றுமாறு, யாழ்ப்பாணத் தெரிவத்தாட்சி அலுவலரினால் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இரண்டு தடவைகள் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## அரசியல்

ஒருவர் எழுப் பிய கேள்விக்குப் பதிலளிக் கையிலேயே அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ராஜபக்ஷ எதிர்ப்புக் கோஷத்தை மாத்திரம் முன்னிறுத்தி நாம் தேர்தலில் ஈடுபடமாட்டோம். ராஜபக்ஷாக்களால் இந்நாட்டுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகள், குற்றச்செயல்கள் தொடர்பில் மக்களுக்கு தொடர்ச்சியாக தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. இவற்றை மறந்துவிடக்கூடாது.

மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் களமிறங்கியுள்ளமை குறித்து எவரும் அச்சப்படவேண்டியதில்லை. முழு அரசவளமும், அமைச்சரவையும், பாதுகாப்புத்துறையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கையில் தேர்தலை நடத்தி தோல்விகண்டவர்தான் மஹிந்த. இவ்வாறு தோல்வியடைந்த பின்னர் மெதமுலனவில் முடங்கிய அவர் விகாரை விகாரையாகச் சென்று மாத்திரமே அரசியல் நடத்திவருகிறார். அவரால் தற்போது என்ன செய்யமுடியும்? எனவே, மஹிந்தவை கண்டு பீதியடையவேண்டியதில்லை.

பிறந்த மண்ணிலேயே வாக்கு கேட்கமுடியாத நிலையில் அவர் இருக்கிறார். ஏன், தெற்கில்கூட அவரால் வாக்கு கேட்கமுடியவில்லை. இனிமேலும் அவருக்கு அரசியல் எதிர்காலம் இருக்கும் என நாம் நம்பவில்லை. தப்பித்தவறியேனும், நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் கூட அவரால் அப்பதவியில் நீடிக்கமுடியாது.

நிதிமோசடி உட்பட அவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பந்தமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டபின்னர், நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை அனுபவிக்க வேண்டியவராகவே மஹிந்த இருக்கிறார். இவ்வாறு குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கமுடியாது-என்றார். (த-சி)

உதயன்

# கருணாவின் காலை வாரியது சுதந்திரக் கூட்டு

*தேசியப் பட்டியலில் இடமளிக்க மறுப்பு*

கொழும்பு, ஜூலை 15

முன்னாள் பிரதி அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவருமான கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேசியப்பட்டியலில் இடமளிக்க மறுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 29 பேரின் பட்டியலில் கருணாவின் பெயர் இடம்பெறவில்லை.

முன்னதாக, அவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கேட்டிருந்தது. ஆனால், அவர் மட்டக்களப்பில் ஒரு வேட்பாளராகத் தேர்தலைச் சந்திக்க மறுத்து விட்டார். இந்த நிலையில் அவருக்குக் கடந்த முறையைப் போலவே தேசியப் பட்டியலில் இடமளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தனக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்குவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் சுசில் பிரேமஜெயந்த வாக்குறுதி அளித்திருப்பதாக கருணா கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

எனினும், நேற்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் வெளியிடப்பட்டுள்ள தேசியப் பட்டியலில் கருணாவின் பெயர் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# பொதுத் தேர்தலில் யாருக்கு வெற்றி?

*ஆய்வில் இறங்கியுள்ளன வெளிநாடுகள்*

கொழும்பு, ஜூலை 15

எதிர்வரும் பொதுத் தேர்தல் வெற்றி குறித்து அதிக சாதகமான நிலை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கா என்பதைக் கணிக்கும் ஆய்வுகளை வெளிநாடுகள் பலவும் ஆரம்பித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தூதரகங்களின் தகவல்கள் சுட்டிக் காட்டுவதற்கு அமைய, இந்த முறை பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி போட்டியிடுவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதை அடுத்து பல வெளிநாடுகள் அது குறித்து விசேட கவனத்தைச் செலுத்தியுள்ளன.

மஹிந்த வேட்புமனுவில் கையொப்பம் இட்டதையடுத்து, அமெரிக்கா, பிரிட்டன், கனடா, நோர்வே, இந்தியா, பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகளின் கவனம் இலங்கை மீது விழுந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்களின் தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஓகஸ்ட் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள 8 ஆவது நாடாளுமன்றத்துக்கானப் பொதுத் தேர்தலில் வெற்றியடைந்து பிரதமராகப் போவது முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவா? அல்லது ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவா? என்பது குறித்து இந்த நாடுகள் உன்னிப்பாக கவனம் செலுத்தி வருகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக இங்குள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் அரசின் உயர்மட்ட அரசியல்வாதிகள் போன்றே முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு நெருக்கமான அரசியல்வாதிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருப்பதாகவும் தெரிய வருகிறது. (த-22)

# 2/3 பெரும்பான்மை பெறும் ஐ.தே.கட்சி

## ரவி கருணாநாயக்க நம்பிக்கை


கொழும்பு, ஜூலை 15

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இம்முறை தேர்தலிலும் முன்னாள் ஜனாதிபதியால் வெற்றியை நினைத்துப் பார்க்க முடியாது. முன்னர் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்முடன் இணைந்து கொண்டார். இன்று சுதந்திரக் கட்சியின் பொருளாளர் இணைந்து கொண்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பை ஏற்று 21 நாள்களில் சம்பள உயர்வு வழங்கப்பட்டது. தனியார் துறையின் சம்பள உயர்வுக்கு பரிந்துரை செய்தோம்.

இது மட்டும் நாம் செய்யவில்லை.



எரிபொருள் விலையை குறைத்துள்ளோம்.பொருள்களின் விலைகளும் குறைக்கப்பட்டன. இதேபோல எதிர்காலத்தில் பொது மக்களுக்கு பல்வேறு நலன்களையும், நிவாரணங்களையும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றை எல்லாம் முறையாக செயற்படுத்த ஓகஸ்ட் 17ஆம் திகதி மக்களின் ஆணை எமக்கு கிடைக்க வேண்டும். கொழும்பு மாவட்டத்தில் 19ஆசனங்களில் 13 அல்லது 14 ஆசனங்களை கைப்பற்றுவோம் –என்றார். (த)

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய மானியத் திட்டம் அதிகரிப்பு

அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியம் தனது அங்கத்தவர்களுக்கு வழமையாக வழங்கிவந்த நலன்புரி மானியத்திட்டங்களை 2015 ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் அதிகரித்துள்ளதாக அறிவித்துள்ளது. ரூபா 50 மாதச் சந்தா செலுத்தும் அங்கத்தவர்களின் கொடுப்பனவுக்கே இவ்வாறு மானிய உதவி அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே தற்சமயம் ரூபா 20ஐ அங்கத்தவர்கள் சந்தாவாக செலுத்திவரும் நபர்கள் உடனடியாகத் தமது பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்கும் நம்பிக்கை நிதியத் தலைவர் அல்லது செயலாளர் ஆகியோரை சந்தித்து தமது சந்தாவை ரூபா 50 ஆகச் செலுத்தி ஆவன செய்யும்படி கேட்கப்பட்டுள்ளது.

மானிய அதிகரிப்பு தொடர்பில், மரண ஆதாரக் கொடுப்பனவாக ஒரு வருடத்துக்கு மேல் அங்கத்துவம் உள்ளோருக்கு ரூபா 3,000, 22 வருடத்துக்கு மேற்பட்டோருக்கு ரூபா 6,000, 3 வருடத்துக்கு மேற்பட்டோருக்கு ரூபா 15,000 வழங்கப்பட உள்ளது.

கண்சத்திர சிகிச்சை தொடர்பில் ஒரு கண்ணுக்கு ரூபா 5,000 வீதம் இரு கண்களுக்கும் ரூபா 10,000 கொடுக்கப்படும்.

வைத்தியசாலைக் கொடுப்பனவாக வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் தினம் ஒன்றுக்கு ரூபா 500 வீதம் குறைந்தது 10 நாள்களுக்கு ரூபா 5,000 வழங்கப்படும். இதயம், மூளை, சிறுநீரகம், புற்றுநோய், தொடர்பான சத்திரசிகிச்சைகளுக்கு மேற்குறிப்பிட்டவற்றில் ஒருசிகிச்சைக்கு மட்டும் ரூபா 15,000 வழங்கப்படும்.

புலமைப்பரிசில் தொடர்பில் அதிகபட்சம் அங்கத்தவர்களின் இருபிள்ளைகளுக்கு முதலாவது வருட பட்டப் படிப்புக்கு தலா ரூபா 5,000 வழங்கப்பட உள்ளது. (த-122)

# முஸ்லிம் அரசியல்வாதிகளின் கட்சித் தாவல்களால் பரபரப்பு

கொழும்பு, ஜூலை 15

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்துள்ள நிலையில், கடந்த ஓரிரு நாள்களில் வடக்கு, கிழக்கில் முஸ்லிம் அரசியல்வாதிகள் பலர் கட்சி தாவியுள்ளனர்.

கடந்த 2010ஆம் ஆண்டு வன்னி மாவட்டத்திலிருந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ஹுனைஸ் பாறூக் இம்முறை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார்.

அவர் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்திருந்தார். இந்த நிலையில் இப்போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்திருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அலிசாகிர் மௌலானா, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டுள்ளதுடன், அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிளவு ஏற்பட்ட போது, கருணாவைக் காப்பாற்றிக் கொழும்புக்கு கூட்டிச் சென்ற இவர் ஏற்கனவே ஐ.தே.கவில் இருந்து, மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டவராவார்.

இதற்கிடையே, பொத்துவில் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக இருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் மஜீத் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை குழுத் தலைவரான ஏ.எம்.ஜெமீல் ஆகியோர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டனர்.

அதேவேளை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்த எம்.எஸ்.சுபைர் அந்தக் கட்சியில் இருந்து விலகி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளராக போட்டியிடுகிறார்.

தேர்தல் காலங்களில் நடக்கும் இந்த கட்சித்தாவும் செயல்களை அரசியல் நோக்கம் கொண்ட வியாபாரம் என்று விமர்சித்துள்ள சமூக ஆர்வலரான எஸ்.எல்.எம்.ஹனீபா, கட்சித் தாவுகின்றவர்கள், தாங்கள் மக்களிடமிருந்து தப்புவதற்காக கையாளும் யுக்தியே தலைமைகள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது என்றும் தெரிவித்துள்ளார்.(க)

# மூன்று பிரதான கட்சிகளின் தேசியப் பட்டியல் விவரம்

கொழும்பு, ஜூலை 15

நாடாளுமன்றத் தேர்தலில் 196 உறுப்பினர்கள் மக்கள் வாக்குகள் மூலமும் 29 உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.

அந்தந்த கட்சிகள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் தேசியப் பட்டியலுக்கான ஆசனங்கள் வழங்கப்படும்.

இதன்படி மூன்று பிரதான அரசியல் கட்சிகள் தேசியப் பட்டியலில் இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ள மக்கள் பிரதிநிதிகளின் பெயர்ப் பட்டியலை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளன.

**ஐக்கிய தேசியக் கட்சி**

மலிக் சமரவிக்கிரம, கரு ஜெயசூரிய, டி.எம்.சுவாமிநாதன், அனோமா கமகே,கே.வேலாயுதம், மொஹமட் தம்பி ஹசனலி, அஹமட் மொஹமட் ஜமில், அதுரலிய ரத்ன தேரர், ஜயம்பதி விக்ரமகே, திலக் ஜனக மாரபன, சந்திரஜித் ஆச்ஞா போத மாரசிங்க, நிஸாம் காரியப்பர், எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன, முஹமட் அஸாத் ஸாலி, ஏர்வின் வீரக்கொடி, ராஜா உஸ்வட்டகெய்யாவ, விமல் ஜயசிறி, சுரநிமல ராஜபக்ஷ, வினிஸ்டன் பதிராஜா, சிறினால் த மெரே, ஏ.சசிதரன், சாவுல் ஹமீட், கிரிஷாந்த குரே, அப்துல் ரவூப் அப்துல் கபீஸ், முஹமட் ஹபீர், முஹமட் சல்மன், ஓமல்பே சோபித தேரர், முஹமட் ரவூப் முஹமட் நாஜா, கே.யோகதாஸ் பஞ்சரத்னம் ராம், டீ.வி. குணரத்ன.

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி**

ஏ.எச்.எம்.பௌசி, ஜீ.எல்.பீரிஸ், டிவ்.குணசேகர, திஸ்ஸ விதாரண, மொஹமட் குஷேன் ரிஸ்வி யஷ்ரீப், சரத் அமுனுகம, திஸ்ஸ அத்தநாயக்க, டிலான் பெரேரா, ஜெயரத்னம் ஸ்ரீரங்கா, ரெஜினோல்ட் குரே, ஜீவன் குமாரதுங்க, டிரான் அலஸ், மலித் ஜெயதிலக, ஷிரான் விரன் தலக்திலக, கோல்வின் குணரத்ன, பிரபா கணேசன், பைசர் முஸ்தபா, ரஜீவ் விஜேசேகர, கபில குணசேகர, டி.ஏ.ரத்னபால, எச்.எம்.சரித ஹேரத், கருப்பையா கணேசமூர்த்தி, லெஸ்லி தேவேந்திர, சோமவீர சந்திரசிறி, எம்.எச்.எம்.உதுமா லெப்பை, ஜயந்த வீரசிங்க, பியசிறி விஜேநாயக்க, எம்.எச்.எம். முஸாமில், கிவிந்து குமாரதுங்க.

**மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.)**

சரத் சந்திரசிறி மாயாதுன்ன (முன்னாள் கணக்காய்வாளர்), அருண கிஸ்மால் வர்ணசூரிய (சிரேஷ்ட சட்டத்தரணி), உபுல் குமாரப்பெரும (சிரேஷ்ட சட்டத்தரணி), ஏ.ஜே. ருகுணு ஹேவா (பேராசிரியர்), சாள்ஸ் தயானந்த (விரிவுரையாளர்), கே.எஸ்.சந்திரபோஸ் (கலாநிதி), சுசிரிபால மானவடு (பேராசிரியர்), கபில பெரேரா (பேராசிரியர்), பியதாஸ ரணசிங்க (பேராசிரியர்), ஜனக குமாரசிங்க (சிரேஷ்ட விரிவுரையாளர்), அல்ஹாஜ் மொஹமட் இப்ராகிம் (வர்த்தகர்), எஸ். சஜிவ சாமிகர (சுற்றுச் சூழல் ஆர்வலர்), எஸ்.அந்தனி ஜீவா (கலைஞர்), விநி ஹேட்டிகொட (சிரேஷ்ட விரிவுரையாளர்), நயோமி பிரியந்தி ரத்நாயக்க (வர்த்தகர்), அருண் ஹேமச் சந்திர (நிறைவேற்று அதிகாரி), சரணபால ஜெயசூரிய (நடிகர்), அனுருத்த ஜயசிங்க (சினிமா கலைஞர்), அநுர ஸ்ரீநாத் (நடிகர்), ஜனசேன ஹேவகே (சிரேஷ்ட விரிவுரையாளர்), விமலசிறி புஞ்சிஹேவா (சிரேஷ்ட விரிவுரையாளர்), எச்.எப்.ப்லி மௌலானா (ஆங்கில ஆசிரியர்), ரோஹித பண்டார (சமூக சேவகர்), மஞ்சுல சமரசேகர (சமூக சேவகர்), தம்மிக குமுது பொன்சேகா (வர்த்தகர், முகாமையாளர்), மஹிந்த தென்னக்கோன் (வர்த்தகர்), காந்தி புஸ்பலதா (ஓய்வுபெற்ற ஆசிரியை), எஸ்.ஜீ.கே.அந்தனி ஜயசிறி (வர்த்தகர்), ஜானக அதிகாரி (சட்டத்தரணி). (த)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் ஒன்பது பேர்

யாழ்ப்பாணம், ஜூலை 15

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பான பட்டியல், தேர்தல்கள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில், சி.க.சிற்றம்பலம், நாச்சியார் செல்வநாயகம், சொலமன் சிறில், மயில்வாகனம் தேவராஜன், மேரிகமலா குணசீலன், கனகநமநாதன், சூ.சே.குலநாயகம், அந்தோனிப்பிள்ளை மேரியம்மா, அருணாசலம் குணபாலசிங்கம் ஆகியோர்களது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை– முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் மனைவிக்கு தேசியப் பட்டியலில் ஆசனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், அவர் மறுத்தமை காரணமாக வழங்கப்படவில்லை என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

# சிறுபான்மை வேட்பாளர்களை ஓரம் கட்டிய சுதந்திர முன்னணி

கொழும்பு, ஜூலை 15

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இம்முறை சிறுபான்மையின வேட்பாளர்களுக்கு உரிய இடமளிக்காமல் ஓரம்கட்டியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கொழும்பு மாவட்டச் செயலகத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் 22 வேட்பாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் முஸ்லிம் வேட்பாளரும், ஒருவர்தமிழ் வேட்பாளருமே இடம்பெற்றுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கின்ற நிலையில், சிங்கள பௌத்த வாக்குகளைக் குறிவைத்தே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பா ளர்களை நிறுத்தியிருக்கிறது.

அதேவேளை, 3 முஸ்லிம் வேட்பாளர்களையும், 2 தமிழ் வேட்பாளர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.(த)



# யாழ். மாவட்ட தாச்சித்தொடரின் முடிவுகள்



யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்கு மாகாண சபையின் கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதிப்பங்களிப்புடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் அதன் அங்கத்துவக்கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட தாச்சித்தொடரின் ஆட்டங்கள் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

***வைகறை 'பி' எதிர் அம்பாள் 'ஏ'***

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் புதுமட வைகறை 'பி' அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் 'ஏ' அணி மோதிக்கொண்டது. இதில் புவனேஸ்வரி அம்பாள் 'ஏ' அணியினர் 3:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றனர்.

***தென்றல் எதிர் சிந்து***

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் நவாலி தென்றல் அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து 'ஏ' அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் ஆலடிசிந்து 'ஏ' அணியினர் 14:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றனர். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் இன்று புதன்கிழமை குறித்த கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தத்தொடரில் பி.ப. 4மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து சென் மைக்கல் அணி மோதவுள்ளது.

தொடர்ந்து பிற்பகல் 5மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் டைமன்ஸ் அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.(ம-23)

***கலைமதி வி.க. தொடர்***

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று [illegible]தன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் ரெட் றேஞ்சஸ் அணி மோதவுள்ளது.

பி.ப. 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதவுள்ளது.(ம-23)

## 21வயது ஆண்களுக்கான 400 மீற்றர் யாழ். மத்தியிடம் தங்கம்

வவுனியா, ஜூலை 15

வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 21வய துக்கு உட்பட்ட ஆண்களுக்கான 400மீற்றர் ஓட்டத்தில் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி புதிய சாதனையுடன் தங்கத்தைத் தனதாக்கியது.

யாழ். மத்தியினைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய ஜே.அபிமன் கடந்த வருடத்தில் படைக்கப்பட்ட சாதனையான 51.6 நிமிடங்கள் என்ற சாதனையை இல்லாமல் செய்து 51.4 நிமிடங்களில் ஓடி முடித்து தனது பெயரில் பதிவுசெய்தார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த மற்றொரு வீரரான டி.ஜோய் ஆகாஷ் 51.9 நிமிடங்களில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கத்தையும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்திக் களமிறங்கிய எஸ்.விதுர்ஷன் 52 நிமிடங்களில் ஓடிமுடித்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

## கொலின்ஸ் வி.க.தொடர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 15

கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் மின்னொளியில் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் வல்வை ஆதிசக்தி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 2:0என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.

ஆட்ட நாயகனாக உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியின் முன்கள வீரன் உசா னந்த் தெரிவானார். (ம-23-108)

## பல்க்நருக்குத் தடை

போதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் பல்க்நருக்கு அந்த நாட்டுக் கிரிக்கெட் சபையினால் நான்கு ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாத இறுதிப்பகுதியில் இங்கிலாந்தின் கழக அணியொன்றுக்காக தொடரில் பங்கெடுத்திருந்த பொழுது பல்க்நர் மதுபோதை யில் வாகனம் செலுத்தியதாக தெரிவித்து கைதுசெய்யப்பட்டார். இதனையடுத்தே அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## அரியாலை சனசமூக நிலைய தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

அரியாலை சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இதில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் அணியை எதிர்த்து நீர்வேலி ஸ்ரீகாமாட்சி அணி மோதிக் கொண்டது. 3செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் அணியினர் 2-0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றனர்.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் அச்சுவேலி யுத் அணியினர் 2-0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றனர்.

மூன்றாவதாக இடம்பெற்ற [illegible]த்தில் அச்சுவேலி ஸ்ரார் அ[illegible]யை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதிக் கொண்டது. 3செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணி 2-0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் இறுதிநாளான நேற்று நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 19 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலின் சில பதிவுகள். (ம)

## இந்து இறுதிக்குள்


யாழ்ப்பாணம், ஜூலை 15

வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் கரப்பந்தாட்டத் தொடரில் கடும் போராட்டத்தின் மத்தியில் இளவாலை மத்திய அணியை வெற்றி கொண்டு இறுதிக்குள் நுழைந்த ஆவரங்கால் இந்து இளைஞர் அணி.

வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் மின் ஒளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் கடந்த திங்கட்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றன.


முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தின் முதல் இரண்டு செற்களையும் இளவாலை மத்திய அணியினர் வெற்றிபெற்ற போதிலும் கடைசி மூன்று செற்களையும் தொடர்ச்சியாகக் கைப்பற்றிய இந்து இளைஞர் அணி 3-2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குள் நுழைந்தது. (ம)

# நெருக்கடியில் களமிறங்குகிறது இலங்கை




பாகிஸ்தான் எதிர் இலங்கை அணிகளுக்கிடையிலான 5 ஒருநாள் ஆட்டங்களைக்கொண்ட தொடரின் இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று பகலிரவு ஆட்டமாக பல்லேகலவில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதல் ஒருநாள் ஆட்டத்தினை பாகிஸ்தான் கைப்பற்றியுள்ள நிலையில் தொடரில் தொடர்ந்தும் சமனான அல்லது கணிசமான ஆதிக்கம் செலுத்த வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் இலங்கை வென்றேயாகவேண்டும் என்ற ஒருவித நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆட்டத்தில் இலங்கையின் தோல்விக்கு பெரும்பாலான கோணங்களில் காரணமாக இருந்தவர் ஹபீஸ். இதனால் இன்றைய ஆட்டத்தில் ஹபீஸின் மீது இலங்கையின் கவனம் அதிகப்படியாக இருக்கும் என்ற பொதுவான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் இலங்கையைத் தோல்வியடையச் செய்த அதே பல்லேகல மைதானத்தில் இன்றைய ஆட்டம் ஆரம்பமாகிறது என்ற காரணத்தினால் இன்றும் பாகிஸ்தானுக்கு சாதகமாக வாய்ப்புக்கள் இருக்கத்தான் செய்கின்றன. (ம)



# இங்கிலாந்தின் ஆலோசகராகிறார் மஹெல?

இலங்கைக்கிரிக்கெட்டின் ஜாம்பவானான மஹெல இங்கிலாந்து அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையினால் பரிசீலிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அணி 2014ஆம் ஆண்டு ரி–20 உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியபொழுது தற்போதைய இங்கிலாந்து அணியின் துணைப் பயிற்சியாளராக இருக்கும் பார் பிரேஸ்தான் பயிற்சியாளராக இருந்தார். மேலும், தற்போது தலைமை பயிற்சியாளர் பெய்லிஸிம் ஜெயவர்த்தனாவை நன்கு அறிந்தவர். இதனால், இவர்கள் இருவரினதும் சிபாரிசின் பெயரில் மஹெல இங்கிலாந்தின் ஆலோசகராக நியமிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)


# ரொஸ்சொவ்வுக்கு அபராதம்

தென்னாபிரிக்கா பங்காளதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க வீரரான ரொஸ்சொவ்வின் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்த சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அவருக்கு 50 சதவீதம் அபராதம் விதித்துள்ளது.

குறித்த ஆட்டத்தில் 163 என்ற மிக இலகுவான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் சிறிதும் போராட்டமில்லாமல் தென்னாபிரிக்காவை வீழ்த்தியது. ஆனால் இக்பால் இந்த ஆட்டத்தில் பெரிதாக பிரகாசிக்கவில்லை. பங்களாதேஷின் ஓட்டம் வெறும் ஐந்தாக இருந்தபொழுது அவர் ஆட்டமிழந்தார். இக்பாலின் ஆட்டமிழப்பைக் கொண்டாடுவதற்காக விரைந்து ஓடிய ரொஸ்சொவ் அவரை வேண்டுமென்றே இடித்துவிட்டுச் சென்றார். இக்பால் மைதானத்தில் உடனடியாக அதிருப்தி தெரிவித்ததையடுத்து குறித்த செயற்பாட்டினை வீடியோ மூலம் மீள் பரிசீலனை செய்த நடுவர்கள் ரொஸ்சொவ் தவறு செய்துள்ளார் என்று அறிக்கையிட்டதையடுத்து சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ரொஸ்சொவ்வுக்கு 50 சதவீதம் அபராதம் விதித்துள்ளது. (ம)




# சென்னைக்குத் தடை




கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகள் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்து விசாரணை நடத்தப்பட்டு வந்தது. இந்த நிலையில் குறித்த குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்ட காரணத்தினால் இந்த இரண்டு அணிகளுக்கும் இரண்டு வருடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த இரண்டு அணிகளும் ஐ.பி.எல். தொடர்பான விவகாரத்தில் இன்று முதல் ஈடுபடமுடியாது. தவிர சென்னை அணியின் உரிமையாளரான குருநாத் மெய்யப்பன்மற்றும்ராஜஸ்தான்அணியின் உரிமையாளரான ராஜ் குந்த்ரா இருவருக்கும் வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் சென்னை, ராஜஸ்தான் அணிகளின் உரிமம் முற்றிலுமாக மாற்றப்பட்டால் அந்த அணிகள் தொடர்ந்து விளையாடக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளனவா என்பது தொடர்பாக தொடர்ந்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. (ம)

# புவனேஷ் 50

சிம்பாப்வே அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் ஆட்டத்தில் வேகத்தில் மிரட்டிய புவனேஷ் குமார் ஒருநாள் ஆட்டங்களில் 50 இலக்குகள் என்ற மைல்கல்லை எட்டியுள்ளார்.

சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிம்பாப்வே அணியை வீழ்த்தி ஒருநாள் தொடரை 2–0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் 4 இலக்குகளைக் கைப்பற்றி அசத்தினார். இதன் மூலம் சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் 50 இலக்குகள் என்ற புதிய மைல்கல்லை அவர் எட்டியுள்ளார். (ம)




# இறுதியில் காலடிவைத்தது கலையொளி

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஞானம்ஸ் வி.கழகம் மாவட்ட ரீதியில் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் இணுவில் கலையொளி அணி 35 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தெரிவானது.

8 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட இந்த அரையிறுதியாட்டத்தில் மாலுசந்தி மைக்கல் அணியைஎதிர்த்து இணுவில் கலைஒளி அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மைக்கல் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானிக்க துடுப்பெடுத்தாடிய கலையொளி அணியினர் 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக பிரதீசன் 27 ஓட்டங்களையும் கோகுலன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மைக்கல் அணி சார்பாக அதிகபட்சமாக அச்சுதன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

48 பந்துகளில் 85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணியினர் 7.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களை பெற்றனர். அதிகபட்சமாக ரகு 15 ஓட்டங்களையும் பிரசாந் 7 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இணுவில் கலைஒளி அணி சார்பில் அதிகபட்சமாக தீபன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

# அழுகையுடன் அரைச்சதம்



இந்தியா எதிர் சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நேற்றையதினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் அறிமுகமாகிய மனீஸ் பாண்டே மகிழ்ச்சியின் எல்லைக்குச் சென்று அழுதமை நெகிழவைக்கும் சம்பவமாகப் பரவி வருகிறது.

தசைப்பிடிப்புக் காரணமாக இறுதி ஒருநாள் ஆட்டத்திலிருந்து ராயுடு விலக மாற்று வீரராக அறிமுகமானார் மனீஸ். இதைத் தொடர்ந்து சக வீரர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். அந்த சமயம் உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாமல் பாண்டே அழுதுவிட்டார். பின்னர் மூத்த வீரரான ஹர்பஜன் சிங் அவரைத் தேற்றினார். மனீஸ் பாண்டே தனது அறிமுக ஆட்டத்திலேயே 71 ஓட்டங்களை விளாசியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தொடரை வழித்துத் துடைத்தது இந்தியா

இந்தியா சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டத்திலும் இந்திய அணி 83 ஓட்டங்களால் வெற்றியீட்டி தொடரை 3–0 என்ற கணக்கில் வழித்துத் துடைத்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் இந்தியாவை துடுப்பெடுத்தாடப் பணித்தமை ஆரம்பத்தில் வேடிக்கையாக இருந்தாலும் பவர் பிளேயின் முடிவில் அது சரியெனவே தென்பட்டது.



ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய முரளி விஜய்யும் ரஹானேயும் முழுதுமாக 15 ஓட்டங்களைக்கூட எட்டவில்லை. அணியின் ஓட்டங்கள் 33ஆக இருந்தபொழுது இந்திய அணியின் இரண்டு ஆரம்ப வீரர்கள் இருவருமே உடைமாற்றும் அறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். உத்தப்பா சற்று போராட்டம் காட்டினாலும் திவாரி நிலைக்கவில்லை. ஆனந்தக் கண்ணீருடன் அறிமுக ஆட்டத்தில் களமிறங்கினார் மனீஸ் பாண்டே. மறுமுனையில் கெடர் யாதவ். இருவருமே முன்னனுபவம் அற்ற வீரர்கள் ஆனால் அனுபவமில்லாதவர்கள் என்ற [illegible]ச்சுக்கே இடமில்லையென்பதனைப்போல் அசத்தலாக ஆடினார்கள். 82 ஓட்டங்களாக இருந்த பொழுது விழுந்த நான்காவது இலக்கு இணைப்பாட்டம் வலுப்பெற்றுக்கொண்டு சென்றது ஐந்தாவது இலக்கு விழுந்தபாடில்லை. அரைச் சதம் கண்டுவிட்டார் பாண்டே சதத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தார் யாதவ். தடுக்க வேண்டும் என்ற சிம்பாப்வேயின் போராட்டங்கள் அத்தனையும் தோல்வியடைந்து போக முடிவில் இந்தியா 276–5.

277 ஓட்டங்களைப் [illegible]றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணிக்கு தொடக்கமே சொதப்பலாக அமைய முதல் இலக்கு 16 ஓட்டங்களில் சரிக்கப்பட்டது. வழக்கம்போல் சிப்கபா போராட்டம் காட்டினாலும் மறுமுனையில் இலக்குகள் சரிவதை எவராலும் தடுக்க முடியவில்லை. தலைமை இன்னிங்ஸிற்காக களமிறங்கிய சிக்கும்புரா உட்பட பெரும்பாலான வீரர்கள் ஒற்றையிலக்கத்துடனேயே வெளியேறினார்கள். ஆனால் அதிரடியில் வேடிக்கை காட்டி அரைச்சதம் கடந்தார் சிப்கபா. அவரையும் விட்டு வைக்கவில்லை பின்னி. முடிவில் சிம்பாப்வே 193 ஓட்டங்களில் சுருண்டு 83 ஓட்டங்களால் படுதோல் வியடைந்தது. (ழ)


**காணி தேவை**

2 தொடக்கம் 4 பரப்புக் காணி காங்கேசன் துறை ஊரணி தொடக்கம் பருத் தித்துறை முனை வரை உள்ள கடற் கரையோரத்தை அண்டிய பகுதியில் காணி தேவை.

தொடர்பு: கருணாகரன்
077 866 0068





**பாராளுமன்றத் தேர்தல் 2015**

**ஈ.சரவணபவன்**
(இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)

"உதய வாழ்வு"க்கு ஊடாக
வாழ்வாதார உதவி தந்து
உழைப்புக்கு வழி சமைத்து
ஏழை மக்களின் உயர்வுக்கு வித்திட்ட
"உதய நாயகன்" - உன்னத மனித நேயர் !
ஊருக்கு இவர் தேவை !!
உதயன் - சுடரொளி பத்திரிகைகளின்
குழுமத் தலைவரும், "உதயவாழ்வு"
நிறுவனத்தின் காப்பாளருமாகிய
திரு.ஈ.சரவணபவன் அவர்களை
மீண்டும் பாராளுமன்றுக்குத் தெரிவு செய்து
வாழ்க்கைத் தரம் உயர வகை செய்வோம்

- உதயவாழ்வு - நலனோம்புத் திட்டப் பயனாளிகள் -

X தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



**A/L-2015 மாணவர்களுக்கான...**

ஆசிரியர்: N.BABU வின்

**"புவியியல் கருத்தரங்கு"**

இடம் : DMI யாழ். நகர்
காலம் : யூலை 18,19,20
ஆரம்பம் : 18.07.2015 சனி-12 மணி
* வெளிமாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்

தொடர்பு: 0779365087



**O/L 2015, 2016, 2017,** மாணவர்களுக்கு
ஆங்கிலக்கற்கைநெறி (Spoken, Grammer & Past papers revision)
முற்றிலும் இலவசமாக கற்பிக்கப்படும்.
பதிவுகளுக்கு: கல்வியங்காட்டில் MCAI CAMPUS
243, Adiyapatham Road (Kalviyankadu Junction)
Web: www.mcai.edu.lk Supported by Jaffna Computer Society



**வாக்களிப்பில் பங்குபற்ற முன் ஆயத்தம் செய்வோம்**

1. வாக்காளர் அட்டையை முன் கூட்டியே பெற்றுக் கொள்வோம்.
2. வாக்காளர் அட்டை கிடைக்காத நிலையிலும் வாக்களிக்க உங்களுக்கு உரிமை உண்டு.
3. தேசிய அடையாள அட்டை வாக்களிப்புக்கு அவசியமானது.
4. தேசிய அடையாள அட்டை இல்லாத நிலையில் தேர்தல் ஆணையாளரால் வழங்கப்படும் சிறப்பு அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
5. வாக்களிப்பு நிலையத்தை முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள்.
6. நீங்கள் தெரிவு செய்யும் கட்சியையும், பிரதிநிதியையும் முன்கூட்டியே அறிந்துகொள்ளுங்கள்.
7. நோயாளர்கள், முதியோர்கள் வாக்களிப்பு நிலையத்துக்கு செல்வதற்கு வாகன முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்
8. நேரத்துடன் வாக்களிப்பு நிலையத்துக்கு சென்று வாக்களியுங்கள்.

குறிப்பு: மேலதிக தேவைகளுக்கு உங்கள் கிராம சேவையாளரை நாடுங்கள்.

**வாக்களிப்போம் ஜனநாயகத்தைப் பேணுவோம்.**

அனுசரணை: கரிதாஸ் கியூடெக் யாழ்ப்பாணம்.



BRITISH COUNCIL edexcel

**பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கான Edexcel London உயர்தர பரீட்சை மற்றும் BTEC HND பட்டப்படிப்பு தொடர்பான வழிகாட்டல் செயலமர்வு**

யாழ் நகரில் Edexcel மற்றும் British Council இணைந்து நடாத்தும் உயர்தர பரீட்சை மற்றும் BTEC HND பட்டப்படிப்பு தொடர்பிலான விசேட வழிகாட்டல் செயலமர்வு. பெற்றோர் , மாணவர்களுக்கிடையே விழிப்பூட்டும் வகையில் அச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. Edexcel ஆனது இலண்டனை மையமாக கொண்டு 85 நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி மற்றும் பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனமாகும்.

திகதி: ஜூலை 17 (வெள்ளிக்கிழமை)
நேரம்: மாலை 3.00 மணி - 5.00 மணி
இடம்: யாழ் பொது நூலகம் (பிரதான மண்டபம்)

அனுமதி இலவசம்

இந்த செயலமர்வானது British Council மற்றும் Pearson Edexcel ஐ சேர்ந்த அதிகாரிகளால் நடாத்தப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

பாடசாலை மாணவர்கள் , பாடசாலையை விட்டு விலகியோர், பெற்றோர்கள், உயர் கல்வி கற்போர் போன்ற அனைவருக்கும் வழிகாட்டும் நோக்கில் நடைபெறவுள்ளது.

மேலும் Edexcel A/L, BTEC Qualifications, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் , பட்டப்படிப்புக்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் வழிகாட்டல் பாதைகளை தெளிவு படுத்துவதோடு அனைவரையும் முன்னேற்ற கரமான பாதையை நோக்கி நகர்த்தும் ஓர் விசேட செயற்திட்டமாகும்.



**விசேட வேலைவாய்ப்புக்கள்**

**AUSSEE OATS MILLING PVT LTD.**

| | |
|---|---|
| மின்னியலாளர்கள் (Electricians) | 10 |
| ஊழியர்கள் (Unskilled Labours) | 30 |
| வர்ணம் தீட்டுபவர்கள் (Painters) | 10 |
| மேசன் (Mason) | 20 |
| சமையல்காரர் (Cook) | 2 |
| குழாய் பொருத்துநர் (Plumbers) | 4 |
| காப்பென்ரர் (Carpenters) | 2 |
| கட்டட பொறியியலாளர் (Civil Engineer) | 1 |
| போர்கிளிப் ஒப்பரேற்றர் (Forklift Operator) | 2 |
| உணவு தொழில்நுட்பவியலாளர்கள் (Food Technologist) | 2 |
| வெல்டர் (Welders) | 10 |
| வீட்டுப் பணிப்பெண்கள் (Housemaid) | 4 |
| பெண் சமையற்காரர் (Female cook) | 2 |

மேலதிக சலுகைகள் ➡ தங்குமிடம், உணவு & தேநீர்

நேர்முகத்தேர்வுக்கான அனுமதியினை தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளவும்

தொடர்புகளுக்கு: boddu.gurappa@ausseeoats.com
T.P: 0754256223, 0767930929

முற்றுமுழுதும் 100% நம்பிக்கையுடைய ஒரு இந்திய தனியார் கம்பனியாகும்

Director
Aussee Oats Milling (Pvt) Ltd.
28,BOI EPZ Merigama, Srilanka. 011 4389985



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை

உதயன்

15 ஜூலை 2015 புதன்கிழமை

பெருமையை மூன்று அறிகுறிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம். தோற்றத்தில் எளிமை, செயலில் மனிதத் தன்மை, வெற்றியில் வெற்றியின்மை.

— *பிஸ்மார்க்.*

# யாரோடு நோவோம்

*ராஜராஜன்*

தற்போது வெளிவரும் செய்திகளைப் பார்க்கும்போது வாழ்க்கையே வெறுத்துப்போய் விடுகின்றது. பல்கலைக்கழக மாணவி உடலில் தீ மூட்டி தற்கொலை, பெண் பொலிஸ் உத்தியோகத்தர் தீ மூட்டி தற்கொலை, பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் குளத்தில் மூழ்கிச் சாவு, மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் சாவு, வீட்டிலிருந்து சென்ற இளம் பெண்ணைக் காணவில்லை, இரண்டு இளைஞர் குழுக்கள் மோதிக்கொண்டதில் பலருக்குக் காயம்.... இவ்வாறு மனதுக்கு வேதனை தரும் சம்பவங்களைத்தான் செய்தி வடிவில் எம்மால் பார்க்க முடிகின்றது.

மனிதர்கள் தாம் வெட்டிய குழிக்குள் தாமே வலியச் சென்று வீழ்ந்து வருகின்றனர். மனிதனுக்கு மனிதனே எதிரியாக எப்போது மாறிவிட்டானோ, அன்றே அவனது அழிவும் ஆரம்பமாகி விட்டது.

மது, புகையிலை, போதைப்பொருள்கள் உடலுக்குத் தீங்கானதென அரசு விளம்பரம் செய்கின்றது. கசிப்புக் காய்ச்சுபவர்களும், போதைப்பொருள் விநியோகஸ்தர்களும் அவ்வப்போது கைது செய்யப்படுகின்றனர். ஆனால் அவற்றை முற்றாக ஒழிக்க முடிகின்றதா? ஏன் முடியவில்லை? மதுபானங்களையும், புகையிலைப் பொருள்களையும் விற்பனை செய்வதற்கு அனுமதியை வழங்கிவிட்டு போதைப்பொருள்களை ஒழிப்பதாகக் கூறுவதில் நியாயமெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. மது மற்றும் புகையிலைப் பொருள்களை விற்பனை செய்வதில் அதிக வருமானம் கிடைப்பதாக அரசு சார்பில் தெரிவிக்கப்படுகின்றது. அப்படியாயின் இவற்றைப் பயன்படுத்துவதால் தீமை ஏற்படுமெனக் கூறுவது அரசின் வெறும் நாடகமே தவிர வேறொன்றுமில்லை.

முன்னாள் ஜனாதிபதி தமது சொந்தங்களுடன் காலையுணவை உண்டமைக்கு 94லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகள் ஏழைகளைச் சென்றடையும்போது, அவர்களின் மனம் அதை ஏற்றுக் கொள்ளுமா? இந்த நாட்டில் வாழுகின்ற மக்களில் அதிக சதவீதத்தினர் அன்றாட உணவுக்கே அல்லாடுகின்ற போது நாட்டின் தலைவராக இருந்த ஒருவர் இவ்வாறு ஊதாரித்தனமாக நடந்து கொண்டதை எவராலுமே சகித்துக் கொள்ள முடியாதல்லவா?.

இறைவனின் படைப்பில் ஆணைவிடப் பெண்ணுக்கே முதலிடம் எனக் கூறுகின்றனர். ஆனால் நடைமுறையில் இது சாத்தியமாவதில்லை. பெண் இரண்டாம் பட்சமாகத்தான் ஆண்களால் மதிக்கப்படுகின்றாள். இதில் சீதனம் என்ற பெயரில் ஏற்படுத்தப்படுகின்ற கொடுமை வேறு. ஆணுக்குப் பெண்ணின் உதவியும் தேவை, அத்துடன் அவள் சீதனத்தையும் கொண்டு வரவேண்டும். பெண்ணானவள் படித்திருக்கலாம், தொழில் புரிபவளாக இருக்கலாம், ஆனால் சீதனம் வழங்குவதிலிருந்து இவற்றின் மூலமாக அவள் விதிவிலக்குக் கோரிவிடமுடியாது. ஆண் களும் இதற்கு அனுமதி வழங்குவார்களென எதிர்பார்க்க முடியாது. இந்தக் கொடுமை என்றுதான் இல்லாதொழியுமோ தெரியவில்லை.

ஒரு நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக இளைஞர்களைக் குறிப்பிடுவார்கள். ஒரு நாட்டின் இளைஞர் சமுதாயம் ஆற்றலும், நேர்மையும் கொண்டதாக இருக்கும்போதுதான், எதிர்காலம் வளம்பெற முடியும். ஆனால் இங்கு இன்று நடப்பதென்ன? மதுபாவனையிலும், போதைப்பொருள் பாவனையிலும் முன் நிற்கின்ற இளைஞர் கூட்டம், வாள்களை ஏந்திப் போரிடுவதையும் நாம் காண் கிறோம். இவர்களின் கைகளில் நாட்டின் எதிர்காலம் ஒப்படைக்கப்பட்டால் என்ன நேரும் என்பதை எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் நடுங்குகின்றது. ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தி படைத்தவர்களாக அரசியல்வாதிகளே திகழ்கின்றனர். ஆட்சியதிகாரம் முழுவதும் அவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் அவர்களை எவருமே தட்டிக் கேட்கமுடியாது. ஆனால் ஊழல், மோசடிகளில் ஈடுபடும் இத்தகையவர்கள் முழுநாட்டையுமே சூறையாடி விடுகின்றனர். மிகப்பெரிய குற்றவாளிகளான இளைஞர்கள் ஒன்றும் அறியாதவர்கள் போன்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நிற்பதைப் பார்க்கும்போது உள்ளம் வெந்து போகின்றது.

வங்கிகளில் கடன்களை வாங்கியவர்களும், லீசிங் நிறுவனங்களில் வாகனங்களைக் கொள்வனவு செய்தவர்களும் இன்று என்ன நிலையில் இருக்கின்றனர் என்பதை ஆண்டவனால் கூடக் கண்டுபிடிக்க முடியாது.ஏனென்றால்வெளியே பகட்டாகத் தெரியும் இவர்கள் நிம்மதியான தூக்கத்தை இழந்து வெகுநாள்களாகி விட்டன. இனிப்பாகப் பேசிப் பேசியே பணத்தையும், வாகனங்களையும் அள்ளி வழங்கிய இந்த நிறுவனங்கள் இறுதியில் நெருப்பையே அள்ளிக் கொட்டுகின்றன. தயவு தாட்சணியத்துக்கு அங்கு இடமே இல்லை.

இன்றுள்ள நிலையில் தமது வருமானத்துக்குள் வாழ்கின்ற மன நிலை எவரிடமுமே காணப்படவில்லை. வசதியானவர்களைப் பார்த்து அவர்களைப் போன்று வாழ விரும்புவர்கள்தான் அனேகர் உள்ளனர். ஆனால் இத்தகையவர்கள் இறுதியில் அனுபவிக்கின்ற துன்பங்கள்தான் சொல்லி மாளாதவை. வருமானத்துக்கு ஏற்ப அளவோடு வாழ்ந்திருந்தால் இந்தத் துன்பங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்காது.

“எங்கும் போலித்தனங்கள் நிறைந்து விட்டன. போலி மனித முகங்களையே காண முடிகின்றது.



இன்றுஅண்ணன் என்று அன்பாக அழைப்பவன் நாளைமரியாதைக் குறைவான வார்த்தைகளால் ஏசமாட்டான் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இன்றுள்ள சூழ்நிலையில் இல்லை. மனிதர்கள் அந்த அளவுக்கு மோசமாக மாறிவிட்டார்கள்.

சுயநலமும், தான் என்ற அகங்காரமும் எப்போதுமே இல்லாத அளவுக்கு மக்களின் மனங்களை ஆக்கிரமித்து நிற்கின்றன. சகோதர பாசம் கூட எட்டாத தொலைவுக்கு எட்டிச் சென்று விட்டது.

இந்த நிலையில் மாற்றானிடம் நாம் பாசத்தை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? எவரை நம்புவது என்பதே இன்று புரியவில்லை. நண்பன் யார்? எதிரி யார்? என்ற வேறுபாட்டையும் காணமுடியவில்லை. எங்கும்போலித்தனங்கள் நிறைந்து விட்டன. போலி மனித முகங்களையே காணமுடிகின்றது.

இந்த வேதனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் நம்பிக்கையான ஆள்கள் கிடைக்கவில்லை. மனதுக்குள் வைத்துப் புளுங்குவதைத் தவிர, வேறு வழியில்லை. யாரோடுதான் நாம் நோவோம் என்பதும் புரியவில்லை.

உதயன் | புதன்கிழமை | ஜூலை 15 | 2015



தொகுப்பு:
சோபனா

# இசைக்கலைஞனே



## வாழ்ந்து மறைந்த மெல்லிசை மன்னர்
# எம்.எஸ். விஸ்வநாதன்

“பார்த்த ஞாபகம் இல்லையோ பருவ நாடகம் தொல்லையோ வாழ்ந்த காலங்கள் கொஞ்சமோ மறக்குமோ இந்த நெஞ்சமோ...”

பி.சுசீலாவின் குரலில் இந்தப் பாடலைக் கேட்டு மயங்காதவர்கள் இல்லை. இந்தப்பாடலையைச் சிறந்த இசையமைப்பில் உருவாக்கிய பெருமைக்கு உரியவர் எம்.எஸ்.வி என்கின்ற எம்.எஸ்.விஸ்வநாதன் ஆவார். அந்தக் காலத்தில் திரையுலகில் முன்னணி நட்சத்திரங்களாக இருந்த எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன் ஆகியோர் நடித்த திரைப் படங்களில் இடம் பெற்ற பாடல்களைத் தனது இசையமைப்பில் உருவாக்கி திரையுலகில் நீங்காத இடம் பிடித்திருந்தார் எம்.எஸ்.வி.


### அறிமுகம்

மனயங்கத் சுப்பிரமணியன் விசுவநாதன் அல்லது எம். எஸ். விஸ்வநாதன் அல்லது பொதுவாக எம். எஸ்.வி, இந்தியாவின் தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர் ஆவார். இவர் கேரளாவின் பாலக்காட்டுக்கு அருகில் எலப்புள்ளி என்ற கிராமத்தில், 1928 ஆம் ஆண்டு மலையாளக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை, சுப்ரமணியன். தாயார், நாராயண குட்டியம்மாள் (நானிக்குட்டி). தனது நான்காவது வயதிலேயே தந்தையை இழந்த விசுவநாதன் கண்ணனூரில் உள்ள தனது தாத்தா கிருஷ்ணன் நாயர் வீட்டில் சென்று வளர்ந்தார். இவரின் அன்புக்கு உகந்த மனைவியாக ஜானகி அம்மாளுடன், கோபி கிருஷ்ணா, முரளிதரன், பிரகாஷ், அரிதாஸ் என நான்கு மகன்கள் லதா மோகன், மதுபிரசாத் மோகன், சாந்தி குமார் என மூன்று மகள்கள் என ஒரு பெரிய குடும்பமே இவருக்கு உள்ளது.

### இசையுலகில்

பள்ளிப் படிப்புப் படிக்காத இவர், இசையின் மீது கொண்ட நாட்டத்தால் கர்நாடக இசையை, நீலகண்ட பாகவதரிடம் பயின்று 13 ஆவது வயதிலேயே மேடைக் கச்சேரி நிகழ்த்தினார். இசையமைப்பாளர் சி. ஆர். சுப்புராமன் இசைக்குழுவில் இவர் ஆர்மோனியத்தையும், டி. கே. ராமமூர்த்தி வயலினையும் வாசிப்பவர்களாகப் பணி புரிந் தார்கள்.

## இவரது இசையமைப்பில் உருவான சில பாடல்கள்



### எம்.எஸ்.வியின் இசையில் வெளிவந்த மறக்க முடியாத பாடல்கள் சில..

செந்தமிழ் தேன்மொழியாள் (மாலையிட்ட மங்கை)
ஏன் பிறந்தாய் மகனே (பாகப்பிரிவினை)
தங்கத்திலே ஒரு குறை (பாகப்பிரிவினை)
பாலிருக்கும் பழமிருக்கும் (பாவமன்னிப்பு)
அத்தான் என்னத்தான் (பாவமன்னிப்பு)
காலங்களில் அவள் (பாவமன்னிப்பு)
மாலைப் பொழுதின் (பாக்யலெட்சுமி)
மலர்களைப்போல் தங்கை (பாசமலர்)
நான் பேச நினைப்பதெல்லாம் (பாலும் பழமும்)
பாலும் பழமும் (பாலும் பழமும்)
வாராய் என் தோழி (பாசமலர்)
எங்கிருந்தாலும் வாழ்க (நெஞ்சில் ஓர் ஆலயம்)
கல்லெல்லாம் மாணிக்க (ஆலயமணி)
பொன்னொன்று (படித்தால் மட்டும் போதுமா)
பூஜைக்கு வந்த மலரே (பாதகாணிக்கை)
நினைப்பதெல்லாம் ( நெஞ்சில் ஓர் ஆலயம் )
சொன்னது நீதானா ( நெஞ்சில் ஓர் ஆலயம் )
வாழ நினைத்தால் ( பலே பாண்டியா )
வளர்ந்த கலை ( காத்திருந்த கண்கள் )
வீடுவரை உறவு ( பாத காணிக்கை )
அன்று வந்ததும் ( பெரிய இடத்துப் பெண் )
அவள் பறந்து போனாளே ( பார் மகளே பார் )
நினைக்கத் தெரிந்த மனமே ( ஆனந்த ஜோதி )
பார் மகளே பார் ( பார்மகளேபார் )
உள்ளத்தில் நல்ல உள்ளம் ( கர்ணன் )
சிட்டுக் குருவி ( புதிய பறவை )
அண்ணன் என்னடா ( பழனி )
பார்த்த ஞாபகம் ( புதிய பறவை )
அதோ அந்த பறவை ( ஆயிரத்தில் ஒருவன் )
தமிழுக்கும் அமுதென்று ( பஞ்சவர்ணக்கிளி )

### திரையுலகுக்கு

இசையமைப்பாளர் சி. ஆர். சுப்புராமன் உடல்நலக் குறைவு காரணமாக, மறைந்ததால் முழுமை பெறாமல் இருந்த தேவதாஸ், சண்டிராணி, மணமகள் போன்ற படங்களை அவரது உதவியாளர்களாக இருந்த விசுவநானும் ராமமூர்த்தியும் பூர்த்தி செய்து கொடுத்தார்கள். தேவதாஸ் (தமிழ் ,தெலுங்கு) மற்றும் சண்டிராணி (தமிழ், தெலுங்கு, இந்தி) ஆகிய படங்களின் இணை இசையமைப்பாளர்களாக இவர்கள் இருவரும் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். இந்தப்படங்கள் வெற்றி பெற்றதால் இந்தியில் சங்கர்–ஜெய்கிஷன் என்ற பெயரில் புகழ்பெற்ற இரட்டை இசையமைப்பார்கள் இருந்தது போல் தமிழில் விசுவநாதன்–இராமமூர்த்தி என்ற இரட்டை இசையமைப்பாளர்களாக உருவாகலாம் என்ற எண்ணத்தை விசுவநாதன் இராமமூர்த்தியிடம் தெரிவித்து அவரது இணக்கத்தைப் பெற்றார். இவர்கள் இருவரும் ‘பணம்’ என்ற திரைப்படத்துக்கு முதலில் இணைந்து இசையமைத்தார்கள். ஆயிரத்தில் ஒருவன் திரைப்படம் வரை 700 படங்களுக்கு இணைந்து இசையமைத்தார்கள். இவர் தனியாக 500 படங்களுக்கு மேல் இசையமைத்துள்ளார். இளையராஜாவோடு சேர்ந்து, மெல்லத் திறந்தது கதவு, செந்தமிழ்ப் பாட்டு, செந்தமிழ்ச் செல்வன் என மூன்று படங்களுக்கு இசை அமைத்துள்ளார்.

1995 இல் சத்யராஜ் நடித்த “எங்கிருந்தோ வந்தான்” என்ற திரைப் படத்தில்இருவரும்மீண்டும்இணைந்து இசையமைத்தார்கள். கண்ணகி, காதல் மன்னன், காதலா காதலா போன்ற 10 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். ஏ. பீம்சிங், கிருஷ்ணன் பஞ்சு, ஏ. சி. திருலோசந்தர், கே. பாலசந்தர் ஆகிய இயக்குநர்களிடம் மற்ற இயக்குனர்களை விட அதிகமாக வேலை பார்த்திருக்கிறார். தமிழ்த் தாய் வாழ்த்தான நீராடும் கடலுடுத்த பாடலுக்கு மோகன இராகத்தில் இசைக் கோர்ப்பு செய்தவர் விசுவநாதன். வி.குமார், இளையராஜா, அ. இ. ரகுமான், கங்கை அமரன், தேவா, யுவன் சங்கர் ராஜா, ஜி. வி. பிரகாஷ் போன்ற இசையமைப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளார். இவருக்கு மெல்லிசை மன்னன் பட்டம், நடிகர் திலகம் சிவாஜி கணேசனால் சூட் டப்பட்டது.











### எம்.எஸ்.வியின் மறைவு

உடல்நலக்குறைவு காரணமாக சென்னை அடையாறில் உள்ள ஒருதனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தசினிமா இசையமைப்பாளரான எம்.எஸ்.விஸ்வநாதன் நேற்று அதிகாலை தனது 87 ஆவது வயதில் காலமானார்.














# தமிழ் விவாதிகள் கழகத்தின் விவாதப் பட்டறை 2015



தமிழ் விவாதிகள் கழகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கான ஒரு நாள் விவாதப் பயிற்சிப் பட்டறை நிகழ்வு ஜூலை மாதம் 11ஆம்,12ஆம் திகதிகளில் நடைபெற்றது. கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் 9 பாடசாலைகளைச் சேர்ந்த 63 மாணவர்களுக்கான விவாதப் பயிற்சி வழங்கல் நிகழ்வும், முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயத்தில் 8 பாடசாலைகளைச் சேர்ந்த 80 மாணவர்களுக்கான விவாதப் பயிற்சி வழங்கல் நிகழ்வும், நடத்தப்பட்டு இரு பிரதேசங்களிலும் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும் கழகத்தினால் வழங்கப்பட்டன.




விவாதம் பற்றிய அறிமுகம், விவாதம் பற்றிய விவாதிகளின் நோக்கு, தலைப்புத் தெரிவு, வாசிப்பின் முக்கியத்துவம், ஆளுமை விருத்தி, தலைமைத்துவம், மற்றும் மொழி வளமும் உச்சரிப்பும் போன்ற தலைப்புக்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

முன்னதாக தமிழ் விவாதிகள் கழகமானது 2013 இல் கொழும்பில் இருக்கும் 36 தமிழ் பாடசாலைகளைச் சேர்ந்த 250மாணவர்களுக்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும், விவாதப்பட்டறை நிகழ்வொன்றையும் 2014 இல் களுத்துறை பிரதேசத்தை சேர்ந்த 12 தமிழ்ப் பாடசாலைகளைச் சேர்ந்த 60 மாணவர்களுக்கான விவாதப் பட்டறையை கொழும்பு தமிழ் சங்கத்திலும் நடத்தியிருந்தது. இதை தவிர்த்து கொழும்பு,மல்வானை பிரதேசங்களில் சில தனிப்பட்ட பாடசாலைகளுக்கான பிரத்யேக விவாதப் பயிற்சியையும் கழகத்தின் உறுப்பினர்களான முன்னாள் விவாதிகள் வழங்கி வருகின்றனர்.

தமிழ் விவாதிகள் கழகமானது, மொழிமுனை என்ற பெயரில் அகில இலங்கை விவாதப் போட்டி ஒன்றையும் கடந்த வருடம் நடத்தியிருந்தது. போட்டிகளை மாவட்டரீதியில் நடத்தி, பின்னர் அந்த மாவட்டத்தில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற பாடசாலைகளைக் கொண்ட மாபெரும் இறுதிப்போட்டியை கொழும்பில் நடத்தியது. இதில் முழு இலங்கையையும் சேர்ந்த 150 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர். கழகத்தின் வருட நிகழ்வாக சொற்சிலம்பம் எனும் மாபெரும் விவாத நிகழ்வை 2013, 2014 ஆம் ஆண்டுகளில் அரங்கு நிறைந்த நிகழ்வாக நடத்தப்பட்டது. கிளிநொச்சி, முல்லைத்தீவு விவாதப்பட்டறையை நல்ல முறையில் செய்வதற்கு பல தனிப்பட்ட நபர்கள் பண உதவிகளைச் செய்திருந்தார்கள். தங்குமிட வசதிகளை சோலைவனம் நிறுவனமும், மாணவர்களுக்கான புத்தகப் பொதிகளை சமூக விஞ்ஞானிகள் சங்கமும், எழுது பொருட்களை பூபாலசிங்கம் புத்தக நிறுவனமும் அனுசரணையாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10)



# சித்திரமும் வடிவமைப்பும் கண்காட்சி








அண்மைக்காலத்தில் கொழும்பில் இடம்பெற்ற காட்சிப்படுத்தல்களில் முதல்முறையாக யாழ். பல்கலைக்கழத்திலிருந்து பட்ட தாரிகளாக வெளியேறிய சித்திரமும் வடிவமைப்பும் துறை சார்ந்த மாணவர்களை உள்வாங்கிய பல்வேறு தனியான வினாக்களும் ஏழு கலந்துரையாடல்களும் என்ற காட்சிப்படுத்தல் கொழும்பு சாஸ்கியா பெர்னான்டோ கலைக் கூடத்தில் நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இந்தக் காட்சிப்படுத்தலைப் பார்வையாளர்கள் பார்வையிடலாம். இந்த நிகழ்வில் புத்த ளம், யாழ்ப்பாணம், மட்டக் களப்பு, அம்பாறை,ஹற்றன்,கிளிநொச்சி என இலங்கையின் பல பாகத்தவர்களின் கலந்துரை யாடல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் யாழ். பல்கலைக்கழத்திலிருந்து பட்டதாரிகளாக வெளியேறிய சித்திரமும் வடிவமைப்பும் துறைசார்ந்த மாணவர்களை கொழும்பு கலை உலகுக்கு அறிமுகப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக இது அமைந் துள்ளது. காட்சிப்படுத்தலிலுள்ள அனைத்துப் படைப்புக்களும் ஒரு வருடகாலமாக விசேடமாக இந்தக் காட்சிப்படுத்தலுக்காகத் தயாரிக்கப்பட்டவை. இதில் பங்குபற்றும் ஏழு கலைஞர்களுடனான வினாக்களும் கலந்துரை யாடல்களும் கொழும்பின் கலைச் சந்தைக்கு வெளியே எவ்வாறு கலைஞர்கள் வாழ்தல், தொழிற்படுதல்என்பவற்றையும் எதிர்பாராதமுறையில் அறிவிப்பதாகவும் அமைகின்றது.



இலங்கையில் பலகலைஞர்கள் பல் கலைக்கழக பட்டதாரிகளாகிய பின்னர் முடிவிலே ஆசிரியத்தொழில், அல்லது தொழில் வாய்ப்பு விளம்பரங்களிற்கேற்ப தம்மை உள்வாங்கிக் கொண்டு அல்லது தகவல் தொழில்நுட்பத்துறை எனத் தங்களை நிலைத்திருக்கத்தக்க பல வேறுபட்ட நிரந்தரமான தொழில் வாய்ப்பு பாதைகளைத் தெரிவுசெய்து கொண்டு நகர்கின்றனர். இலங்கையில்ஏறக்குறைய 50 வீதமான கலைஞர்கள் குறைவான மத்திய வருமானம் பெறுபவர்களாகவே உள்ளனர்.

பல்கலைக்கழகத்தை விட்டு வெளி யேறிய சித்திரமும் வடிவமைப்பும்துறை மாணவர்களுக்கு இது ஒரு முன்னுதாரணம். இது சர்வதேச தரத்திலான கலைக்கூடமாக இருப்பதனால் இந்த 7 ஓவியர்களையும் கலை உலகுக்கு அறிமுகப் படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இது அமைகிறது. ஒரு நல்ல ஓர் ஓவியரால் தான் சிறந்த கலைஞர்களை உருவாக்க முடியும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ரி. சனாதனன், சாமினி பெரேரா ஆகியோர் இந்த 7 படைப்பாளிகளதும் படைப்புகள் இங்கு காட்சிப் படுத்தப்படு வதற்கான ஊக்கத்தையும் ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். (10)



# கண்ணாடிப் பூக்கள் கவிதைத் தொகுப்பு

செ.மகேஸ்

### கவிஞர் வேதிகா பிரபாகரன்

என் கண்களைக் கண்ணீர் ஆட்கொள்ளும்போதும், சந்தோசம் என் மனதில் சங்கமிக்கும் போதும் சாரமாய் என் பேனாவுக்குள் வந்து தாள்களில் கோலமிட்டு என் உணர்வுச் சிணுங்கல்களை அடுத்த நொடிக்கு எடுத்துச் செல்லும் என் உடலின் அணுக்கள்தான் என் கவிதைகள் எனக் கூறும் இளங்கவிஞர் வேதிகா பிரபாகரன் தந்துள்ள கண்ணாடிப் பூக்கள் எனும் கவிதைத் தொகுப்பு கனகராயன் மகா வித்தியாலயத்தில் இருந்து வெளிவந்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவியான வேதிகா ஆக்கிய கவிதைகளின் இலக்கியச் சிறப்பு "கண்ணாடிப் பூக்கள்" கவிதைத் தொகுப்பில் அச்சுப் பதிப்பாகி உள்ளது. இளம் பராயத்திலிருந்தே கவிதைத் துறையில் ஈடுபாடு கொண்டு எழுதும் ஆற்றலை வெளிப்படுத்தி வந்தவர், பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வானொலியிலும் தனது கவிதைகளை வலம்வரச் செய்து மகிழ்வு கொண்டவர், கண்ணாடிப் பூக்கள் தொகுப்பின் மூலம் புகழ் விரியும் ஓர் இலக்கிய கர்த்தாவாக முன்னேறியுள்ளார். உதயன் முப்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிகழ்வில் மாணவர்களுக்கிடையே நடத்திய இலக்கிய ஆக்கத் தேர்வில் கவிதைப் போட்டியில் பங்கு கொண்டு பரிசுகளை வென்றுள்ளார்.



**சிறகொடிந்த பறவையாய்**<br>
**சிறை கிடக்கிறேன் நான்!**<br>
**சிரித்துப் பேசி என்னைச் சிரிக்க**<br>
**வைக்கப் பார்க்கிறாய் நீ!**<br>
**மனதின் ஆழம்வரை சென்று**<br>
**அமைதியின் உச்சத்தைத்**<br>
**தேடுகிறேன் நான்!**<br>
**கனவின் வேகத்தைத் தூண்டி**<br>
**துணிவின் துளியைத்**<br>
**துலக்குகிறாய் நீ!**<br>
**கல்லடிபட்ட மயிலாய் கால்கள்**<br>
**இழந்து தவிக்கிறேன் நான்!**<br>
**பல வர்ண சாயமிட்டு பறக்க**<br>
**வைக்கப் பார்க்கிறாய் நீ!**<br>
**மொழி இழந்த கிளியாய் நலிந்து**<br>
**கொண்டிருக்கிறேன் நான்!**<br>
**நம்பிக்கை ஒளி தந்து நடு**<br>
**வானில் மிளிர வைக்கிறாய் நீ!**

என்ற கவிதை சொல்லும் காரியங்கள், வாசகர்களாகிய எம்மைக் கற்பனை வானில் சிறகடிக்க வைக்கின்றன. "நான் – நீ", எனத் தலைப்பிட்டு எழு தப்பட்டுள்ள இந்தக் கவிதை தரும் தூண்டல் நான், நீ என இங்கே உலவு வோர் யார்? எனத் தேடச் சொல்லுகிறது. அத்தகைய தேடலில் தோன்றும் காட்சிக்குள் பலரும், பல வடிவில் வந்து முட்டி மோதுவதைக் காணுகின் றோம்.



இந்தக் கவிதைத் தொகுப்பை நிறைத்துள்ள ஐம்பத்து இரண்டு கவிதைகளும் இத்தனை இள வயதில் கவிஞர் வேதிகா பெற்றுயர்ந்த இலக்கிய அனுபவத்தின் எழுச்சியைக் காட்டுகின்றன.

தனிமையின் ஓவியமாய், துணையின் இலக்கணமாய், இனிமையின் பரவசமாய், கனிவான அவள் பார்வை, எதிர்பார்ப்பின் இமயத்தில் எதிர்நீச்சலை ஆரம்பித்தேன். எதிர்காலக் கனவுகளுடன் சங்கமித்தாள் அவள்! விதி தன்னை வென்று கனவு நனவாகிட வேண்டும் என்ற வேதிகாவின் கவிதை, கவிதையின் மகத்துவத்தையும் அவர் கற்றுக் கொண்ட வாழ்வின் அனுபவத்தையும் வெளிப்படுத்து கின்றது.

வளரும் கவிஞர் வேதிகாவை வளரும் காலங்கள் வாழ்த்தத் தவறாது. கல்வியின் பொருள் விளங்கிக் கவிதையின் சிறப்புக்காய் தன்னைக் கலைத்துறையில் பிரகாசிக்கச் செய்யும் வகை தேர்ந்த கற்றலின் வழி, இலக்கிய உலகில் இவர் நிலை சிறக்க வாழ்த்துகிறோம். இவர் படைத்த "கண்ணாடிப் பூக்கள்" மண்ணுக்கு வாசம் தரும் பூக்களாய் விண் ணோக்கிக் பூக்கும் கவிதை மலர்களே!

# அண்மைய போக்குகள்

## தமிழரின் கலையும் பண்பாடும் - ஒரு பார்வை-(6)

அறியாயான்

**கதாப்பிரசங்கம்**

தமிழர் பாரம்பரியங்களில், இசையையும், கதையையும் குழைத்து, பண்பாட்டைச் செழுமைப்படுத்தும் முகமாகவும், நற்பழக்க வழக்கங்களை போற்றுகின்ற வகையிலும், சமயத்தை வளர்க்கின்ற வகையிலும் 'கதாப்பிரசங்கம்' என்கின்ற புராண சரித்திர உபன்னியாசம் – பாடல் வழி கதை கூறுகின்ற ஒரு மரபு பேணப்பட்டது. அதனைச் செவிமடுக்க நிறையவே இரசிகர்கள், பக்தர்கள், இலக்கிய சுவைஞர்கள் திரளுகின்ற ஒரு போக்கு இருந்தது.


இத்தகைய கதாப்பிரசங்க முறைமை போன்ற ஒன்றிலிருந்தே, பழைய கால நாடக அரங்கம் உருவாகியதென்கின்ற ஒரு கருத்தும் உள்ளது.

கதாப்பிரசங்கத்தை நாட்டின் தமிழ்ப் பிரதேசத்தில் தொடக்கி வைத்தவர் ஆறுமுகநாவலர் என அறியக்கிடக்கின்றது. 31.12.1847 இல் வண்ணார் பண்ணை சிவன் கோவிலில் இது தொடக்கி வைக்கப்பட்டது. பிரசங்கங்களை முதன் மைப்படுத்துகின்ற மனோ நிலை அன்றைய ஆலய பரிபாலகர்களிடமிருந்தது. அந்தப் பணியை நல்லை முதலாவது குரு மகா சந்நிதானம் நல்லூரில் தொடர்ந்தார். நல்லூர் திருவிழாக் காலத்தில் 25 நாள்களும் இவரது பிரசங்கம் நல்லூர் தீர்த்தக் கேணி மண்டபத்தில் நிகழ்த்தப்படும். பெருந்திரளான பக்தர்களும் இலக்கிய ஆர்வலர்களும், கேணிப் படிக்கட்டில் சூழ்ந்திருந்து இரசிப்பர். நீண்ட பந்தலிலும் நடத்தப்பட்டு வந்தது.

பஜனையும் இடம்பெறும். பக்தர்கள் தம்மை மறந்து – தம்மையும் அதனுடன் இணைத்துக் கொள்வர். அவர்களது கதாப்பிரசங்கம் மற்றும் பஜனைகளில் நாம் நம்மை மறந்து இலயித்தமை இன்னும் பசுமையான அனுபவமாக உள்ளது.

வேறு ஆலயங்களில் திருமுருக கிருபானந்தவாரியார் போன்றவர்களும், இந்தியாவிலிருந்து வருகை தந்து, கதாப்பிரசங்கம் செய்தது உண்டு.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் வாரியாரது கதாப் பிரசங்கம் ஒன்றைப் கேட்கும் வாய்ப்புக்கிடைத்தது. வாரியாரைக் கௌரவிக்கும் முகமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் அமரர் மு.சிவசிதம்பரம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அதன் போது வாரியார் அவர்கள், இவர் எம். சிவசிதம்பரம், எம் ஒவ்வொருவரினதும் விருப்புக்குரிய சிவசிதம்பரம் என அவரது 'முதலெழுத்து' M என்பதை அப்படிச் சிலேடையாகச் சொல்லிச் சென்றார்.



இவர்களை அடியொற்றி கணேச சுந்தரம் போன்றவர்களும் கதாப் பிரசங்கம் நிகழ்த்தினர். இவையெல்லாம் பக்க வாத்திய சகிதம் நிகழ்த்தப்பட்டன. ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்களின் முற்பகுதியில், இணுவில் வடிவேற்சுவாமிகளும் கதாப்பிரசங்களில் ஈடுபாடு காட்டியதாக அறியக் கிடக்கின்றது.

இவ்வாறு பிரசங்கம் செய்பவர்கள் ஒழுக்க சீலர்களாகவும், சமயத் தத்துவங்களில் புலமையும், கற்றவற்றைச் சுவைபட விரித்துரைக்கும் சொல்வன்மை கொண்டவர்களாகவும், திகழ வேண்டும். சபையோரைத் தம் வசம் ஈர்க்கும் வகையில் சொல் வளம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

பலர் இத்தகைய பிரசங்கங்களின் போது, தம்மைப் பற்றி அதிகப் பிரசங்கித்தனம் செய்தமையால் அரங்குகளிலிருந்து காணாமற் போயினர்.

காலப் போக்கில் வேறு கோவில்களில் இதற்குப் போட்டியாகவோ, பக்தர்களைக் கவர்ந்து வருமானத்தை அதிகரிக்கும் நோக்கமாகவோ என்னவோ, கதாப்பிரசங்கம் பிடித்த இடங்களை, தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த பிரபல பாடகர்களின் பக்தி இசைக்கச்சேரியும், தொடர்ந்து வந்த காலங்களில் உள்ளூர் இசை வல்லுனர்களின் இசைக் கச்சேரியும் இடம் பெறத் தொடங்கின.

தமிழர்களுக் கென தனித்துவமான மொழி, கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகள் உள்ளன. அவை சரியான முறையிற் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது அண்மைய போக்கு இவற்றைச் செயற்படுத்த அரசினால் பிரதேச செயலகங்கள் தோறும் கலாசாரப் பேரவைகள் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவை, பிரதேசத்தின் அடையாளமான பண்பாடுகளை அழிய விடாது காப்பாற்றுவதற்கென பிரதேச செயலக ரீதியாக பண்பாட்டு விழாக்களை நடத்துவதாகக் கூறப்படுகின்றது.

தமிழிலும் இலக்கியத்திலும் ஆர்வமுள்ள இளைஞர்களை நிறைவேற்று உத்தியோகத்தர்களாகக் கொண்ட பிரதேச செயலகங்கள், ஓரளவு இதனை வெற்றிகரமானதாகவும், முன் மாதிரியானதாகவும் செயற்படுத்துகின்றன. சில, பல பதிவுகளை உள்ளடக்கிய மலர்களையும் அவை வெளியிடுகின்றன. பிரதேச சனசமூக நிலையங்கள், சமய நிறுவனங்கள், வழிபாட்டு ஸ்தலங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக, பல தரப்பினரது பங்கு பற்றலை அதிகரிப்பதன் ஊடாக, அதனை மேலும் அர்த்தமுள்ளதாக்கலாம்.

அல்லாமலும் கலையாக்கம் என்பது சமூகத்திலிருந்து தனிமைப் படுத்தப்பட்ட ஒரு செயல் முறையன்று. கலையானது சமூகத்தின் குறியீடு. சமூகத்தின் பண்பாட்டு மட்டமும், பண்பாட்டு அசைவியக்கமும் கலைகளால் வெளிப் படுத்தப்படும். யாழ்ப்பாண ஓவியக் கலை, ஆலயங்களுடன் இணைந்து வளர்க்கப்பட்டது. பிரதேச செயலகங்கள் இவற்றைப் பாதுகாக்கவும், பரவலடையச் செய்யவும், ஏற்ற வரன்முறையான ஒழுங்குகளை மேற்கொள்ளலும் அவசியம். கோவில் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சமூகத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். ஈழத்தின் கலை வரலாற்றில் எதிர் காலச் சந்ததியினரை உரிய முறையில் உருவாக்க வேண்டிய பொறுப்பைப் பல்கலைக்கழக சமூகம் தட்டிக் கழித்து விட முடியாது. வெறுமனே வருடத்தில் ஒரு விழா மூலம் பெரி தாக பிரதேச செயலகம் எதனையும் பெரிதாகச் சாதித்து விடவும் முடியாது.

நிறைவாக பிரதேச சன சமூக நிலையங்கள், ஆலயங்கள், பிரதேச அரச நிறு வனங்கள், அரச சார்பற்ற நிறுவனங் கள், கல்விச் சாலைகள், பல்கலைக் கழகம், பல் சமயம் சார் நிறுவனங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து, பல்வேறு துறை சார்ந்தவர்களி னதும் ஒன்றுபட்ட முயற்சியாலேயே எமது கலையும் பண்பாடும் புதிய ஒரு திசை நோக்கிப் பயணிக்க வழி காட்ட முடியும். அதனை ஒன்றி ணைக்கத் தக்க புறச் சூழலை உருவாக்கத்தக்க அரசியல், சமயம் கடந்த ஒரு ஆற்றல் மிக்க தலைமைத்துவம் கொண்ட ஒரு நிறுவனம் உருவாக்கப்பட வேண்டும்.



ஓவிய, சிற்பக் கலைகள் பற்றியும், அவற்றின் காலம்பற்றி யும், அவை வெளிப்படுத்தும் நயக்கத்தக்க விடயங்கள்பற்றியும், அந்தந்தப் பிரதேச படித்தோர் முதல் பாம ரர் வரை உணர்ந்து செயற்படுத்தக் கூடியதான நடவடிக்கைகளை பிரதேச செயலகங்கள் மேற்கொள்ள முன்வரவேண்டும். முன்னர் அவை சாத்தியமற்றதாயினும்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டு மூன்று தசாப்தங்கள் நிறைவுற்ற நிலையில், பல்கலைக் கழகத்துடன் இணைந்து இவை டும். அவை எமது கலை பண் பாடுகளை வளர்த்தெடுக்க வேண் டும்.

ஆற்ற வேண்டிய பணிகள் நிறையவே உள்ளன. ஆற்றல் மிக்கவர்களும் உள்ளனர். அவற்றை ஒருங்கிணைத்து முன்னெடுத்துச் செல்ல முடியாதவாறு, இலங்கை நாட்டின் மக்களது அரசியல் நிலமையும், பிரித்தாளும் தந்திரங்களும் தொடர்கின்றன. இவை - வெல்லப்படும் போது தமிழ் கலைகளும், பண் பாடுகளும் புத்தெழுச்சியுடன் மூச்சாக, வீச்சாக முன்னேறும். அதற்காகப் பிரார்த்திப் போம்.





கைதடியூர் வே.தபேந்திரன் ஆக்கிய யாழ்ப் பாண நினைவுகள் பாகம் 1 நூல் அறிமுக விழா அண்மையில் அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் இடம்பெற்றது. சபைத் தலைவரும் ஓய்வுநிலை விவசாயப் போதனாசிரியருமான வை.சுப்பிரமணி யம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அறிமுக உரையை யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ் வராவும் நயப்புரையை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் வ.வசந்தகுமார், சுழிபுரம் ஆறுமுக வித்தியாலய ஆசிரியர் கை.சர வணன் ஆகியோரும் நிகழ்த்தினர். (9)



எழுத்தாளர் விஜிதா ரகுநாதனால் எழுதப்பட்ட சாம்பல் மேடுகளில் மீழுகை காலம் கவிதை நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலர் எஸ் சிவஸ்ரீ தலைமையில் நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலையில் இடம்பெற்றது. வரவேற்புரையைத் தொடர்ந்து நூல் அறிமுக உரையை நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை அதிபர் ந.தேவராஜா வழங்கினார். அதனை அடுத்து மீன்பிடி போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, வர்த்தகவாணிப அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் நூலை வெளியிட்டு வைக்க முதல் பிரதியை வர்த்தகர் வி.கிருஷ்ணசிங்கம் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டுரை இடம்பெற்றது. அதன் தொடர்ச்சியாக நூல் நயப்புரையை எழுத்தாளர் சு.குணேஸ்வரன் நிகழ்த்த இறுதியாக நூலாசிரியர் விஜிதா ரகுநாதன் தமது ஏற்புரையையும் நன்றியுரையையும் வழங்கினார். (109)






# கலாசாரப் பெருவிழா

லக்ஸ்மன்

அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்பதை சிலப்பதிகாரம் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. நீதி தவறிவிட்டேன் என்பதைத் தெரிந்து கொண்ட பாண்டிய மன்னன் உயிர் துறந்தான். தமிழர்களுடைய கலாசாரம், பாரம்பரியம், பண்பாடுகள் எல்லாமே, நாம் ஒரு சிறந்த இனம் என்பதை எடுத்துக்காட்டியுள்ளன. பயிர்கள் வளர்வதற்கு இசை இன்றியமையாதது என்பதை வேளாண்துறை விஞ்ஞானிகள் தமது ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர். அதே போன்று எமது வளர்ச்சிக்கும் இசை உன்னத பங்களிப்பை வழங்குகிறது என எமது இலக்கியங்





களுக்கும் கலைகளுக்குமான தொடர்புகளை விவரித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, எமது மொழி கலாசாரத்தை இழந்து போனால் நாம் தமிழர்களாக இருக்கவே முடியாது. ஓடையிலே என் சாம்பல் கரையும் போதும், என் தமிழே சலசலத்து ஓட வேண்டும் என்ற துடிப்புடன் வாழ்ந்தவன் தமிழன், காணி நிலம் வேண்டும் என்றவன் பாரதி எனவும் குறிப்பிட்டு, இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலாசார விழாவில் இடம்பெற்ற ஒவ்வொரு நிகழ்வும் எமது மக்களின் உன்னத கலாசாரத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளதாகப் பெருமிதப்பட்டார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தேர்தல் காலம் என்றபோதும் அர சியல் குறித்த பேச்சைத் தவிர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த மண்ணில் வாழும் எமது மக்களையும் அவர்தம் கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதும் எதிர்காலத்திடம் அவற்றைக் கையளிப்பதும் எமது வரலாற்றுக் கடமை. மறைந்து கொண்டிருக்கும் பாரம்பரிய விளையாட்டுக்களை எமது பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். மாட்டுச்சவாரி என்பது எமது முக்கியத்துவம் மிக்க விளையாட்டு. அதில் பெயர்பெற்ற ஒரு விவசாயியைக் கௌரவித்தமை எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. மாட்டுச் சவாரிக்கான மாடு ஒன்றின் விலை ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்டது. ஒரு விவசாயி அந்த விலைக்கு கொள்வனவு செய்த மாடு போட்டியில் தோல்வியடைந்து விட்டால் அதை ரூபா ஐயாயிரத்துக்குக்கூட விற்க முடியாது எனக் கூறுகின்றனர். பெறுமதி மிக்க விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களுக்கு நாங்கள் பரிசுப் பொருளாக ஏதோ ஒரு சிறிய பொருளை வழங்கித் திருப்தி அடைகிறோம். இந்த நிலை மாறவேண்டும் என விழாவுக்குத் தலைமை வகித்த உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் வருத்தம் தெரிவித்தார். எமது பாரம்பரிய விளையாட்டுக்களில் கலந்து வெற்றியீட்டும் வீரர்களுக் குரிய பரிசில்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தனவாக இருக்க வேண் டும் என்பதை அவர் எடுத்துக்கூறினார்.

வலி.கிழக்கு கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் ஏழாலை முத்தமிழ் மன்ற மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 5 ஆம் திகதியன்று கலாசார விழாவை நடத்தின. எமது பிரதேசம் பெருமை மிக்க ஒன்று என்பதை, பிரதேச செயலகம் எம்முன்வைத்த ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கு ஊடாகவும் எடுத்துக் காட்டியுள்ளது. பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் இதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகள் வரவேற்கத் தக்கவை என ஆசியுரை வழங்கிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.





எமது கலாசாரம்தான் எமது மண்ணைத் தூக்கி நிறுத்துகிறது. அதனைப் பேண வேண்டிய பொறுப்பை பிரதேச செயலகம் முன்னெடுத்துள்ளதாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனும் உன்னதமான கலாசாரத்தின் சொந்தக்காரரான நாங்கள் இன்று எமது மொழியை மறந்து அந்நிய மொழிகளில் ஆர்வம் கொண்டவர்களாகவும், அவர்களது நாகரிக நடைமுறைகளைப் பின்பற்றுவோராகவும் மாறிக் கொண்டிருப்பதாகவும் வைத்திய கலாநிதி ஜெயக்குமார் விரக்தியுடன் குறிப்பிட, இன்று நாங்கள் போதைக் கலாசாரத்துக்கு மாறிக் கொண்டிருப்பதாக வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் பிரகாஷ் வருத்தம் தெரிவித்தார்.

விழாவையொட்டி இடம்பெற்ற நடனம் எல்லோரது கவனத்தையும் பாராட்டையும் பெற்றுக்கொண்டது. ஒரு சிறந்த நடனக் கலைஞர்கள் என்பதை அவர்கள் தங்களது முத்திரைகளினால் வெளிப்படுத்தினர். அறம் பிழைத்தது வில்லிசை அபாரம். இசையரங்கு ஒரு நல்ல இசை நிகழ்ச்சியைக்கேட்டு ரசிக்கக்கூடியதாக இருந்தது என பார்வையாளர்கள் தெரிவித்தனர். வில்லிசை இசைக் கச்சேரியில் உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர். இசை நாடகமாக அரிச்சந்திரன் மயான காண்டம் இடம்பெற்றது. இசை நாடகச் சக்கரவர்த்தி எனக் கூறப்படும் கலைஞர் வி.வி.வைரமுத்துவினால் முன்னர் மேடையேற்றப்பட்டு வந்த இந்த நாடகத்தை இன்றும் தொடர்ந்து மேடையேற்றிக் கொண்டிருக்கும் தைரிய நாதன் குழுவினரின் இசையுடன் கூடிய நடிப்பு நடிகமணி வைரமுத்துவையும் நினைவில் கொண்டு வருவது சிறப்பு. ஏழாலை மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்தும் நன்றாக அமைந்திருந்தது. ஏழாலை முத்தமிழ் மன்றம் கலாசார விழா சிறப்புடன் இடம்பெறக் கைகொடுத்துச் செயற்பட்டிருந்தது.

## முழு மதிநாள் கலை விழா -2015





வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாதாந்தாம் வலயங்களில் நடைபெறும் முழுமதி நாள் கலை விழா இம் மாதம் முதலாம் திகதி முல் லைத்தீவு கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், சிறப்பு அதிதிகளாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து.இராதாகிருஷ்ணன், வடமாகாண கல்வித் திணைக்கள அழகியல் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# நன்னயப் பொருள்

ஏ.வி.சுப்பிரமணியன்



ஆகாயத்தில் சந்திரன் விரைந்து செல்கிறான். ஒரு மேகப் படலம் சந்திரனை மறைத்து விடுகிறது. இந்தக் காட்சியைச் சாதாரணமாக நாம் எல்லோருமே அடிக்கடி பார்த்திருக்கிறோம். பார்த்ததைப் பார்த்தபடியே சொல்ல வேண்டிய நிலைமைகள் வாழ்க்கையில் தோன்றும் போது, இதை அப்படியே சில சொற்களால் சொல்லிவிட எவராலும் இயலும். இதற்கு அப்படி ஒரு சிறப்பான திறமை வேண்டியதில்லை.

கவிதை உள்ளம் படைத்தவன் இதே காட்சியைப் பார்க்கிறான். இரவு நேரத்தில் அழகிய தோற்றம் உடைய சந்திரன் மேகத்தால் தன்னையே மறைத்துக்கொண்டு எங்கோ, எதையோ, யாரையோ நோக்கி விரைந்து செல்வது அவன் உள்ளத்தில் பதிவாகி ஒரு கவிதைக் கருத்தாக வருகிறது. இது இரவுக்குறி பற்றுக் காத்திருக்கும் தனது காதலனை நோக்கி விரையும் தலைவியின் வடிவமல்லவா? ஊர்ப் பழியஞ்சி அவள் தனது முகத்தை மறைத்துக் கொண்டு போகிறாள் என்பதே அந்தக் கவிதை வடிவம்.

கண்டதைக் கண்ட படியே வர்ணிப்பது கவிதை ஆகாது. கவிஞனின் கற்பனை வர்ணத்தோடு கலந்து ஓர் எழிலுருவம் பெற்று வெளிவந்தால் அதனைக் கவிதை என்கிறோம்.

கவிதையைப் படித்துச் சுவைக்கும் இயல்புடையவர் பெரும்பாலும் நுண்ணிய அறிவு படைத்தோரே. இத்தகையோருக்கு இன்பம் பயக்கின்ற வகையில் கவிதை இயற்றுவதே கவிஞனின் சிறப்பு. சாதாரண அறிவு படைத்தோருக்கு ஓரளவு சுவையின்பம் கவிதையினின்றும் கிடைக்கவேண்டும் என்றாலும், நுண்ணறிவாளருக்கு இலக்கிய இன்பம் கிடைக்கும் வண்ணம் இயற்றப்படுவதே உயர்ந்த கவிதையாகிறது. கம்பனின் செய்யுள்களுக்கு பொருளை எடுத்துக்கூறிவிட்டால், கூட்டத்தில் உள்ள பாமரர்களும் அதைச் சுவைத்து இன்புறுவதை நாம் பார்க்கின்றோம். ஆனால், நுண்ணிய அறிவும், ஆழ்ந்த இலக்கிய அனுபவமும் பெற்றுள்ள கலைஞர்களுக்கு முடிவில்லாத இன்பம் தருகின்றான் என்பதே கம்பனின் தனிச்சிறப்பாகிறது.

கவிதையைப் படைக்கும் கவிஞரிடையே பெருமளவு தாரதம்மியம் காணப்படும். அதேபோல அதைச் சுவைக்கும் சுவைஞரிடையேயும் பெருமளவு தாரதம்மியம் இருப்பது உண்மையே. மிகச்சாதாரண நிலையில் உள்ளோர், அறிவு நுட்பம் அமையப்பெறாதவர், நுண்மாண் நுழைபுலம் படைத்தாரோடு சமத்துவம் பெற்றுவிட முடியுமா? தனது அரண்மனை வாயிலில் காத்திருக்கும் புலவர்களுக்கு, மலையமான் திருமுடிக்காரி என்ற பெருவள்ளல் எல்லோருக்கும் சமமாக ஒரு தொகையைக் கொடுத்தனுப்புக என்று ஆணையிட்டான். மற்றப் புலவர்கள் வள்ளல் அனுப்பிய பரிசிலைப் பெற்றுக்கொண்டு மகிழ்வுடன் சென்றனர். கபிலர் மட்டும் பரிசிலை வேலையாள் மூலமாகவே மன்னனுக்குத் திருப்பி அனுப்பினார். கூடவே ஒரு பாடலையும் இயற்றி அனுப்பி வைத்தார். அதில் பரிசில் மாக்களாகிய புலவர்கள் புரவலனை நாடி வருவதைக் குறிப்பிட்டு பின்னர், வரிசை அறிதலோ அரிதே பெரிதும் ஈதல் எளிதே என்ற பாடத்தைக் கற்பித்தார் மன்னனுக்கு. கவிஞரின் தராதரத்தையும், பாடல்களின் உயர்வு தாழ்வையும் மதிப்பிட்டு அறியும் திறமை புரவலனிடம் அமைந்திருக்க வேண்டும். அதனை நாடியே புலவர் அவனைச் சார்கின்றனர். பரிசிலும் பணமும் பெரிதல்ல. இதனால் பாட்டின் இறுதியில் இலக்கிய மதிப்பீட்டுக் கலையின் அடிப்படையான தத்துவத்தை மன்னருக்குப் போதிக்கின்றார்.

பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே.

வந்த புலவர்களில் அழியாக் கவிதைகளைப் பாடிய கபிலருக்கும், பெயர் தெரியாது மறைந்துபோன மற்றக் கவிராயர்களுக்கும் ஒரே பரிசிலைக் காணாது அளித்த மன்னன், அன்று புரக்கும் கலையில் பெரிய தோர் உண்மையைக் கற்றுக் கொண்டான்.

ஆகவேதான் அக்காலத்தில் நன்னயப்பொருளை நன்குணர்ந்து சுவைக்கும் திறன்படைத்த புரவலர்கள், அந்தப் பொருளைப் படைத்துத் தரும் கவிஞரைவிட்டு பிரியமனம் ஒப்பாமல், அவர்களை எப்படியேனும் தம் பக்கலில் இருத்திக் கொள்ளவே முயன்றனர். வருவோர்க்கு வரையாது வழங்கும் வள்ளல் பிரானாகிய அதியமானும் ஔவையாருக்குப் பரிசில் அளிக்காமல் நீட்டிக்க, ஔவையார் இதன் காரணத்தை அறிந்து, தம்முடன் வந்த புலவோர்க்கு, அதியமான் பரிசில் யானை கோட்டிடை வைத்த கவளம் போலக் கையகத் ததுவே, பொய்யாக் காதே என்று உறுதி கூறினார். பரிசிலைக் கொடுத்து விட்டால் புலவர் பெருமக்கள் தம்மை விட்டப் போய்விடுவர் என்று பரிசில் நீட்டித்த அதியமானும், நன்னயப்பொருளைக் கொள்ளும் திறன் படைத்த உணர்வுடையோனே.

இந்த உண்மையை நன்கறிந்த, உலகிலேயே முதன் முதலாகப் பொருள் நூல் வகுத்துத் தந்த தொல்காப்பியர், இத்தகைய நுண்ணிய மதிப்பீட்டுத்திறன் படைத்தவர்கள் உலகில் சிறுபான்மையோரே ஆவர். அவரை யன்றி மற்றோர்க்கு, இந்த நயப் பொருள் விளங்காது என்று சூத்திரம் இயற்றிவிட்டார்.

**கண்ணினும் செவியினும்**
**திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது**
**தெரியின்**
**நன்னயப்பொருள்கோள்**
**எண்ணருங் குரைத்தே** –

மெய்ப்பாட்டியல், சூ. 27

புலவர்களில் படைப்புத்திறன் மிக்கோர் தமது பாடல்களில் நன்னயப் பொருளை இழைத்துத் தந்த உணர்வுடை மாந்தர்க்குச் சிறப்பான இன்பம் தோற்றுவிப்பார்கள். இதைத் தருகின்ற கவிஞரும் இப்பொருளைக் கொள்கின்ற மதிப்பீட்டாளரும் எண்ணிக்கையில் மிகமிகச் சிலரே என்பதை நாம் அனுபவத்தில் அறிகிறோம். பொற்காலம் என்று (பின்னால்) வர்ணிக்கப்படுகின்ற சகாப்தத்தில், இத்தகையோரின் எண்ணிக்கை பெருகும். நயமுள்ள கவிதையைச் சுவைப்போரின் எண்ணிக்கை பெருகினால் உற்சாகமூட்டப்பெற்றுப் படைப்பாளரும் பெருமளவு பாடல்களை இயற்றித் தருவர்.

இத்தகைய பொற்காலம் தமிழ் நாட்டில் ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்குமுன்னர், சங்ககாலம் என்ற பெய ரில் பொலிந்தது. நூற்றுக்கணக்கான புலவர் பெருமக்கள் நன்னயப் பொருளைத் தரும் அழியாக் கவிதைகளைப்பாட ஆயிரக்கணக்கான சுவைஞர்கள் அவற்றைக் கற்றுத் தெரிந்து இன்புற்றார்கள். இந்தக் கட்டுரையில் இது காறும் நன்னயப் பொருளைக் குறித்தப் பேசினோம்.

> **தலைவியும், இப்பொழுது வளர்ந்து காதலிக்க ஏற்ற பருவம் எய்திவிட்டாள். தக்கதொரு இளைஞனைச் சந்திக்க, இருவருக்குமிடையில் காதல் பிறக்கிறது. பெற்றோருக்குத் தெரியாமல் இருவரும் மரமடர்ந்த சோலைகளில் சந்தித்து இன்புறுகிறார்கள்.**

இனி, சங்கப்பாட்டில் நன்னயப் பொருளமைந்த சில பகுதிகளைக் காணலாம்.

அகப்பொருள் பாடல்களில் சிற்சில இடங்களில் ஆண், பெண் உறவுகளைப் பற்றிய சில செய்திகளைச் வெளிப்படையாகச் சொல்வது தகாது. ரசக்குறைவு தோன்றிவிடும் என்ற சங்கடமான நிலை ஏற்படுகிறது. சுவையைப் பெருக்க, பாடலின் இதயமாகிய உரிப்பொருளை வலுவாக்க, இந்தச் செய்திகளை சொல்லத்தான் வேண்டும். உயர்ந்த கவிஞர்கள் இத்தகைய இடங்களில் சொல்லாமற் சொல்லிவிடும் திறத்தைக் காட்டி நயமேற்றி விடுவார்கள். தமது பாட்டிலே கவிஞர் தம் கூற்றாகக் கூறுமிடமே அகப்பொருட் பாடல்களில் இல்லை. கவிஞரின் மேற்சொன்ன திறன் மற்றப் பாத்திரங்களின் கூற்று வாயிலாக வெளிப்படுகிறது.

ஒரு தலைவி தனது தோழிகளுடன் மணலில் புன்னைக் காயைப் புதைத்து பின்னர் தேடி எடுக்கும் விளையாட்டை விளையாடும்பொழுது (மழை வந்ததாலோ வேறு இடையூறு ஏற்பட்டதாலோ), விளையாட்டைப் பாதியில் நிறுத்திவிட நேரிட்டது. மணலில் புதைந்த விதை முளைவிட்டு வளரத் தொடங்கியது. நாம் விதைத்த விதை என்ற அன்பினால் அவள் அதற்கு நெய்யும் பாலும் வார்த்து வளர்த்தாள். அவள் அன்பினால் ஏற்பட்ட சங்கடங்களையும் மீறி அது வளர்ந்து சில ஆண்டுகளில் நல்ல நிழல்மரமாகிவிட்டது. தலைவியின் தாய் அதனைப் பார்க்கும் போதெல்லாம், இது உன் தங்கை; உன்னைவிடச் சிறந்தது இது என்று விளையாட்டாகக் கூறுவாள்.

தலைவியும், இப்பொழுது வளர்ந்து காதலிக்க ஏற்ற பருவம் எய்திவிட்டாள். தக்க தொரு இளைஞனை சந்திக்க இருவருக்குமிடையில் காதல் பிறக்கிறது. பெற்றோருக்குத் தெரியாமல் இருவரும் மரமடர்ந்த சோலைகளில் சந்தித்து இன்புறுகிறார்கள்.

ஒரு நாள், தலைவன் பகலில் ஒரு மரத்தின் அடியில் தலைவியைச் சந்திக்கின்றான். தோழி தலைவனிடம் தலைவி வித்தை வைத்து விளையாடிய கதையைச் சொல்கிறாள். அப்படித் தலைவி வளர்த்த மரம் இதுவேதான். இது தலைவியின் குணச் சிறப்பு வாய்ந்த தங்கையல்லவா? என்று கூறிச் சிறிது நிறுத்திப் பின் சொல்வாள்: கடற்கரைத் தலைவனே! இந்த மரத்தின் கீழ் உம்மோடு நகைவிளையாட்டை விளையாடத் தலைவி நாணுகின்றாள். உமக்கு அவள்மீது அன்பிருந்தால், இதோ எத்தனையோ மரங்கள் உள்ளனவே, வேறோர் மர நிழலுக்குச் செல்லலாமே?

மரமாக இருப்பினும், தங்கையாக அதனைக் கருதத் தொடங்கியபின், அதற்கு முன்னதாக காதலர்கள் மனம் போல் பழகமுடியுமா? நுண்ணிய அறிவு படைத்தோர்க்கு இதை விளக்கவேண்டிய தேவை இல்லை; மற்றோர்க்கு விளக்கியும் பயனில்லை. இதனை முழுவதும் வெளிப்படையாகக் கூறாது இலக்கிய முறைப்படி கரந்து வெளியிடும் சிறப்பைப் பாட்டிலே பாருங்கள்.

**விளையாடு ஆயமொடு வெண்**
**மணல் அழுத்தி**
**மறந்தனம்; துறந்த காழ் முளை**
**அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்தினிது**
**வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தது நுவ்வை**
**ஆகுமென்று**
**அன்னை கூறினள் புன்னையது**
**சிறப்பே**
**அம்ம நாணுதும் நும்மொடு**
**நகையே**
**...நிறைபடு நீழல் பிறவுமாருளவே.**

காதலர் உறவாடும்பொழுது வேறு யாராயினும் அருகே இருத்தல் கூடாது. இந்த விதிக்குத் தோழியும் விலக்கல்ல. தோழியின் அறிவு, சூழ்ச்சித் திறன், பேரன்பு இவை காரணமாகத் தலைவன் தலைவி திருமணமே நடக்கின்றது என்று கூறிவிடலாம். ஆயினும், அவளும் காதலர் பேசிப் பழகும்பொழுது அருகே இருக்க முடியுமோ? ஒரு தலைவனைக் குறித்த இடத்துக்கு வரச்சொல்லி அவனிடம் தோழி சொல்லுவாள்; என் மரப்பாவையைக் கடல் மணற் பரப்பில் கிடத்திவிட்டு, உன்னுடன் சொல்லிப் போக வந்தேன். தலைவியோடு நேரம் தெரியாமல் பேசிக்கொண்டிருக்காதே! நீயாகவே உரிய நேரத்தில் அவளுக்கு விடைகொடுத்தனுப்பிவிடு என்று எச்சரிக்கிறாள். தலைவி நெருங்குவதைத் தலைவன் உணர்கிறான். ஆனால், இந்தத் தோழி விலகிப் போக மாட்டாளோ? எவ்வளவு தான் நல்லவளாக இருந்தாலும், சந்தர்ப்பத்தைப் புரிந்து கொண்டு போய்விட வேண்டாமா? ஆனால் எப்படிச் சொல்வது அவளிடம்? திணறுகிறான் தலைவன். அவன் காதில் பால் வார்த்ததுபோல் தோழி பேசுகிறாள். நான் இங்கேயே இருந்து கொண்டிருக்க முடியாது. என் பாவையை நாரை மிதித்துவிடும்; நான் போகிறேன் என்று விரைந்து செல்கிறாள். ஆகா! என்னே தோழியின் மனவியலறிவு! என்று காதலர் வியந்து பாராட்டி இருக்க வேண்டும் தோழியை. பாட்டைப் பார்க்கலாமே!

நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி
நின்குறி வந்ததென், இயல்தேர்க்
கொண்க!
செல்கம், செலவியங் கொண்மோ
அல்கலும் ஆரல் அருந்த வயிற்ற
நாரை மிதிக்கும் என்மகள் நுதலே!

ஆரல் மீனை அளவின்றிப் புசித்த மயக்கத்தில் நாரை என்(பாவை) மகளின் நெற்றியை மிதித்துவிடும். நான் போகவேண்டும், உடனே என்று கூறும் தோழியின் நன்னயப் பொருளை, உணர்வுடை மாந்தரே சுவைக்க முடியும்.

படைப்புக் கலையில் சிறந்த கவிஞனும், மதிப்பீட்டுக் கலையில் தேர்ந்த சுவைஞனும் சேர்ந்து விட்டால் எத்தனை கோடி இன்பம்! இத்தகைய சேர்க்கையைக் காண்பது அருமையிலும் அருமையே. ஆயின் இந்தச் சேர்க்கை சேர்ந்துவிட்டால் இந்திரர் அமிழ்தம் மாந்தர் உலகில் கிடைத்தது போலாம். இருவரும் சேர்ந்து விட்டால் மெய்யாகவே மண்ணில் தெரியுது வானம் என்றே கூறிவிடலாம். கவிஞன் தரும் நன்னயப் பொருளைச் சுவைஞன் அருந்திச் சுவைக்கும் இன்பத்துக்கு ஈடு இறையின்பமே; மண்ணில் அதற்கு ஈடு கிடையாது.

> இரவு நேரத்தில் அழகிய வடிவம் உடைய சந்திரன் மேகத்தால் தன்னையே மறைத்துக்கொண்டு எங்கோ, எதையோ, யாரையோ நோக்கி விரைந்து செல்வது அவன் உள்ளத் தில் பதிவாகி ஒரு கவிதைக் கருத்தாக வருகிறது.

# யாழ்ப்பாண மக்களின் உணவுப் பழக்கவழக்கம்

எஸ்.சிவலிங்கராஜா

ஒரு பிரதேச மக்களின் பண்பாட்டுக் கோலங்களில் உணவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பது எமது இலக்கிய மரபு. இவ்வாறான பல தொடர்களை எமது இலக் கியப் பரப்பிலே தரிசிக்கலாம். உணவின் முக்கியத்துவம் உலகப் பொதுவானது.

யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் உணவுப் பழக்கங்களுக்கு அடிப்படையாக அமைவது புவியியல் சார் நிலவியல்பே எனலாம். பெரும் பாலும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பயி ரிடக் கூடிய நெல், சாமை, தினை, குரக்கன், வரகு, எள், பயறு, உழுந்து முதலிய தானிய வகைகளோடு, கிழங்கு வகைகளும் பனம் பண்டங்களும் மீன், இறைச்சி வகைகளும் இந்தப் பிரதேச மக்களின் உணவு வகைகள் எனலாம்.



**பனை உணவுகள்**

குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வாழ்வியலோடு அண்மித்த முக்கிய உண வாக அமைந்தது பனம் பண்டங்களே என லாம். இந்தப் பிரதேச மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ததில் பனம் பண் டங்களுக்குப் பிரதான பங்குண்டு.

19ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்தில் பனங்காய்ப் பாரதம் என்ற பெயரில் ஓர் இலக்கியம் தோன்றியதையும் இங்கு சுட்டிக் காட்டலாம். சமூகத்தின் சகல மட்டங்களி லும் பனம் பண்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருந்தது.

யாழ்ப்பாணத்திலே 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்ட சீதன முதுச உறுதி களில் குறிப்பிட்டளவு பனங்காணி(பனை அடைப்பு) வழங்கப்பட்டமையைக் கண்டு கொள்ள முடிகின்றது. குடும்பத்தின் வாழ் வாதாரத்தில் பனை வகித்த பங்கையே இந்தக் காணியுறுதிகள் புலப்படுத்துகின்றன. பனை யின் பயன்பாடு பற்றி யாழ்ப்பாணத்துப் புலவர்களும், வரகவிகளும் விதந்து பாடி யமை அதன் பயன்பாட்டு முக்கியத்துவத்தை விளக்கும் பண்பாட்டு வெளிப்பாடே எனலாம். வாழ்வுச் சுவடுகள் என்னும் வாழ்க்கை வர லாற்று நூலில் இடம்பெறும் பின்வரும் பகுதி பனம் பண்டங்களில் ஒன்றான பனாட்டின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.

வசதி படைத்தோர், வசதி குறைந்தோர் என்ற பாகுபாடு இன்றி அந்தக் காலத்தில் எல் லோரும் பனம் பழங்களைப் பொறுக்கிச் சேர்த்துப் பனாட்டுச் செய்வர். பனாட்டுத் தட் டுக்களை வடிவாக மடித்துக் கூடைகளில் அடுக்கி(பனையோலையாற் செய்யப்பட்ட கூடை இதனைத் தொக்கடி என்பர்) வீட்டில் அடுப்பு எரிக்கும் இடத்தின் மேல் இதற்கென ஏற்கனவே இருந்த பரண்களில் புகை பிடித்துப் பனாட்டுப் பழுதடையாதிருப்பதற்காக அவற்றை அடுக்கி வைப்பர்.

இந்தக் கூற்று பனாட்டின் முக்கியத்துவத்தை மாத்திரம் பேசாமல், உணவுப்பொருள்களைப் பழுதடையாது பாதுகாக்கும் பண்பாட்டு முறைமையையும் பேசுகின்றமையை அவ தானிக்க முடிகின்றது. மாரி காலத்திற்குரிய வற்றைக் கோடை காலத்திலேயே சேகரித்துப் பாதுகாக்கும் முறைமையும் எமது பண்பாட் டிலே முக்கிய இடம் பெற்றிருந்தது. வற்றல், கருவாடு, வடகம் முதலியவை இன்றும் வழக் கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பனையின் முக்கியத்துவம் பற்றிய பலசெந் நெறி இலக்கியங்களும் இந்தப் பிரதேசத்திலே தோன்றியுள்ளன. உதாரணமாகப் பனங் காய்ப்பாரதம், தால விலாசம், பனைப்பாட்டு, பனைநூறு முதலானவற்றைக் குறிப்பிடலாம். பனம்பழச் சாற்றைக் களி என்று குறிப் பிடுவர். பனையின் பழத்தைச் சாப்பிடுவதற் குப் பழப் புளியையும், காடியையும் பயன் படுத்துவர். இது பற்றிக் காதலியாற்றுப்படை பின்வருமாறு கூறும்:

**காடியிற் தோய்த்த**
**கனபனங்**
**கொட்டையைத்**
**தாயர் தங்கையிற்**
**தாவினர் வாங்கி**
**வண்டியும் சொக்கும்**
**பனங்களி புரள**
**வண்டினந் தேனை**
**உண்டல் போல**
**பனங்காய்க் களியுடன்**
**சாமைமாக் குழைத்து**
**வனைபந்தினைப் போல்**
**நெய்யிற் போட்டுத்**
**தட்டுத் தட்டாய்ச்**
**சுட்டுமே லெடுக்கும்**
**கமழ்தரு செம்பனங்காய்**
**பணியாரமும்**

பனம் பழத்தின் களியை உண் பதோடு பனங்களியிலே பல காரம் (பணியாரம்) செய் வதும் வழக்கம். பனங்காய்ப் பணியாரம், பனங்காய்ப் பிட்டு என்பன குறிப்பிடத் தக்கவை. பனங்களியைச் சாப் பிட்டால் நன்றாக மலங் கழியும் என்று கூறுவார்கள். இது பற்றியும் யாழ்ப்பாணத்துக் கவிஞர் ஒருவர் பாடியுள் ளார். அந்தப்பாடலின் ஒரு பகுதி(நினைவில் உள்ளது) பின்வருமாறு:

**ஆடி ஆவணி ஆகுமாதங்களிற்**
**காடி தோய்த்த கனபனங்காய்களை**
**நாடி நாடி நலம் பெற உண்பவர்**
**ஓடி ஓடி ஒதுக்கினில் குந்துவர்**

பனம் பழத்தில் இருந்து தயாரிக்கப்படும் பனாட்டு ஒருகாலத்திலே யாழ்ப்பாணப் பிரதேச மக் களின் பிரதான உணவாக இருந்தமை குறிப் பிடத்தக்கது. சாதாரண பனாட்டு, பாணிப் பனாட்டு என இரு வகையான பனாட்டுக்கள் பயன்பாட்டில் இருந்தன.

பனம் பழத்து விதையில் பாத்தி போட்டுப் பனங்கிழங்கை அறுவடை செய்வர். நவாலி யூர் சோமசுந்தரப்புலவரின் பனம் பாத்தி பறித்திடுவோம் என்ற பாடல் ஒரு காலத்திலே புகழ்பெற்ற பாடலாக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கது. பனங்கிழங்கை அவித்துக் கிழித்துப் புழுக்கொடியல் செய்வர். பனங் கிழங்கைப் பச்சையாகக் கிழித் துக் காய விட்டு ஒடியல் ஆக்குவர். ஒடியல் மாவிலே பிட்டு, கூழ் முதலியவற்றைத் தயா ரிப்பர். கோதுமைமாவின்வரு கைக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே ஒடியல் மா பெருமள வில் பயன்படுத்தப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது.

**பனையில் இருந்து பெற்ற உணவு வகைகள் பலவற்றை இன்று நாம் இழந்துவிட்டோம். நாம் ஏலவே சுட்டிக் காட்டியமை போன்று இவற்றின் இழப்புக்கு அல்லது மறைவுக்கு நமது சமூக பொருளாதார, அரசியல் மாற்றங்களே காரணம் எனலாம்.**



பனம் பண்டங்களைப் பட்டியலிட்டுக் காட்டுவது எமது நோக்கமன்று. ஆனால் பனையில் இருந்து பெற்ற உணவு வகைகள் பலவற்றை இன்று நாம் இழந்துவிட்டோம். நாம் ஏலவே சுட்டிக் காட்டியது போன்று இவற்றின் இழப் புக்கு அல்லது மறைவுக்கு நமது சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களே காரணம் எனலாம். இன்றைய இளந் தலை முறையினரில் பலர் ஒடியற் பிட்டு, பாணிப்பனாட்டு, கல்லக்காரம்(பனங்கற்கண்டு, பனை வெல்லம்), கருப்பணி(பதநீர்), ஒடியற்கூழ் முதலானவற்றைக் கண்டிருக்கக்கூட மாட்டார்கள். யாழ்ப்பாணத்தின் சில கிராமங்களில் இன்றும் இவை பயன்பாட்டில் உள்ளதையும் குறிப்பிட வேண்டும். ஆனால் பனங்கட்டி இன்றும் சாதாரண மாக பயன் பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஒடியற்கூழ்**

யாழ்ப்பாணப் பாரம்பரிய உணவுகளிலே ஒடியற் கூழுக்குத் தனித்துவமானதோர் முக்கியத்துவம் உண்டு. ஒரு காலத்தில் ஏழைகளின் பிரதான உணவாக இருந்த ஒடியற்கூழ், இன்று அதிக செலவில் தயாரிக்கும் பண்பாட்டுப் பேணுகையின் அடையாளமாக அமைவதையும் அவதானிக்க முடிகின்றது. புலம்பெயர் தமிழர்களிடையேயும் இந்த ஒடியற்கூழ் பாரம்பரியம் வழங்கி வருவ தாகவும் கூறப்படுகின்றது.

ஒடியற்கூழிலும் மச்சக் கூழ்(மாமிசம்), சைவக்கூழ் (மரக்கறி) என இருவகை உண்டு. பல்வேறு பண் டங்களையும் போட்டுக் காய்ச்சுவதால் ஒடியற்கூழ் ஒருவகை சூப் தன்மையைக் கொண்டது எனலாம். ஒடியற் கூழ் பற்றி யாழ்ப்பாணத்து இலக்கியங்கள் நிறையவே பேசுகின்றன. வகை மாதிரிக்கு ஒன்றைக் குறிப்பிடலாம்.

**அல்லலுற்றுக் கண்டிக் கப்பால்போய்**
**நிவித்திக் கொல்லைக்குப் போயலுப்புக்**
**கொண்டதனால் கல்ல டியான் வண்டாரும்**
**மாலையணி மற்புயச் சுப்பையனுடன்**
**கொண்டாடி னான் ஒடியற்கூழ்**

மேற்காட்டிய பாடல் ஆசுகவி கல்லடி வேலுப் பிள் ளையால் பாடப்பட்டது. ஒடியற்கூழ் உடல் அலுப்பை மாற்றும் என்ற நம்பிக்கை முதியவர்களிடம் இன்றும் உண்டு.

(தொடரும்)